உ

கணபதி துணை

திருவுந்தியார்

திருக்களிற்றுப்படியார்

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி. நாகலிங்கமுதலியார்

பதிப்பித்தது

மூன்றாம்பதிப்பு

சென்னை 'செங்குந்தன்' அச்சுக்கூடம்

துன்மதி௵ சித்திரை௴

1921

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவியலூர் - உய்யவந்ததேவநாயனர்

அருளிச்செய்த

திருவுந்தியார்.

இதில் முற்பட்ட கடவுளாகிய பரமாசாரியனை அருளிச்செய்கின்றார்.

கலித்தாழிசை.

அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததேன் றுந்தீபற
தானாகத் தந்ததேன் றுந்தீபற.

(இதன்பொருள்.) அகளமாய் யாரும் அறிவு அரிது அப்பொருள் சகளமாய் வந்ததென்று உந்தீபற - அநாதியே நிர்மலமாய்த் தன்னைக் கூடினவர்களாலும் கூடாதவர்களாலும் அறிதற்கரிய பரிபூரணமான அந்தப் பெரும்பொருள், நம்பொருட்டால் ஒரு திருமேனிகொண்டு எழுந்தருளிவந்தது ;—தானாகத் தந்ததென்று உந்தீபற - இப்படி எழுந்தருளிவந்த அந்தப்பொருள் தீக்ஷையினாலே சஞ்சிதத்தையும் ஒழித்து, பிராரத்தம் புசிக்கச்செய்து, அதிலழுந்தாதபடியுங் காட்டி, ஆகாமிய மேறாதபடி நிலையிலே நிறுத்தி, மாயாபடலத்தையும் உரித்து, மூலமாகிய நிகளத்தையும் விடுவித்து, அருளாகிய வமிர்தத்தைப் புசிப்பித்து, தன்னுடைய திருவடியிலே கூட்டி வேறறநிற்கத்தந்தது என்க. (க)

இனி அநாதியே கூடிப்போந்த பிரபஞ்சவாதனையைக் கூடாதபடி இந்தப் பொருளிலே அனவரதமும் வாதனைப்படு முறைமையை அருளிச்செய்கின்றார்.

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தேன்பேணே யுந்தீபற
வொருபொரு ளாலேயேன் றுந்தீபற.

(இ-ள்.) பழக்கம் தவிரப் பழகுவதன்றி உழப்புவது என் பெணே உந்தீபற - (உபாயகுருவாலே இரக்ஷிக்கப்பட்டவர்களுக்குப் பிராரத்த காரணமாயதேகம் நிற்கையால் அநாதிகாலந்தொடங்கி இந்திரியாதிகளுடன் கூடிவருகிற வாதனையைவிடுதற்கு அரிதாயிருக்கும் ; அதென் போலவெனின்? பிறவிக் குருடனாய்த் திரிந்தவனுக்குக் கடாக்ஷத் தாலே கண் விழித்தாலும், அநேககாலம் அந்தகாராதிவாதனை பண்ணிப்போந்ததால் மருட்சியாய் வழியைக் குழியென்று சந்தேகித்தும்

மூன்வந்தாரையாவரெனக் கேட்டும் நிற்பன். அதுபோலப்) பிராரத்தத்தாலே இந்திரியாதிவிடயங்கள் வந்தடுத்தகாலத்தில் இவற்றி னேக்கியத்தாலே ஜநநங்கூடாநிற்கும்; இதுகூடாதபடி பிராரத்தமான கன்மம் அனுபவிக்கும்போதே அவற்றி னைத்துண்ணுமற் கூடுகிற உபாயத்தைத் திருவருள் கண்ணுகக்கண்டு, இப்படிக்காட்டுகிற கண்ணுன திருவருளிலே வாதனைபண்ணுவதொழிந்து, பேய்த்தேர்போல் நிலையில்லாத பிரபஞ்சத்தை மெய்யெனக்கருதிப்பெறும்பேறென் னெஞ்சமே!—ஒருபொருளாலேயென்று உந்தீபற - ஒப்பில்லாதபொருள்கண்ணுக அந்தப்பொருளுடனே வாதனைபண்ணிநில் என்க.

இதில் நெஞ்சத்தைப் பெண்ணென்றதேதெனில், தன்னிடத்தில் நாயகரான தம்பிரானுர் அநாதியாயிருக்க அவருடைய திருவடியைப்பேணுமல், ஐம்புலவேடர் வசத்திலொழுகி நாயகரால் முனியப்படு மிக்கதுயரமாகிய நரக சுவர்க்கங்களிலே உழன்று அழிவில்லாத சுகத்தை யனுபவிக்கப்பெருது போக்குவாருடனே திரிகையால், தன்னுடைய நெஞ்சத்தைப்பார்த்து என் பெண்ணே தகாதவற்றிற் குட்படுகின்ருயெனப் பேதமையதனுல் நெஞ்சத்தைப் பெண்ணெனக்கூறியது. (உ)

மேலிந்தவுபாயங்கூடினவர்களுக்கு ஜநநமரணங்கூடாதென்றருளிச்செய்கின்ருர்.

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாராரோன் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையேன் றுந்தீபற.

(இ-ள்.) கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர் பிண்டத்தில் வாராரென்று உந்தீபற - தம்முடைய பாக்கியத்தாலே தமக்குப் பிராணனுனசிவன் கோசரமாக, இப்படி ஆசாரியராக வெழுந்தருளியவரைக் கொண்டே தீக்ஷையாற் சஞ்சிதமான கன்மத்தையும்போக்கி, தேகத்துடனே பிராரத்த கன்மத்தையும்போக்கி, அவர்நிறுத்தின வருட்கண்ணுலே ஆகாமியத்தையும்போக்கி இப்படி மூன்றுகன்மத்தையு முடித்துத்தீர்த்த ஆசாரியர் கைப்பட்டுநின்றவர்கள், ஒருகாலுந் தேகவாதனையின்வழி நில்லார்கள்;—பிறப்பு இறப்பு இல்லையென்று உந்தீபற - ஆகையாலே கன்மங்கூடாதபடி ஆசாரியர்கடாக்ஷத்தாலே சிவனது திருவடியிலே நின்றவர்கட்கு ஒருகாலத்திலும் ஜநநமரணமில்லை என்க. (ங)

இந்நிலையிலேநின்று சிவனை அனுபவித்தலாலுண்டானசுகம் வாக்கால் உரைக்க வாராதென்று அருளிச்செய்கின்ருர்.

எங்ங னிருந்ததேன் றேவ்வண்ணஞ் சோல்லுகே
னங்ங னிருந்ததேன் றுந்தீபற
வறியு மறிவதன் றுந்தீபற.

(இ-ள்.) எங்ஙன் இருந்ததென்று எவ்வண்ணஞ் சொல்லுகேன் அங்ஙன் இருந்ததென்று உந்தீபற - தன்னுடையநிலையுஞ் சிவசொரூபத்தன்மையும் இந்தச்சிவரூபங் கண்ணுகவே அறிந்து, இந்தச்சிவரூபத்துடனே வேறறநின்றனுபவிக்கத்தக்க ஐக்கியமுண்டானபோது, அதனுல் விளைந்த பரமசுகத்தை வாக்கால் உரைக்க எண்ணுமளவில், அனுபோகமானது உரைக்கப்படாதாகையாலும், மனவாக்குக்காயங்கள் மாயாவி

கற்பமாகையால் இவற்றுக்கு அதீதமாயிருக்கையாலும், இப்பொருட்கு ஓரொப்பில்லாதொழிகையாலும் இப்படியிருந்ததென்று எப்படி உவமித்துச்சொல்லுவேன் ; ஒருவனுக்குக் கன்மந் துலைபோலொத்து, மலபரிபாகமும் பிறந்து, தேசிகனுடைய திருவடியைப்பெற்றுச் சிவசொரூபத்தையுமுணர்ந்து இரண்டறக்கூடிப் பரமானந்தமும் விளைந்து, அந்தப் பரமசுகத்திலே அழுந்தினகாலத்து அவனுக்கு எப்படியிருந்ததோ அப்படியே யென்னும தொழிந்து, இன்னபடியென்று அளவுபடுத்தி உரைக்குமதன்று. ஆதலால் அப்படியேயிருந்தது.— அறியும் அறிவதன்று உந்தீபற - அப்படியிருந்த பொருளை ஆன்மஞானத்தால் அறிந்து கூடத்தக்கதன்று என்க. (௪)

இப்படிப் படர்க்கையாய்நின்ற சொரூபந்தானே, அநாதியே நமக்குத் தன்மையுமாய் முன்னிலையுமாய், கன்மவொப்பும் மலபரிபாகமும் பிறந்தபின்பு ஆசாரியனுமாய் வந்ததென்று அருளிச்செய்கின்றார்.

ஏகனு மாகி யநேகனு மானவ
ஞதனு மாஞனேன் றுந்தீபற
நம்மையே யாண்டானேன் றுந்தீபற.

(இ-ள்.) ஏகனுமாகி அநேகனுமானவன் நாதனுமாஞனென்று உந்தீபற - இப்படிப்பட்ட பொருளாயுள்ளவனே அநாதியே ஆன்மாவைக் கூடிப் பிரிதற்கரியஞகையாலே, ஒன்றென்னும் படியுமாய், யாம்செய்த கன்மத்துக்கீடாக உபகரிக்கவேண்டி, அவன் அவள் அதுவென்று பலவாய் நிற்கத்தக்கவனுமாய், இப்படிநின்று கன்மத்தையுந் தொலைப்பித்து மலத்தையும் பக்குவமாக்கின இந்த அவதாரத்திலே நமக்கு ஆசாரியனுமாய் எழுந்தருளிவந்தான்.— நம்மையே ஆண்டானென்று உந்தீபற - இப்படி எழுந்தருளிவந்து அநாதியே தொடங்கி இன்றளவுந் திருவருள் கிடையாமல் நரகத்திலே யுழைத்த நம்மையே, காருண்ணியத்தின்மிகுதியாலே பெறுதற்கரிய திருவடியைத்தந்து அடிமைகொண்டான் என்க.
ஏகாரம் இழிவின்கண்வந்தது. (ரு)

இப்படி எழுந்தருளிவந்து அடிமை கொண்டபோதே, தன் பாரங்கெட்டுச் சர்வமுந் தம்பிரானுர்க்கே பாரமாமுறைமையை அருளிச்செய்கின்றார்.

நஞ்சேய லற்றிந்த நாமற்ற பின்ஞதன்
றன்சேய ருனேயேன் றுந்தீபற
தன்ணையே தந்தானேன் றுந்தீபற.

(இ-ள்.) நம்செயல் அற்று இந்த நாம் அற்றபின் நாதன் தன்செயருனேயென்று உந்தீபற - சர்வத்தையுந் தம்பிராஞர் கூடிநின்று கூட்டுகைசெய்த இந்த முறைமையை அறியாமல், தன்ஞலே செய்யப்பட்டதென்று கருதும் ஆன்மசுபாவமும் அருளாலே விட்டுநீங்கி, இப்படி நீங்கினேமென்கிற தன்னையும் அருளிலே கொடுத்துத் தானும் அருளேயாய அப்பொழுதே கர்த்தா இவனைக்கிரகித்துக்கொண்டு, இவன் செயலெல்லாந் தன்செயலேயாக்கி, இவனுந்தாஞகவே நிற்பன் ;—தன்னையே தந்தானென்று உந்தீபற - இப்படிக்கூடி, ஒருவன்கைம்மாறு செய்யத் தக்கதாகத் தன்னையொழிந்த பொருளிலே வேண்டுவது கொடுக்கை

யன்றி, தன்னையே தந்தானொருவனுக்குச் சிவனும் ஒருபதங்களைக் கொடாமற் கரையற்ற பலமாக அவனைப்போலத் தன்னையும் அவனுக்கே கொடுப்பான் என்க. (சு)

இப்படிப்பெற்ற பொருளுடனே ஏகபாவம் பிறந்து ஒரு நீர்மையாய் நிற்கு முபாயம் எப்படி யென்று கேட்ட மாணுக்கனை நோக்கி மேல் அருளிச்செய்கின்றார்.

உள்ள முருகி லுடனுவ ரல்லது
தேள்ள வரியரோன் றுந்தீபற
சிற்பரச் செல்வரோன் றுந்தீபற.

(இ-ள்.) உள்ளம் உருகில் உடனுவர் அல்லது தெள்ள அரியரொன்று உந்தீபற - ஸ்திரீகள் தங்களுக்கு உரிய புருஷர்களிடத்துண்டாகிய தலையன்பு இடையன்பு கடையன்பென்னு மூவகை ஆசைமிகுதிக்கொப்பாக, நம்பொருட்டுத் திருமேனிகொண்டு எழுந்தருளிவந்த தம்பிரானார் தமக்குத் திருநாமமாகிய பஞ்சாக்ஷரத்தி னுண்மையை ஒருகால் அருளிச்செய்யக் கேட்டும், உள்ளபடிகாட்டக் கண்டும், அந்தச்சொரூபம் அநாதியே தம்மிடத்திலே கூடிநிற்கிற முறைமையையுணர்த்தி அவர் கூட்டு முறைமைகளிலே கூட்டக் கூடியும், இப்படி மூன்றுவகையுங்கண்ட சீவர்கள் நிருவிகாரிகளாய் (அக்கினிகலந்த மெழுகுபோல்) உருகிப் பேரன்புகூர்ந்து கரையழிந்திருந்தகாலத்து (குளிகையாலே, காளிதமறப் பேதிக்கப்பட்ட செம்பிலேயுள்ள மாற்றெழுந்திருந்து செம்பென்னும் பெயர்கெட்டுப் பொன்னென்னும் பெயர்பெற்றாற்போல) ஆன்மசொரூபமறைந்து சிவசொரூபமேயாய்ச் சிவனென நிற்பர். இப்படிக் கூடுகையொழிந்து தம்முடையபோதத்தால் ஆராய்ந்து கண்டு கூடுதற்கரியர்.—சிற்பரச் செல்வரொன்று உந்தீபற - இப்படித் தஞ்செயல்கூடாதே கூடினவர்களே மேலான ஞானைசுவரியத்தை யுடையவர்கள் என்க. (எ)

இந்நிலை கூடாதவளவில் வேறேயும் ஒருபாயமுண்டென் றருளிச்செய்கின்றார்.

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதேன் றுந்தீபற.

(இ-ள்.) ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று மீதானத்தே செல்க உந்தீபற - மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்கினையென்று சொல்லப்படாநின்ற ஆதாரங்களிலே ஒவ்வொரு ஆதாரந்தோறும் பொருந்தின தேவதைகளைத் தியானித்துச் சமாதியடைந்து, இது கைவந்தபின், நிராதாரயோகமென்று சொல்லப்பட்ட ஆன்மசொரூபத்தை உணர்ந்து, ஒருபற்றுமின்றிச் சமாதிபரனாய் நிற்க; அந்த நிராதாரயோகத்துக்கு உபாயயோகமாகிய மேலான யோகத்திலே சாதித்துத் தன்னுடைய செயலற நிற்குமதைச் சாத்திரங்களின் வழிகளிலே ஆராய்ச்சிசெய்து, மீதானமாகிய சிவசொரூபத்திலே கூடும்படி சிரத்தைபண்ணுவாயாக.—விமலற்கு இடமதென்று உந்தீபற - இப்படிப்பட்ட இடமே நின்மலனாகிய சிவனைக் கூடத்தக்க இடமாவது என்க. (அ)

ஆதாரயோகத்துக் கிட்டவுபாயம் ஒழிந்த சாயுச்சியத்துக் கிலக்கணமான யோகம் அன்றென்று அருளிச்செய்கின்றார்.

ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற.

(இ-ள்.) ஆக்கில் அங்கே உண்டாய் அல்லது அங்கு இல்லையாய்ப் பார்க்கில் பரமது அன்று உந்தீபற - தற்போதத்தாலே மூலாதாரமுதல் பிரமரந்திர மீறாகவுள்ள ஆதாரங்களிலே ஒவ்வொரு தேவதைகளைத் தியானித்த காலத்தில் உண்டுபோலத்தோன்றியுந் தியானியாதகாலத்து இல்லையாகியும், இப்படித்தியானிக்கப்பட்ட தேவதைகள் இந்தத்தேகத்தில் ஆதாரங்கள்போலப் போகத்துக்குத் தானமாகிய அண்டத்திற்குட்பட்ட பதங்களிலே அடைவிக்குமதொழிந்து, பரிபூரணமான சாயுச்சியத்தை அடைவிக்கமாட்டா; அஃதேனெனில், ஆன்மபோதமானது சீவிக்குமளவில் அதோமுகமாகவொழிந்து சீவியாதாகையால், அதனாற் கற்பிக்கப்படு மவையெல்லாந் தனக்கு அநாதியே வாதனை பண்ணிப் போந்த மாயாரூபமே யொழியத் தன்னைவிட்டு நீங்காத சிவசொரூபத்தை யுணர்த்தாது; ஆதலின் தன்னுடையபோதத்தாற் கற்பிக்கப்படு மவையெல்லாம் விசாரித்துப்பார்க்கில் சொரூபமல்ல.— பாவனைக்கு எய்தாதென்று உந்தீபற - இவ்வித அவாங் மனோகோசரமாயுள்ள பொருள் இவனுடைய கற்பனையில் அகப்படாது என்க. (கூ)

மேல் முன்சொல்லப்பட்ட நிராதாரயோகத்தை விரித்தருளிச்செய்கின்றார்.

அஞ்சே யஞ்சாக வறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற.

(இ-ள்.) அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத் துஞ்சாது உணர்ந்திருந்து உந்தீபற - பஞ்சபூதபரிணாமமாகிய தேகம் ஆன்மாவைக் கூடினாலொழிந்து சேட்டியாதாகையால் இந்தத் தேகத்துடனே கூடிநின்றால் உள்ளதோஷத்தை அறிந்து வேறாகக்கண்டு நீங்கி நிற்கவே இந்தத் தேகமும் பிரமாண்டமாகிய பஞ்சபூதங்கள்போல் இவனுக்குவேறாகியே நிற்கும். இவற்றை அருட்கண்ணாலே கண்டு நீங்கின ஆன்மாவுக்கு நீங்கினபொழுதே இவனுடைய இச்சாஞானக்கிரியைகளுந் தொலைந்து, இவனுக்கு அநாதியே பிராணனாய் மறைந்து நின்று இரக்ஷித்த சிவனும் இவனைக் கவளீகரித்துக்கொண்டு, தானான்மாவாகியே நில்லாநிற்பன். இந்நிலைதவறாமல் நிற்கும்படி (ஒருவனொரூர்க்குப் போகுமளவில் மற்றொருவன் காட்டிவிட்ட குறிவழிச்செல்லாமற் பக்கமே செல்லத்தக்க கள்ளருடைய அடிப்பாட்டையை வழியெனக்கருதிச்சென்றாற் கள்ளராலே விதனப்படாநிற்பன். இந்தவிதனங்கள்கூடாதபடி பக்கவழிகளிற் செல்லாமல் ஒருவன் காட்டிவிட்ட குறிவழிச்சென்றால் ஒருவியாகூலமுமறப்போய்க் கருதினவூரிலேசென்று தன்னுடைய கோட்பாடு முடியாநிற்பன். அதுபோல) சொரூபத்திலேசென்று இரண்டறக் கூடுகிற

வழிக்கு விரோதவழியாகிய மயக்கவிகற்பங்களிலே விழுந்து ஜநநமரணங்களை அடையாதே, தன்னுடையசொரூபத்திலே வந்து கூடும்படி வழிகாட்டிநிற்கிறவுணர்வு கண்ணாகக் கேவலசகலத்திலே தாக்காமலிருக்கவேண்டும்.—துய்யபொருள் ஈதென்று உந்தீபற - இதுவே வேதாகமங்களில் தீர்வானபொருள் என்க. (௧0)

இப்படிக் கூடுமதொழிந்து தன்னுடையபோதத்தாலே கூடும்படி விசாரிக்கில் இப்பொருள் கைகூடாதென்று அருளிச்செய்கின்றார்.

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பர
னோக்கிற் குழையுமேன் றுந்தீபற
நோக்காம னோக்கவென் றுந்தீபற.

(இ-ள்.) தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன் நோக்கில் குழையுமென்று உந்தீபற - ஆன்மாவுடனேகூடி ஆன்மாவாய் நின்றும், தன்னுடைய வுண்மைகுன்றாமற் பரமானந்த சொரூபமாய் நிற்கிற அந்தச்சொரூபத்தைக் கூடவிசாரித்து, அதுதனியே ஒருபொருளுமாக உன்னி யிரண்டுபட்டுநின்று பொருந்தவிசாரிக்கில், உனக்கு அப்பொருள்கைகூடாது.—நோக்காமல் நோக்கவென்று உந்தீபற - அநாதியே அந்தச்சொரூபந் தன்னைத்தோற்றாமல் நீயாகிநின்ற முறைமைபோல் நீயும் உன்னைத்தோற்றாமல் அந்தச்சொரூபந்தானாகியே நிற்கில் அப்பொழுதே பரிபூரணபரமானந்த சொரூபியாய்விடுவை என்க. (௧௧)

இனி இந்தவுபாயத்தை அருளிச்செய்த குருவின்பெருமையை அருளிச்செய்கின்றார்.

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரோன் றுந்தீபற
தவத்திற் றலைவரோன் றுந்தீபற.

(இ-ள்.) மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர் சாலப் பெரியரொன்று உந்தீபற - மாதாவினிடத்துண்டான சுரோணிதத்திலே பிதாவினிடத்துண்டாகிய சுக்கிலம் பவளப்பையில் முத்தைவைத்தாற்போலப் படுகிறநாளில், சீவனுனது பிராணவாயு வாகனமாகவும், மனம்வழியாகவும், சிவனுடைய ஆஞ்ஞையாலேசென்று, சுக்கிலசுரோணிதத்தின் தலையிலேபதிந்து, கன்மத்துக்கீடாக மூன்றரைக்கோடியுரோமத்துவாரமும் எழுபத்தீராயிரநாடியும் வாயுவிற்பிரதானமான தசவாயுவும் நவத்துவாரமும் எண்சாணுடம்பும் ஏழுதாதுவும் ஆறாதாரமும் ஐந்துபொறியும் நாலுகரணமும் மூன்று மண்டலமும் இரண்டுவினையும் எனப்பெயர் பெற்று, இவற்றை ஒன்றெனப்போர்த்த புறத்தோலுமாக ரூபிகரித்து, பிராரத்தமளவுந் தன்னுடையதேகத்தில் உந்திச்சக்கரத்தின் மேலே கிடந்து, ஆறுமாதமுதல் உந்தி நாளத்தாலே மாதாவினிடத்திலே அன்னரசமுங்கொண்டு, அவ்வன்னரசத்தின்மிகுதியாலே சுழுமுனைநாடி அடைபட்டு இடையும் பிங்கலையுந் திறந்து, பிராணவாயுபுகுந்து மேனோக்கி, நாசித்துவாரங்களாலே விட்டவெழுத்தாலே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்தறுநூறு சுவாச வுச்சாரணந்தோன்றி, முப்பத்திரண்டுநூறாயிரத்து நாற்பதினாயிரம் உருச்சென்றவாறே உதரகன்மந் தொலைந்து, மாதாவினிடத்துண்டான பிராணவாயுவிலே, தம்பிரானு

ருடைய காருண்ணியத்தாலே சத்தியதிஷ்டித்துக்கொண்டு, இந்தச் சத்திபலத்துடனே வாயுவானது பிரஞ்ஞையைப் பூமியிலே பதிவிக்க வேண்டிப் பிரஞ்ஞாபத்தியமென்னும் பெயர்பெற்று, இவனுடையபோதம்போல இவனுடைய தேகமுங் கீழ்நோக்கிவிழும்படி தன்னுடைய பலத்தாலே தலைகீழாகத் தள்ளிப் பூமியில் வந்தபின்பு, தேகத்துக்கடுத்த கன்மங்களாலே புசிப்புகளைக்கருதி இந்திரியங்களாகிய மூலைகளிலேயிருந்து, விடயங்களைப்புசித்துப் புசிப்பொழிந்தால், இவனுடைய போதமானது கீழ்நோக்கிச் சாக்கிரமுதல் அதீதமளவாக அவத்தைகளுக்கடுத்த தானங்களாகிய மூலைகளிலே அடைந்தும், இப்படி யிரவுபகல் இந்த மூலைகளிலுண்டான விருளினாலே மறைந்து விகற்பித்துமயங்கியும், இப்படிப் பொய்ப்பிரகாசமான சுகதுக்கங்களில் அழுந்தாமற் கீழ்நோக்கின போதத்தை ஒழித்து, உண்மையையுணர்த்தி மேலாகிய பிரகாசமான பரமாகாசவொளியிலே விழித்துப் பரபோகத்தில் அழுந்தும்படி கூட்டுவித்த உபாயகுரு மிகவும் அளவிடப்படாத பெருமையையுடைய தம்பிரானவர்.—தவத்தில் தலைவனொன்று உந்தீபற - அரிய தவத்திலே நின்று வழிபட்டவர்க்கு வேண்டும் வரங்களைக் கொடுக்க வல்ல கர்த்தாவுமாவர் என்க. (கஉ)

இப்படிச் சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாதபொருள் கூடுகைக்கு ஓரிடமுண்டென்று அருளிச்செய்கின்றார்.

ஒட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவ முந்தீபற
தேடு மிடமதன் றுந்தீபற.

(இ-ள்.) ஒட்டற்று நின்ற உணர்வு முட்டி பதி தேட்டற்ற இடஞ் சிவம் உந்தீபற - தனக்கொரு போக்குவரவின்றியே ஒழிவறநிறைந்து சலிப்பற நிற்கிறஞானத்தை ஆன்மாவின்கண்ணுகக்கூடி, அந்தஞானமேயாய், அந்தஞானத்தினைக்கியத்தாலே கூடினேமென்கிற விகாரமும் அந்த ஞானமுஞ் சேரக்கரைந்தவிடந்தானே சிவரூபமாம்.— தேடும் இடமதன்று உந்தீபற - இந்தவிடம் போதங்கரைந்தவிடத்திலே பிரகாசிக்குமதொழிந்து ஆன்மபோதத்தாலே ஆராய்ந்தறியத்தக்க விடமன்று என்க. (கங)

இந்தவிடத்தைத் தேசிகனாலே அறிந்தே அவனறிவித்த வுபாயத்திலே அவதிகூடாமற் கூடவே சிவம்பிரகாசிக்கு முறைமையை மேல் அருளிச்செய்கின்றார்.

கிடந்த கிழவியைக் கிள்ளி யெழுப்பி
யுடந்தை யுடனேநின் றுந்தீபற
வுன்னையே கண்டதேன் றுந்தீபற.

(இ-ள்.) கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி உடந்தை யுடனே நின்று உந்தீபற - ஆன்மாவை அநாதியேபொருந்தி வாழுகிற அருளாகிய சிவசத்தியை ஆசாரியன் கடாக்ஷத்தாலே பிரகாசிப்பிக்க அந்த ஞானத்துடனேகூடி அந்த மயமேயாய் நிற்பாய்.—உன்னையே கண்டதென்று உந்தீபற - அப்படி நிற்கவே சிவமானது உன்னையேகண்டு கிரகித்துக் கொள்ளாநிற்கும் என்க. (கச)

மலமாயைகன்மங்களைப் போக்குகிற ஞானத்தை ஆசாரியன்கடாக்ஷத்தாலே இவன்பற்றவே அப்பொழுதே சிவபிரான் இவனைப் பற்றினேமென்கிற நினைவையும் அறுத்துத் தானாக்குவானென்னு முறைமையை அருளிச்செய்கின்றார்.

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பனோன் றுந்தீபற
பாவிக்க வாராஙோன் றுந்தீபற.

(இ-ள்.) பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில் அப்பற்றை அறுப்பனென்று உந்தீபற - தேகேந்திரிய பிராணவாயு அந்தக்கரணங்கள் முதலாயுள்ள பற்றுகளை அறுக்கத்தக்க திருவருளை ஆன்மாபொருந்தி அந்தஞானமேயாய்நிற்கில், அப்பொழுதே ஞானமாய்நிற்கின்றேமென் கிறபற்றையும் அறுத்துச் சிவன் தானாக்கியேவிடுவன்.—பாவிக்க வாரா னென்று உந்தீபற - அல்லது சிவனைத் தியானித்துக் கூடவேண்டுமென்று விசாரிக்கில், அவன் ஒருகாலமுங் கூடப்படான் என்க. (கரு)

இப்படிக் கூடிநின்றவர்கள் ஒன்றிலும் பற்றுமனிற்கு முறைமையை அருளிச் செய்கின்றார்.

உழவா துணர்கின்ற யோகிக ளோன்றேநேந்
தழுவாம னிற்பனோன் றுந்தீபற
தாழ்மணி நாவேபோ லுந்தீபற.

(இ-ள்.) உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றேடுந் தழுவாமல் நிற்பனென்று உந்தீபற - உணர்த்துமுறைமையினும் அவத்தையினும் அழுந்தாமற் சிவனதுஞானத்தாலே சிவனைத்தரிசிக்கிற சிவயோகிகளுக் குப் பிராரத்தத்தாலே கன்மங்கூடிற்றாயினுந் திருவடிஞானங்கண்ணுக நிற்கையாலே ஒருவிடயங்களினும் இரார்கள்.—தாழ்நா மணியேபோல் உந்தீபற - தாழ்ந்தநாவையுடைய மணிபோல அசையும் ஆரவாரமும் அற்றிருப்பார்கள் என்க. (கசா)

இப்படிக் கூடுங்காலத்து நடுவே ஒருகுறிநிகழுமென்றும் நிகழ்ந்தாற்செய்யும் பரிகாரமும் அருளிச்செய்கின்றார்.

திருச்சிலம் போசை யோலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடேன் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற.

(இ-ள்.) திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று நிருத்தனைக் கும் பிடென்று உந்தீபற - தம்பிரானார் திருவுள்ளத்தடைத்த ஆன்மாக்கள் கருவிகரணாதிகளாலுள்ள ஆரவாரங்களைக்கடாக்ஷந்துணையாகவே ஓட்டி வெற்றியுடனே திருவடிசேரச் செல்லுங்காலத்து (இராசாவின் குமா ரன் மறுதலையான மாற்றானையோட்டி வெற்றியுடனே தன்னுடைய பதி யைச் சேரச் செல்லுமளவில் இராசாவின் அருகுநின்ற வாச்சியங்கள் எதிர்கொள்ளுந் தன்மைபோல) அனவரதமும் பரமானந்த நிருத்தம் பண்ணி யருளாநின்ற தம்பிரானார் திருவடிக்குச் சிலம்பும் ஓசையுமான பரவிந்து பரநாதம் அடியார் பிறவித்துக்கங் கெடும்படி ஆரவாரியாநிற் கும்; இந்தப்பரநாதவழியே சென்று பரமானந்த நிருத்தம் பண்ணியரு

ளாநின்ற தம்பிரானே உன்னுடைய போதங்களைவதற்குத் தொழுவாயாக.—நேர்பட அங்கேநின்று உந்திபற - மயக்க விகற்ப மென்று சொல்லப்பட்ட உட்பக்கவழிகளாகிய கள்ளரடிப்பாட்டையிற்சென்று தட்டுப்படாமல் நல்லடிக்குச் செல்லுகிற செவ்வைவழியே சென்று என்க.

இப்படித் திருவடிக்குச்செல்லுகிறவழிக்கு விரோதமாகிய மயக்கவிகற்பங்கள் ஒருகாலமும் பொருந்தாதபடி தம்பிரானுர் திருவருளை மறவாதிருக்கவென்று அருளிச்செய்கின்றார்.

மருளுந் தெருளும் மறக்கு மவன்க
ணருளை மறவாதே யுந்தீபற
வதுவேயிங் குள்ளதென் றுந்தீபற.

(இ-ள்.) மருளும் தெருளும் மறக்கும் அவன்கண் அருளை மறவாதே உந்தீபற - உனதநுபூதிக்கு விரோதமாகிய மயக்கவிகற்பங்கள் ஒருகாலமுங்கூடாது. அஃதெதனுலென்னில், உனக்குக்கண்ணுகிய சிவனருளை ஒருகாலமுங் கைவிடாமற் கூடிநிற்கில்;—இங்குள்ளது அதுவேயென்று உந்திபற - இவ்விடத்திற் செய்யவேண்டுங் காரியமும் அதுவேயொழிந்து வேறென்றுமில்லை என்க. (கஅ)

இப்படி அருளிலே இடைவிடாமனின்றாற் சிவம் பிரகாசிக்கும் விளைவை அருளிச்செய்கின்றார்.

கருது வதன்முன் கருத்தழி யப்பாயு
மோருமகள் கேள்வனேன் றுந்தீபற
வுன்ன வரியனேன் றுந்தீபற.

(இ-ள்.) கருதுவதன்முன் கருத்தழியப்பாயும் ஒருமகள் கேள்வனென்று உந்திபற - இப்படி அருளிலே இடைவிடாமனின்றவன் இந்தவருளினாலே சிவனைக்கூடவேண்டுமென்று விசாரிக்குமளவில், இவன் கருத்துக்குக்கருத்தாய் நிற்பது திருவருளேயாகையாலும், இவனுக்குத் தனித்தொருகருத்தில்லாதொழிகையாலும், (குகையிலுருக்கின செம்பிலே குளிகைபாய்ந்தவளவிற் செம்புங் காளிதமுமறப் பொன்னு மாறுமா யிருந்தாற்போல) இவன்கருதிய வப்பொழுதே இவனையுங் கிரகித்துக்கொண்டு இவனுடைய கருத்தையுமொழித்துத் தானுந் தன்னுடைய கருத்துமாய் நில்லாநிற்பன், ஒப்பில்லாத சத்தியஞானசத்தியினை அநவரதமும் பொருந்திக்கொண்டிருக்கத்தக்கநாயகன். —உன்ன அரியனென்று உந்திபற - ஆகையால் இப்படியன்றி ஆன்மபோதத்தால் எக்காலமும் நினைந்துகூட அரிதாயுள்ளவன் என்க. (கக)

இப்படிப்பட்ட வுண்மைப்பொருளைப் பெற்றகாலத்து இடைவிடாதே நின்றனுபவிக்கவேண்டுமென்று அருளிச்செய்கின்றார்.

இரவு பகலில்லா வின்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விளைய விளையநின் றுந்தீபற.

(இ-ள்.) பகல் இரவு இல்லா இன்பவெளியூடே விரவி விரவிநின்று உந்திபற - உணர்ந்தகாலத்து மாயையும் ஒடுங்கினகாலத்து ஆணவமுங் கூடாமல் ஞானமும் ஆனந்தமுமே பிரகாசிக்கத்தக்க பரமாகாசத்திலே

கூடிப் பொருந்தி நின்றனுபவிக்க.—விரைய விரைய நின்று உந்தீபற - தேசிகனாலே அறிந்தோமாகில், பின்பேசாதித்துக்கொள்ளுவோமென்று முன்புள்ளவாசனையின் மிகுதியாலே, பேய்த்தேர்போன்ற விசுவத்தையும், விசுவாதீதமான தேகத்தையும், ஒருநிலைநில்லாத மனாதிகளினுடைய சிக்கென்றவைகளையும் மெய்யெனக்கருதி ஜநநமரணங்களிலே அடையாமற் பரமானந்தத்திலே கூடிநின்று, இளைப்பாறும்படி மிக விரைந்து கூடுவாயாக என்க. (உ0)

இப்படி கூடத்தக்கசிவம் ஆன்மபோதத்தால் உளதென்னும் பொருளினும் இலதென்னும் பொருளினுமன்றியே உண்டானபொருளென்று அருளிச்செய்கின்றார்.

சொல்லும் பொருள்களுஞ் சொல்லா தனவுமங்
கல்லனு யானனென் றுந்தீபற
வம்பிகை பாகனென் றுந்தீபற.

(இ-ள்.) சொல்லும் பொருள்களும் சொல்லாதனவும் அங்கு அல்லனாய் ஆனனென்று உந்தீபற - வாக்கால் அளவுபடுத்தி உரைக்கத்தக்க சொரூபாதிகளாய் உள்ள பொருள்களும், வாக்கால் உரைக்கப்படாத முயற்கோடுபோன்று இல்லாத பொருள்களும், இவையிரண்டுமல்லாதவனுமாய் வாக்குமனாதீதத்திலேநின்று உணரத்தக்க சுபாவ சொரூபியாய் உள்ளானொருவன்.—அம்பிகை பாகனென்று உந்தீபற - அவனே காருண்ணியசத்திக்கு நாயகனாகிய கர்த்தா என்க. (உக)

இப்பொருளைக் கூடுகைக்கு வேறுமோருபாயம் அருளிச்செய்கின்றார்.

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினு
ளாற்றுவ தாற்றலென் றுந்தீபற
வல்லாத தல்லலென் றுந்தீபற.

(இ-ள்.) காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள் ஆற்றுவது ஆற்றலென்று உந்தீபற - இடைபிங்கலைகளாற் பிராணவாயு நின்று சலிக்குமளவும் மனமும் ஆன்மாவும் ஒக்கநின்று சீவிக்குமாகையால், இப்படிச் சலித்துப் புறப்படுகிற வாயு பன்னிரண்டங்குலமும் புறம்பேசலியாமல் உள்ளேதானே சுவறும்படி குருவசனத்திலே நின்று சாதிக்க மனச்சலிப்புள்ளது அற்றுவிடும். இப்படிச் சலிக்கத்தக்க விகாரம் அற்றபொழுதே இவன் கருத்தானது அவிகாரத்திலே செல்லுமாகையால், இந்த விகாரத்தில் விழாமல், தன்னுடைய கருத்துக்குக் கருத்தாய் நிற்கிற தம்பிரானார் திருவடியிலே கூடியிருந்து இளைப்பாருகிறதே பொருள்.—அல்லாதது அல்லல் என்று உந்தீபற - இப்படிக் கூடுகிறதொழிந்து வேறொரு பிரகாரங்களாற் கூடுகிறது என்றும் நிலைநில்லாது என்க. (உஉ)

இந்தவுபாயத்திலே பொருந்திநிற்கவே, இவன் சுத்தனுமாய் வீடும் எளிதாகப் பெறலாமென்று அருளிச்செய்கின்றார்.

கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்
வெள்ள வெளியாமென் றுந்தீபற
வீடு மெளிதாமென் றுந்தீபற.

(இ-ள்.) கள்ளரோடு இல்லமுடையார் கலந்திடில் வெள்ள வெளியாமென்று உந்தீபற - களவுகாண்பானொருவன் தன்னுடைய சொரூபத்தை

யும் பேதித்து, தன்னுடைய சாத்திரத்தின் வழியிலே மிகுந்த பதார்த்தங்களுடையானொருவனைப் பார்த்து, அவனை மந்திரத்தாலும் ஔடதத்தாலுந் தியானத்தாலும் பேதித்துத் தன்னுடைய வசத்திலே யாக்கி, அவனகத்திலேயுள்ள பதார்த்தங்களை அவன் பொருந்திநின்று எடுப்பித்தாற்போல, தம்பிரானாரும் இவனுடைய அநாதிமலசம்பந்தத்தாலே இவனுக்குந்தெரியாதபடி கள்ளனைப்போல் மறைந்துநின்று உபகரித்துக் கன்மவொப்பும் மலபரிபாகமுமுண்டான அவசரத்திலே இவனுக்குப் பொருந்தினதொரு திருமேனியிலே பிரகாசித்துத் திருநீறென்கிற ஔடதத்தாலும் ஸ்ரீபஞ்சாக்கரமென்கிற திருமந்திரத்தாலுஞ் சொரூபமென்கிற தியானத்தாலும் இவனைப் பேதித்து, இவனைத் தம்முடைய வசத்திலேயாக்கி, இவன்சஞ்சிதமாக நெடுங்காலங்களிலே தேடிய அத்துவாக்களாகிய அறைகளைச்சோதித் தெடுப்பிக்கிறவளவிலே, தேகமாகிய இல்லத்தையுடைய ஆன்மாவும் இதற்குப்பொருந்தி ஒருவழிப்பட்டால், இவனுக்கு ஒருமுதலும் இல்லையாய் இவனுடைய இருதயமும் வெளிக்கு வெளியாய்ப் பரமாகாசமாய் விடும்.—வீடும் எளிதாமென்று உந்தீபற - இப்படியான காலத்து ஐம்புலவேடராகிய கள்வர்க்கு ஈடுபடாத வீடும் இவனுக்கு வருத்தமறக்கிடைக்கும் என்க. (௨௩)

இப்படி நின்றவர்கள் பிராரத்தத்தாலே தேகத்துடனே விசுவத்திலே இருந்தார்களாயினும் அவர்கள் விசுவமயக்கத்திற் படார்களென்று அருளிச்செய்கின்றார்.

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டேநின்றார்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடே வீடாகுமென் றுந்தீபற.

(இ-ள்.) எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார் விட்டார் உலகமென்று உந்தீபற - பஞ்சபூதமுஞ் சந்திராதித்தரும் ஆன்மாக்களுமாக எட்டுவகையுந் திருமேனியாக வெழுந்தருளிநின்ற தம்பிரானார் அநாதியே தன்னைவிட்டு நீங்காது நின்ற முறைமையை அவருடையதிருவருளாலே அறிந்து, தானும் அவனைப்போலே சிநேகிதம்புரிந்து கூடினவர்கள் பிராரத்தந் தொலையுமளவுந் தேகவிசுவங்களிலே நின்றாரேயாயினும் (சாக்காளியென்னும் புழுப்போல) கருத்து வேறே பூண்டு கிடக்கையாலே விசுவத்திற்படார்கள்.—வீடே வீடாகுமென்று உந்தீபற - இப்படிவிசுவத்தை அருட்கண்ணாலே பொய்யானபடிகண்டு நீங்கி நிற்கவே, ஒருகாலத்திலும் அழிவில்லாத திருப்பாதமே அவர்களுக்குப் புகலிடமாம் என்க. (௨௪)

இப்படி ஞானைசுவரியத்துடனே நிற்கப்பெற்றவர்களே புண்ணியபாவந் துலைபோலொத்த வான்மாக்களென்று அருளிச்செய்கின்றார்.

சித்தமுந் தீய கரணமுஞ் சித்திலே
யொத்ததே யொத்ததென் றுந்தீபற
வொவ்வாத தொவ்வாதென் றுந்தீபற.

(இ-ள்.) சித்தமும் தீயகரணமும் சித்திலே ஒத்ததே ஒத்ததென்று உந்தீபற - அருளாலேசிவனானது பசுத்துவநீங்கிச் சிவத்துவமாகவுங் குற்

றத்தைக் குணம்போல விளைவிக்கிற அந்தக்கரணங்கள் பசுகரணபாவங் கெட்டுச் சிவகரணமாகவும் இப்படிக்கூடினவர்களே கன்மங்கள் பக்குவத்தையடைந்து துலையொத்த வான்மாக்கள்.—ஒவ்வாது ஒவ்வாதென்று உந்தீபற - இப்படி வினைகள் துலையொவ்வாத வான்மாக்களுக்குத் தம்பிரானார் திருவடிகூடக்கிடையாது என்க. (உரு)

இந்நிலையிலேநின்று இரண்டறச்சாதித்தாற் பின்பு விளையுமாறருளிச்செய்கின்றார்.

உள்ளும் புறம்பு நினைப்பறி னின்னுள்ளே
மொள்ளா வமுதாமேன் றுந்தீபற.
முளையாது பந்தமேன் றுந்தீபற.

(இ-ள்.) உள்ளும் புறம்பும் நினைப்பு அறின் நின்னுள்ளே மொள்ளா அமுதாமென்று உந்தீபற - கன்மயோகிகள் கருத்துப்போலத் தானிற்கிற தேகத்திலே ஒருதானத்தில் அவிகாரமாயிருந்துங், கிரியாபாதத்தில் நிற்கிறவர்களைப்போலப் புறம்பே பாவித்திருந்தும் இப்படிச்செய்து அநுபூதிதிரிந்து பிரபஞ்சமாய் நில்லாதே, தேசிகன் கடாக்ஷத்தாலே தேகாதிப்பிரபஞ்சங்களை உணர்ந்து நீங்கின தன்னையுந், தரிசிப்பித்த சொரூபத்தையும், அதுகண்ணாகவுணர்ந்து தேகாதிப் பிரபஞ்சங்களையும் இல்லையாக்கித் தன்மையு முன்னிலையும் ஒழிந்து ஒரு நீர்மையாகப் படர்க்கையாய் உள்ளென்றும் புறம்பென்றுந் தானென்றும் அவனென்றுங் கூடவேண்டுமென்றுங் கூடினேமென்றும் விசாரிக்கிற உணர்வு ஒழியில் உன்னிடத்திலே ஒருவராலுமுகந்துகொள்ளப்படாத அநுபோகரசமான ஆனந்தாமிர்தம் ஊறிப்பெருகி உன்னையே கிரகித்துக்கொண்டு தானேயாய்விடும்.—பந்தம் முளையாதென்று உந்தீபற-இப்படியானபின் ஜநநமரணங்கள் அங்குரிக்கத்தக்க பாசவிகற்பங்கள் உணடாகா என்க.

இப்படிப் பொருந்தினவர்களுக்கே பாசவிகற்பங்களாலாகிய கிலேசந் தீர்வதென்றும், அல்லது தீராதென்றும் அருளிச்செய்கின்றார்.

அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க்
கவிழுமிவ் வல்லலேன் றுந்தீபற
வன்றி யவிழாதேன் றுந்தீபற.

(இ-ள்.) அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு அவிழும் இவ் வல்லலென்று உந்தீபற - ஆன்மபோதம்போல ஒருபொருளைப் பற்றிக்கொண்டு நின்று விசாரித்து மயங்காதே அநாதியே பற்றும் விகற்பமும் மயக்கமுமின்றித் தன்னுடைய ஆஞ்ஞையாலே சர்வமு நடவாநிற்கத் தானொன்றையும் அறியாதே பரமானந்தமயமாய் எல்லாவற்றினுமுளதாய் நின்றே அவற்றிற்படாமல் அநவரதமுநின்று பிரகாசிக்கிற சொரூபத்தை ஆசாரியன் அநுக்கிரகத்தாலே பெற்று அதுகண்ணாக அதிலே கூடி அதுவாய் நின்றவர்களுக்கு (ஆதித்தன் சந்நிதியில் ஆன்மாக்கள் கண்ணுக்கு அந்தகாரம் நினைவற அந்நியமாய் விடுந்தன்மைபோல) ஞானாதித் தனுதயந் தரிசனமானபோதே ஜநநமரணங்களுக்கு ஏதுவாய் வருகிற

பாசவிகற்பங்களாகிய பேரந்தகாரமானது இன்னவிடத்திலே போன தென் றறியாதபடிதானே இவனைக் கைவிட்டுப்போம்.—அன்றி அவி ழாதென்று உந்தீபற - இப்படி நீங்காதவளவில் வேறொருபாயங்களா லும் இந்தக்கிலேசங் கைவிடாது என்க. (உஎ)

இப்படி ஜநநமரணங்களுக்கு ஏதுவாக அங்குரிக்கத்தக்க பாசவிகற்பங்களை விட்டு முத்திக்கு வித்தாகிய சத்தியஞானத்தை அபேட்சித்தவர்கள் பெறும்பேற் றின் உறுதிப்பாட்டை அருளிச்செய்கின்றார்.

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்களென் றுந்தீபற
பெறுவதங் கென்பேணே யுந்தீபற.

(இ-ள்.) வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர் பித்தேறினார்க ளென்று உந்தீபற - முத்திக்கு வித்தாகி அநாதியே தனக்குப் பிராண னாய்நின்று தோன்றாமல் உபகரித்துந் தொலைப்பித்தும் வருகிற அருளைத் தேசிகன் கடாக்ஷத்தாலே சந்தேகமறப் பெற்று ஜநநமரணங்களுக்கு ஏதுவாக அங்குரிக்கத்தக்க பாசவிகற்பங்களைவிட்ட பாக்கியவான்களே எக்காலமுந் தொலைத்தற்கரிதாகிய தேகாதிப் பிரபஞ்சங்களையுஞ் சுக துக்க வாதனைகளையுங் கைவிட்டு மேலாகிய ஞானம் பிரகாசிக்கத்தக்க பர மானந்த சொரூபத்திலே மீளாதவழி சென்று புகுந்தவர்கள்.—பெறுவது அங்கு என்பெணே உந்தீபற - இவ்விடத்திலே இப்படிநின்று பெறத் தக்க பேறொழிந்து பாசவிகற்பங்களே பொருளென நின்றால் அவ்விடத் துப் பெறும்பேறு ஏதுநெஞ்சமே என்க. (உஅ)

இப்படி அரியபேற்றைப் பெறுமளவில் பெறுகைக்கு ஓரவதரமுண்டென்று அருளிச்செய்கின்றார்.

சொல்லு மிடமன்று சொல்லப் புகுமிட
மெல்லை சிவனுக்கென் றுந்தீபற
வென்றானு மென்செய்கோ முந்தீபற.

(இ-ள்.) சொல்லும் இடம் அன்று சொல்லப் புகும் இடம் எல்லை சிவனுக்கென்று உந்தீபற - இப்படிக்கூட வரிய சிவனைக் கூடத்தக்க இடம் ஆன்மபோதத்தால் உணர்ந்து வாக்குகளால் இன்னவிடமென்று உரைக்கத்தக்கதொரு இடமன்று; சொல்லுகைக்குக் கர்த்தாவாகிய ஆன்மா ஒருபொருளைக்கருதி உரைப்பதாக உணருமளவில், ஒருவன் உணர்த்த வுணருமதொழிந்து தானாக ஒன்றை உணரமாட்டாததலால், ஒருவன் உணர்த்த உணருவதானபடியை ஆசாரியனாலே பெற்று உணர்த்த வுணருவதான வெல்லையில் அவனுணர்த்துகிற தன்மையை அவ னாலே யுணரின் அவ்விடமே சிவனைப் பெறுதற்கு எல்லையாயின விடம்.—என்றால் நாம் என்செய்கோம் உந்தீபற - இந்த விடத்தை அறிந்து கூடினால் யானென்றும் எனதென்றுஞ் சொல்லிநின்ற ஆன்மா அவ்விடத்து என்செய்ததோ அறிகின்றிலேன் என்க. (உகூ)

இந்த அவதரத்திலேநின்று கூடுமுபாயத்தை மன்னிவிடாதே உணரப்பெறின் எல்லாநிலையிலு நிற்கலாமென்று அருளிச்செய்கின்றார்.

வீட்டி லிருக்கிலேன் ஞட்டிலே போகிலேன்
கூட்டில்வாள் சாத்திநின் றுந்தீபற
கூடப் படாததேன் றுந்தீபற.

(இ-ள்.) வீட்டில் இருக்கில் என் நாட்டிலே போகில் என் கூட்டில் வாள் சாத்திநின்று உந்தீபற - எல்லாவற்றையுந் தன்னுலே விடப்பட்டுத் துறவறத்திலே யிருந்தாற் பிரயோசனமென்ன, இதுவொழிந்து நாடத் தக்க அர்ச்சனுதிகளினுந் தீர்த்தகரிசனங்களினும் உழன்றாலும் பிரயோசனமென்ன, (பொன்னுக்கு மாற்றுநின்றாற்போல) ஆன்மாவே குகையாக அநாதியே தனக்குப் பிராணனுய் நிற்கிற திருவடிஞானத்தைத் தேசிகன் கடாக்ஷத்தாலே உணர்ந்து தன்னுடைய சுதந்திரவீனத்தையுங் கர்தாவின் செயலென்றே கண்டு தனக்குப் பொருந்தினதொரு நிலையிலே நில்லானுகில்.—கூடப் படாததென்று உந்தீபற - இப்படி உண்மையறிந்து நில்லாமல் தன்னுலே செய்யப்பட்டதாகக்கருதில் மோக்ஷங் கூடாது போதத்துக்கு விரோதமேவிளையாநிற்கும்; (அஃதெப்படியெனில், கர்த்தாவை அறியாமல் சகலர்க்கும் இதமாக யாகம்பண்ணின தக்ஷப்பிரசாபதிக்கு விரோதமே விளைந்ததும், சகலரையுங் கைவிட்டுத் தன்னுடைய செயலறக் கர்த்தாவின் வசத்திலே நின்று சண்டீசநாயனுர் சிவனை அர்ச்சிக்கிறவளவில் சகலருக்கும் அகிதமான பிரமகத்தி விளைய இதுவுஞ் சிவனுக்கு இதமாகவே பலித்துத் திருவருள் விளைந்தபடியுங் கண்டுகொள்க; ஆதலால் உண்மையறிந்து சருவமுங் கர்த்தாவின் செயலென்றே கொள்ளாமல் தன்னுடைய செயலென்றே ஒவ்வொரு தவத்திலே நின்றவற்கு வினை ஏருதிராது) என்க. (௩0)

இந்த வுபாயத்தையுடைய சைவசித்தாந்தத் திறமொழிந்து மற்றொருசமயிகளின் பொருளைப் பொருளெனக் கருதவேண்டாமென்று அருளிச்செய்கின்றார்.

சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
ருவிய ருதேயேன் றுந்தீபற
வவ்வுரை கேளாதே யுந்தீபற.

(இ-ள்.) சாவிபோம் மற்றச் சமயங்கள் புக்கு நின்று ஆவியருதேயென்று உந்தீபற - ஆன்மாவுஞ் சிவமும் வேறறநிற்கும் அநுபோகரசமாகிய சைவசித்தாந்தத் திறமொழிந்து, ஒருவன் பசிதீரச்செய்த பயிரானது பயன்படுமளவும் பயிர்போல வந்து பலிக்கத்தக்க நாட்களிலே சாவிபோன தன்மைபோல, முடிவில் ஒன்றென்றுரைப்பார், இரண்டென்றுரைப்பார், இரண்டாய் நின்றே யொன்றுமென்பார், உடலந்தானே உயிரென்பார், வாயுவை உயிரென்பார், கரண நாசமேபொருளென வுரைப்பார், மோகம்க்ஷயிக்க முத்தி யென்பார், இப்படிச் சொல்லப்பட்ட வெகுவிதமான சமயங்களிற்புகுந்து நின்று தனக்குப் பிராணனை சிவனைத் தரிசியாமல் நரகங்களிலடைவார்.—அவ்வுரை கேளாதே உந்தீபற - இப்படிப்பட்ட சமயிகள்வார்த்தை உன் சுரோத்திரத்துக்கு விடயமாகாதபடி நில் என்க. (௩க)

இப்படிச் சைவசித்தாந்தத்தி னுண்மையிலே நின்றவர்கள் கருவிகரணாதிகளில் ஒருகாலங்களினுங் கூடாத துறவையுடையவர்களென்று அருளிச்செய்கின்றார்.

துரியங் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரந்
துரியமாய் நின்றதேன் றுந்தீபற
துறந்தா ரவர்களேன் றுந்தீபற.

(இ-ள்.) துரியங்கடந்த இத்தொண்டர்க்குச் சாக்கிரம் துரியமாய் நின்றதென்று உந்தீபற - பிருதிவிமுதலாக நாதமீறான தத்துவங்களையும் பஞ்சமலங்களையும் அருளாலேகண்டு நீக்கித் தன்னைத்தரிசித்துத் தன்னையும்பொருளன்றென்று கண்டு திருவடியிலே பொருந்திநிற்கத்தக்க மெய்யடியார்க்குப் பிராரத்தத்தாலே சாக்கிரத்தானங் கூடிற்றாயினும், இவர்கள் திருஷ்டிக்குப் பரமதுரியமான ஞானமே பிரகாசிக்குமதொழிந்து ஒருகாலங்களினும் பிரபஞ்சத்துடன் கூடார்கள்.—அவர்கள் துறந்தாரென்று உந்தீபற - அவர்களே துறவையுடைய கலியாணர்கள் என்க.

இதில் முற்படுந்துரியமென்றது தற்போதத்தை, இரண்டாவது துரியமென்றது பரபோதத்தை யெனக்கொள்க. (கூஉ)

இப்படித் துறவையுடைய கலியாணர்களுக்கும் பிராரத்தகன்மம் புசித்தே தொலைய வேண்டுகையாலும், புசிக்குமளவில் கருவிகரணாதிகள் கூடவேண்டுகையாலும், இவை கூடினாலும் இவற்றின் வசத்தில் அழுந்தாமற் புசிக்கு முபாயமும், ஆகாமிய மேறாமல் நிற்குமுபாயமும், இப்படி அருளிலே நின்றவர்க்குப் பெத்ததசையிற் சுகந்தானே முத்திதசையிற் சுகமாமுபாயமும் அருளிச்செய்கின்றார்.

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையேன் றுந்தீபற.

(இ-ள்.) பெற்ற சிற்றின்பமே அங்கே முற்றவரும்பரிசு பேரின்பமாம் உந்தீபற - தேசிகன் கடாக்ஷத்தாலே சொரூபத்தை உணர்ந்தகாலத்தும் பிராரத்தமானது எடுத்தவுடலிலே நின்று புசித்தே தொலைய வேண்டுகையால், அந்தக்கன்மத்தாலே நிலைநில்லாத சுகங்கள்வந்துகூடாநிற்கும். இதுகூடாநின்றபோதும் இதில் அழுந்தாமல் இந்தச்சுகத்தையுங் கன்மத்தையுங் கருவிகரணாதிகளையுந் தன்னையுங் கூட்டிப் புசிப்பிக்கிற திருவருளை அதுகண்ணாகவுணரவே ஜநநமுமேறாமற் கன்மமுந்தொலைந்து அவ்விடத்திற் கூடின அற்பசுகமானது, இவன் ஞானதிருஷ்டியிலே நிற்கையாலே, பரமசுகமாம்.—மாயை முளையாதென்று உந்தீபற - இப்படிநிற்கவே மலமாயை கன்மங்கள் ஒருகாலத்தினும் அங்குரியா.

இப்படி அளவிடுதற் கரிதான பரமசுகங் கைகூடினகாலத்தே, இவனிடத்து வேறொன்றும் வந்து கூடாதபடி இந்தச்சுகந்தானே இவனைவேறற அடைவித்துக் கொள்ளுமென்று அருளிச்செய்கின்றார்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளானேன் றுந்தீபற
வுன்னையே யாண்டதேன் றுந்தீபற.

(இ-ள்.) பேரின்பமான பிரமக்கிழத்தியோடு ஓரின்பத்து உள்ளானென்று உந்தீபற - ஒருவனை ஓரின்பம் வந்தடுத்தகாலத்தே இதற்கு

ஓரளவுமுண்டாய் இது நீங்கினகாலத்துச் சுகமான அந்த இரதந் துக்கமாகவும் வந்து கூடாநிற்கும்; ஆதலால், இந்தச் சுகதுக்கங்கள் இரண்டும் வந்துகூடாதபடி தம்பிரானுர் திருவடியிலே அடைந்தகாலத்தே இவளவிடுதற்கரிதாகி விளைந்த அநுபோகரசமானது பரமாநந்தமாகிய பிரமசத்தியினைக் கூடினபொழுதே ஒருதன்மையான சுகசொரூபமாய் விடும்.—உன்னையே ஆண்டதென்று உந்தீபற - இப்படியே அசத்தியத்தைச் சத்தியமாகக் கொண்டொழுகின உன்னையும் மேலாயுள்ள ஞாநந்தத்திலே சேர்த்தடிமைகொண்டது என்க. (கச)

இந்தப்பேற்றைப் பெற்றவர்களுக்குத் தேகநிற்கின்றபோதும் ஆன்மாவின் செய்கை கிளையாமல் ஒடுங்கிச் சிவனுடைய செய்தியாய் நிற்கு நிலைமையை அருளிச்செய்கின்ருர்.

பெண்டிர் பிடிபோல் வாண்மக்கள் பேய்போலக்
கண்டாரோ கண்டாரோன் றுந்தீபற
காணுதார் காணுரோன் றுந்தீபற.

(இ-ள்.) பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக் கண்டாரோ கண்டாரொன்று உந்தீபற - ஆன்மாவானது ஒருத்தியைப் பேய் பிடித்தகாலத்துத் தன்னுடையசொரூபம் வேருகாதிருக்க மனமும்வாக்குஞ் செயலும் பேயின்வசத்தேயாய்த் தன்னைமறந்து பேயெனநின்ற தன்மைபோலவும், நாயகரான தம்பிரானுர் தேகியை ஆவேசித்த பிசாசமானது தன்னுடையசொரூபம் ஒருவர் காணநின்று தேகியினுடைய செயலையழித்துத் தன்னுடையசெயலே பிரகாசிப்பித்துத் தானேதேகியாய்நின்ற தன்மைபோலவும், இப்படிப் பாவனையாற் பாவகமாகக்கூடிநின்றவரோ சிவனை உள்ளபடிகண்டு கூடினவர்கள்,—காணுதார் காணுரொன்று உந்தீபற - இப்படிக்கண்டு கூடாதார் எக்காலமும் விழியாத கண்ணையுடையவர்கள் என்க. (கரு)

இந்நிலைகூடாதவர்களுக்கு வேறேயு மோருபாயமுண்டென்றருளிச்செய்கின்ருர்.

நாலாய பூதமு நாதமு மோன்றிடி
ஞலா நிலையாமேன் றுந்தீபற
நாதற் கிடமதேன் றுந்தீபற.

(இ-ள்.) நாலாயபூதமும் நாதமும் ஒன்றிடின் நாலாநிலையாமென்று உந்தீபற - சுக்கிலசுரோணிதத்தின் றலையிலே சீவன் பதிகின்றவளவில் சிவனுடைய கிரியாசத்தியாலே நாலாம்பூதமாகிய வாயுவுஞ் சத்தப்பிரமமான நாதமுங் கூடப்பதிந்து சரீரம் பரிணமிக்க வாயுவானது நாடிகடோறும் பூரணமாகப் பிரதானவாயுவான பிராணவாயுவும் பின்பு மரணமுண்டாக்குதற்பொருட்டு நாபிசக்கரத்தின் கீழேசென்று பதியாநிற்குஞ் சத்தப்பிரமமான நாதாந்தந் தானந்தோறுநிற்கு மெழுத்துகளாகிச் சென்று பின்பு மரணமுண்டாக்குகை காரணமாக மூலாதாரத்திலே பிரணவமாகப்பதிந்து கிடவாநிற்கும். இவற்றைத் தேசிகனருளாலே அறிந்து சத்திபீசத்தையுஞ் சிவபீசத்தையுங் கொடுத்துத் திருமந்திரப் பிரசாதமாக்கி மனத்தை ஒருமைப்படுத்தி, இந்தத் திருமந்திரப் பிரசா

தத்தைக்கொண்டே நாதத்தையெழுப்பி, இந்த நாதத்தையும் பிராண வாயுவையுங் கூட்டிச் சுழுமுனைவழியே செலுத்தி முன்பு தோன்றின பிரமரந்திரத்திலேகூடித் தான் பரமாகாசத்தில் அழுந்தில், நாலாநிலை யாகிய சாயுச்சியம் அப்பொழுதே கைகூடும்.—நாதற்கு இடமதென்று உந்தீபற - கர்த்தா எழுந்தருளியிருக்கத்தக்க இடமும் அவனைக் கூடு கைக்கு இடமும் அதுவே என்க. (௩௬)

இப்படியன்றி வேறுவழிகளிற்சென்று தற்போதத்தாற் கூடத்தக்கதென்று பாவித்து ஜநநமரணங்களிலேவிழுந்து அழுந்தாதிருக்கும்படி அருளிச்செய்கின்றார்.

சென்ற நெறியெல்லாஞ் செந்நெறி யாம்படி
நின்ற பரிசறிந் துந்தீபற
நீசெயல் செய்யாதே யுந்தீபற.

(இ-ள்.) சென்ற நெறியெல்லாஞ் செந்நெறியாம்படி நின்ற பரிசு அறிந்து உந்தீபற - கன்மங்களுக்கீடாகத் துணைசெய்கிறமனுதிகளுடனே கூடி நச்சுவழியான விலக்கடியென்னும் ஐந்துபொறிவழியுஞ் சென்று விடயங்களிலே பொருந்தி இதாகிதங்கள்கூடி மறுமைக்கு வித்தாகிய குற்றங்களை விளைவிக்கின்ற வழிதானே, ஐயமற்ற சூதானப்பெருவழி யாம்படி, தேகங்கூடினபடியுந் தேகத்திலேதானிற்கிற முறைமையுங் கன் மங்கள்வந்து கூடுமுறைமையுந் தன்னுடையபோதம் இந்தவகைதெரி யாமல் இந்திரிய கரணங்களுடனேகூடி நின்று சலித்த முறைமையும் (காந்தமும் பசாசமும்போலத்) தம்பிரானர் சந்நிதியிலேகூடிச் சீவிக்கு முறைமையும் அருட்கண்ணாற் கண்டு தன்செயலறநிற்க, பிராரத்தமுந் தொலைந்து ஆகாமியமுமேறாமற் பின்பு தேகாந்தத்திலுந் திருவடியிலே கூடுகைக்குக் காரணமாம்; ஆதலாற் பக்கநோக்காமல் ஒரு நிலையிலே நில்.—நீசெயல் செய்யாதே உந்தீபற - இப்படியொழிந்து உன்னுடைய செயலாலே கூடத்தக்கதென்று பாவித்து ஜநநமரணங்களிலே விழுந்து அழுந்தாதே என்க. (௩௭)

இப்படித்தேசிகன் கடாக்ஷத்தாலேபெற்ற திருவருளைக்கொண்டு ஜநநமரணங் களுக்கு உற்பத்தி தேடாமல் எந்தவுபாயத்தினாலேயாயினுந் திருவடியை அடை கைக்கு விரும்புவதே பொருளென்று அருளிச்செய்கின்றார்.

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதே
னக்கொழு நீயறிந் துந்தீபற
வறிந்தறி யாவண்ண முந்தீபற.

(இ-ள்.) பொற்கொழுக்கொண்டு வரகுக்கு உழுவது என் அக் கொழு நீ அறிந்து உந்தீபற-பொன்னாலேசமைத்தகொழுவைக்கொண்டு வரகு விளைய உழுதகாலத்திற் பலமுங் குறைந்து மிகுந்த சேதமு மாய் உழவு பிழைத்ததன்மைபோல, தேசிகனாலே பெற்ற திருவருளைக் கொண்டு பிழையே பெருக்கி ஜநநமரணங்களிலே போக்கு வரவு செய்யவுற்பத்தியான இந்திரிய விடயங்களில் நீ அழுந்தாதே, அந்தத் திருவருள் முன்பு தோன்றமல் நின்று உபகரித்த முறைமையறிந்து, தோன்றின பின்பு அது கண்ணாக அதிலே கூடியழுந்தினகாலத்து ஜநந மரணங்களுஞ் சுகதுக்க வேதனைகளுநீங்கி, ஒருகாலத்தினு நீங்காப் பரமாநந்தமே விளையுமென்னும் படியும் அறிந்து, தன்னுடைய செயலற அதுவாய் நிற்கின்றதே நிலை.—அறிந்து அறியாவண்ணம் உந்தீபற - இப் பொருளை உணராதே யுணர்ந்து நில் என்க. (௩௮)

இப்படி உணர்த்தாநின்ற சிவனை உணராதே யுணரக்கூடாதாகிற் சிவனைப் பாவித்து நிற்கவே இந்தவுண்மை கூடுமென்று அருளிச்செய்கின்றார்,

அதுவிது வென்ன வனைத்தறி வாகு
மதுவிது வென்றறிந் துந்தீபற
வவிழ்ந்த சடையாரோன் றுந்தீபற.

(இ-ள்.) அது இது என்று அறிந்து அது இது என்ன அனைத்து அறிவாகும் உந்தீபற - ஆன்மாவினுடைய கருத்துப்போல அநாதியே மறைத்த சகச மலத்தாலே மாயையும் கன்மமும் பொருந்திய ஜநநத்தையே விளைவித்து இந்திரிய வியாத்தனாய் விடயங்களிலே பொருந்துங்காலத்து, இரண்டு பொருளைச்சேர வறியமாட்டாமல் ஒன்றொன்றாக அறிந்தும், அறியுங்காலத்திலே அது விதுவென்று சுட்டிப் பற்றிநின்று சலித்து மயக்கவிகற்பங்களிலேயடைந்து பொய்யைமெய்யெனக் கருதித் தன்னுடைய வுண்மை விளங்காமல் இரவு பகல் அகப்பட்டவாகாசம் போல இடைவிடாமல் நின்றழுந்தாதே, தம்பிரானுடைய கருத்தானது அநாதியேயுள்ள காருண்ணியத்தின் மிகுதியாலே ஆன்மாக்களுடைய மலமாயை கன்மங்களைத்தொலைப்பித்துத் திருவடியிலே கூட்டவேண்டுமென்கிற இச்சையாலே, ஆன்மாக்களுக்கு அநாதியே பிராணனாய்நின்றும் அவ்வக்கன்மங்களுக் கீடானவைகளைத் திருவுளத் தடைத்துச் சர்வத்தையும் ஒருகாலத்திலே சேரவுணர்ந்தும் உணர்த்துவித்தும் புசிப்பித்தும் பிரிப்பித்தும் ஒடுக்குவித்துஞ் செய்யாநிற்க, தானென்றையும் அதுவிதுவென்று சுட்டிப் பற்றிநின்று சலியாதே தன்னுடைய அருளாலேநடக்கத் தானெழிவற நிறைந்து மயக்கவிகற்பங்களுமின்றி அசைவற நில்லாநிற்கும் அந்தப்பொருள் அநாதியே இவன்றனாய்நிற்கிற முறைமையை அருளாலேயறிந்து ஆன்மபாவனையைவிட்டுச் சிவபாவனையிலே நிற்க. —அவிழ்ந்த சடையார் என்று உந்தீபற - இப்படிக்கூடி நிற்கின்ற பொருளே ஒருவராற் சுட்டப்படாத விரிந்த சடாபாரத்தையுடைய தம்பிரானார் என்க. (௩௯)

நின்மலரான தம்பிரானார் ஆன்மாவுடனேகூடி ஆன்மாவாய் நிற்கைக்குக் காரணம் அவருடைய காருண்ணியத்தின் மிகுதியேயென்று அருளிச்செய்கின்றார்.

அவனிவ னான தவனரு ளாலல்ல
திவனவ னாகானேன் றுந்தீபற
வேன்று மிவனேயேன் றுந்தீபற.

(இ-ள்.) அவன் இவனானது அவன் அருளால் அல்லது இவன் அவன் ஆகானென்று உந்தீபற - வாக்குமனாதீதமா யிருக்கத்தக்க தம்பிரானார் பிராணனாயிருக்கும்போதும் அநாதியே பசுத்துவமான ஆணவமலம் உண்டாகையால், இந்த ஆணவமலம் பக்குவப்பட்ட வவசரத்திலே (செம்பிற்கிடந்த மாற்றுப் பிரகாசித்துப் பொன்னென்னும் பெயர்பெற்றாற்போல) தம்பிரானாரும் பிரகாசித்து இவனைத் திருவடியிலே கூட்டிக்கொள்ளுதற்பொருட்டுத் தம்முடைய காருண்ணியத்தினாலே இவனாகவெழுந்தருளி நின்றதொழிந்து சிவபிரானன்மாவாகின்றாரல்லர். ஆன்மாவுந் தம்பிரானார் திருவடியிலேகூடிப் பரமாநந்தத்தை அனுபவிக்கிறதொழிந்து சிவனாலாய பஞ்சகிருத்தியங்கள் நடத்துகையில்லை. —என்றும் இவனே என்று உந்தீபற - சிவன் தம்முடைய கருணையாலே ஆன்மாவாகியுஞ் சிவனாகியுநிற்கவல்லர். ஆன்மாவானவன் என்றுந் தன்னுண்மைகுன்றாமற் கூடினதொன்றிலே அதுவாய் நிற்க வல்லன் என்க.

இந்தப்பொருளைக்கூடாமல் அநாதியே யுண்டாகத்தக்க விக்கினமும் அது தீருமுபாயமும் அருளிச்செய்கின்றார்.

முத்தி முதலுக்கே மோகக் கோடிபடர்ந்
தத்தி பழுத்ததென் றுந்தீபற
வப்பழ முண்ணுதே யுந்தீபற.

(இ-ள்.) முத்திமுதலுக்கே மோகக்கொடி படர்ந்து அத்தி பழுத்தது என்று உந்தீபற - முத்தியைப்பெறுகைக்கு முதன்மையான ஆன்மாவிலே அநாதியே மறைக்கத்தக்க ஆணவ மலத்தின் காரியமான அஞ்ஞான மென்னுங்கொடி வெகுவிதங்களாகப் படர்ந்து, இதாகிதங்களே விளைந்து இவை காரணமாக மயக்கத்தைச் செய்கிற மாயையாலே பூத காரியமான வுடம்பு ஜநநந்தோறும் பலியாநிற்கும்.—அப்பழம் உண்ணுதே உந்தீபற - இந்தப்பழத்தை அருந்தி நரகவேதுவாகாதே, ஆசாரியன் கடாக்ஷத்தாலே பெற்ற அருளாகியவாளாலே ஆணவமலமாகிய மூலத்தை வேரறுத்து முத்திப்பழமாகிய பரமாநந்தத்தை அனுபவித்துச் சிவனுடனே ஒரு தன்மையாய்விடுக என்க. (சுக)

இப்படியொழியப்பரிபூரணத்துவமாக நிற்கத்தக்கதோருபாயமருளிச்செய்கின்றார்.

அண்ட முதலாமனைத்தையு முட்கோண்டு
கோண்டத்தைக் கோள்ளாதே யுந்தீபற
குறைவற்ற செல்வமேன் றுந்தீபற.

(இ-ள்.) அண்டமுதலாம் அனைத்தையும் உட்கொண்டு கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற - அண்டமென்று சொல்லப்பட்ட சக்கரவாளகிரியும் மகாமேருவும் அண்டகோளகையும் அட்டகுல பருவதங்களுந் திக்கயங்களும் அட்டநாகங்களுஞ் சத்தசமுத்திரங்களுஞ் சத்தமேகங்களும் பதினன்கு புவனங்களுந் தேவர் அசுரர் சித்தர் வித்தியாதரர் கின்னரர் கிம்புருடர் மற்றுமுண்டான அண்டர் முதலாக வுள்ளிட்ட பேதங்களுஞ் சந்திராதித்தரும் பஞ்சபூத பரிணமங்களும் பேய்த்தேர் போன்ற வியாபாரங்களும்பொதிந்த திரட்சியோரண்டமாக வளர்ந்த கோடியண்டங்களும், இப்படி ஒவ்வோர் அண்டங்களைத் தசமடங்கு பொதிந்தசலமும், அந்தச்சலத்தைத் தசமடங்கு பொதிந்த அக்கினியும், இந்த அக்கினியைத் தசமடங்கு பொதிந்த வாயும், இந்தவாயுவைத் தசமடங்குபொதிந்த ஆகாசமும், இவை யெல்லாவற்றையுஞ் சேரப்பொதிந்த பேரண்டத்தையும், இவை யெல்லாவற்றிற்கு மேற்பட்டு நின்மலமாய் நிற்கிற நாதசொரூபத்தையும், இதற்கும் அப்பாற்பட்ட நின்மலமாயெல்லைப்படாத பரமாகாசமான பெருவெளியையும், உனக் குடம்பாகிநின்று உனக்கு நிலைநின்றவாறே உன்னை யுணர்த்தின சொரூப வுடம்பாகிநின்று, ஆன்மபோதத்தையும் இந்தப் பரிணமங்களையுஞ்சேர நினைவறவிடுவாயாக.—குறைவு அற்ற செல்வமென்று உந்தீபற - அப்பொழுதே நீ அகண்டபரிபூரணனுய்விடுவை என்க. (சுஉ)

இப்படிப்பெற்றும் இந்த வுண்மையில் நில்லாமல் தேகத்தையும் விசுவத்தையுமெய்யென நின்றாருடைய வுண்மையை அருளிச்செய்கின்றார்.

காயத்துண் மேய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரேன் றுந்தீபற
வரட்டுப் பசுக்களேன் றுந்தீபற.

(இ-ள்.) காயத்துள் மெய்ஞ்ஞானக்கள் உண்ணமாட்டாதே மாயக்கள் உண்டாரென்று உந்தீபற - தேகத்துநிற்கிற தேகியான சிவனுடைய

சத்திய ஞானமான திருவடித்தாமரையி லுண்டான பரமாநந்தத்தேனு கிய மதுவையுண்டு தேகவிசுவங்களுந் தெரியாமல் தன்னையுஞ் சிவனை யும் அறியாதபடி சீவேசுவரத்துவத்திலே அடையாதே (மிகவும் பசித் தானொருவன் தன்கையில் வந்திருந்த பாற்றிரளைப்போட்டு நாவுக்கெட் டாத முழங்கையைநக்கிப் பசிதீரவிசாரித்த தன்மைபோல) பேய்த்தேர் போன்ற விசுவத்தையும் இந்திரசாலம்போன்ற வாழ்வையும் மெய்யெ னக்கருதி நரகவேதுவான விடய சமூகங்களி னுண்டாகும் இதாகிதங் களாகிய மதுவையுண்டார்கள்.— வரட்டுப் பசுக்களென்று உந்தீபற - அவர்களே ஒரு காலங்களினும் பயன்படாத ஆன்மாக்கள் என்க. (௩௩)

இப்படியாவராலும் பெறுதற்கரியபேற்றைக் காருண்ணியத்தின் மிகுதியாலே தந்தகுருவைத் தம்முடைய சிநேகத்தின் மிகுதிப்பாட்டாலே துதிக்கின்றார்.

சிந்தையி னுள்ளுமேன் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கவேன் றுந்தீபற
மடவா ளுடனேயேன் றுந்தீபற.

(இ-ள்.) சிந்தையின் உள்ளும் என்சென்னியினுஞ்சேர வந்தவர் வாழ்கவென்று உந்தீபற - ஒழிவறநிறைந்த தம்பிரானார் அநாதியே அடி யேனுக்குப் பிராணனாயிருக்க, அநாதியே யுண்டானமலத்தின் மிகுதிப் பாட்டாலே ஜநநமரணங்களிலே யுழன்று போக்குவரவே பொருளாகத் திரிந்த அடியேனைத் தம்முடைய காருண்ணியத்தின் மிகுதியாலே பொருந்தின திருமேனியுடனே எழுந்தருளிவந்து, மலமாயை கன் மங்களும் ஜநந மரணங்களுங் கூடாதபடி, என்னுடைய பொல்லாப் புலாற்றலையிலே யாவராலுங் குறித்தற்கரிய சிவகந்தத்தை யுடைத்தா கிய திருவடித்தாமரையைச் சேர்த்தும், அந்தத்திருவடி அடியேனுக்கு அநாதியே பிராணனாய்நின்ற முறைமையை யுணர்த்தியும், என்னுடைய சித்தமானது சலியாமல் அந்தத்திருவடியுடனே விட்டு நீங்காமல் ஒரு வழிப்படக்கூடி வேறறநிற்கு முபாயத்தைத்தந்தும், இப்படித் துக்க சாகரத்தினின்றுங் கரையேற்றின தம்பிரானார் காலங்காட்டாத சுக சொரூபத்துடனே மேன்மேலும்வாழ்வார். —மடவாளுடனே யென்று உந்தீபற - சருவான்மாக்களும் ஈடேறுகைப் பொருட்டால் அநாதியே யுண்டான காருண்ணிய சத்தியுடனேயும் அனவரதமுங் கூடிவாழ்வார்.

இந்தத் திருவுந்தியார் அருளிச்செய்த தம்பிரானார் இந்தச் சாத்திரத்தின் மகிமையுந் தம்முடைய திருநாமமுந்தோன்ற அருளிச்செய்கின்றார்.

வைய முழுது மலக்கயங் கண்டிடு
முய்யவந் தானுரை யுந்தீபற
வுண்மை வுணர்ந்தாரோன் றுந்தீபற.

(இ-ள்.) உய்யவந்தான் உரை வையமுழுதும் மலக்கயங் கண்டிடும் உந்தீபற-உய்யவந்ததேவரால் அருளிச்செய்யப்பட்ட இந்தத் திருவுந்தி யாரென்கிற சாத்திரத்தைக் குருமுகத்தாலேகேட்டு, இதனுடைய சம்பிர தாயத்தை அறிந்தவர்கள் அநாதியே தொடங்கியுழன்று போந்த தேக விசுவங்களி னுண்மை அஞ்ஞான சாகரமென்றே விட்டேறி;—உண்மை உணர்ந்தாரென்று உந்தீபற - உண்மையென்னுந் திருவடியாகிய நெடுங் கரையிலே சேர்ந்து பரமாநந்தமே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

திருவுந்தியார்முற்றியது.
உய்யவந்ததேவர்திருவடிவாழ்க.
திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர் - உய்யவந்ததேவநாயனார்

அருளிச்செய்த

திருக்களிற்றுப்படியார்.

நேரிசைவெண்பா.

98 அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார்போ னிற்பா ரவர்.

(இதன்பொருள்.) அம்மை அப்பரே உலகுக்கு அம்மை அப்பர் என்று அறிக - மாணவகனே! சங்காரமானகாலத்து மலசகிதரானமூன்று வகைப்பட்ட ஆன்மாக்களையும் மாயைகளிலே ஒடுக்கி, இந்தமலமாயை கன்மங்களுடனே ஆன்மாக்களையுஞ் சிவசத்தியிடத்திலே ஒடுக்கி, இந்தச் சத்தியையுந் தம்மிடத்திலே கரந்துகொண்டு சிவமொன்றுமேயாய் நிற்கையில், பின்பும் இந்தக்காலமானது சென்று சிருஷ்டிகாலமான அவசரத்திலே, தம்முடைய காருண்ணியத்தின் மிகுதியாலே, இருந்த ஆன்மாக்களைப் பக்குவப்பட்ட கன்மமலத்தைக்கூட்டிப் புசிப்பிக்கவும் ஆணவமலத்தைப் பக்குவமாக்கும் பொருட்டும் அந்தச்சத்தியை மீண்டும்பிரகாசிப்பித்து, அந்தச்சத்தியிடத்திலே தாமும் பொருந்தி அந்தச்சத்தியில் ஒடுங்கிக்கிடந்த மலசகிதரான ஆன்மாக்களையுந் தோற்றுவித்து, இவர்களுக்கு முன்புவிட்ட குறைக்கிடான தனுகரண புவனபோகங்களையுங்கொடுத்துத் தாமும் முதல்கெடாமல் நின்றும் அவர்களைக் கன்மமலங்களுக் கிடாகநின்று புசிப்பித்து, இப்படிச்செய்கிற தம்மையும் இந்த வுபகாரங்களையுந் தெரியாமல் விஷயங்களிலே இரேசிக்கும்படி திரோபவித்து, இந்த நான்குகிருத்தியங்களினாலுங் கன்மமுந்துலையொத்து மலபாகமுமுண்டாய் இவர்கள் முத்திக்குப் பிராத்தராவதெப்போதென்று அநவரதமுந் திருவுள்ளத்தினால் அநுக்கிரகமே பண்ணி, இப்படியுள்ள பஞ்சகிருத்தியங்களைத் தம்முடைய அருளாலே நடத்திப்போதாநின்ற காலங்களிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களை அறிந்து அவர்கள் அளவுக்களவான தீக்ஷைகளாலே இரக்ஷித்து முறைமையிலே கூட்டிக்கொள்ளுகையால், இந்தச் சத்தியையுடைய சிவனே சர்வலோகங்களுக்குந் தாயுந் தந்தையுமென்று அறிவாயாக. பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தம்முடைய அருளாலே நடத்திப் போதராநின்ற காலங்களிலே இரக்ஷிக்கு முறைமை எப்படியெனில்? —அம்மை அப்பர் அப்பரிசேவந்து அளிப்

பர் - அந்தச்சத்தியையுடைய சிவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களை அறிந்து ஒருமலத்துடனேநின்ற விஞ்ஞானகலரிற் பக்குவர்க்குப் பிராணனாய் நின்று அம்முறைமையிலே பிரகாசித்தும், இரண்டுமலத்துடனே நின்ற பிரளயாகலரிற் பக்குவர்க்குத் திவ்வியமான திருமேனியுடனே தோன்றி அந்தத்தரிசனத்தால் இரக்ஷித்தும், மூன்றுமலத்துடனேநின்ற சகலரிற் பக்குவர்க்கு அவர்களைப்போன்ற திருமேனியுடனே எழுந்தருளிவந்து சத்திநிபாதத்துக்கீடாக நான்குவகைப்பட்ட தீக்கைகளாலும் "திருநோக்கால் பரிசத்தால் திகழும்வாக்கால் பாவனையால் மிகுநூலால் யோகப்பண்பால்" என்கிற பிரமாணப்படியே ஆறுவகைப்பட்டகாருண்ணியத்தாலும் இரக்ஷித்தும், இப்படி இந்தமுறைமைகளிலே அநுக்கிரகியாநிற்பார்; இப்படித்திருமேனி கொள்வாராயின் அவரும் இந்தவுலகங்களிலுள்ளாரிலே ஒருவராகாரோவெனில்?— அம்மை அப்பர் எல்லாவுலகுக்கும் அப்புறத்தார் - அருளாலே திருமேனிகொண்டு இரக்ஷித்ததொழிந்து அவருண்மையை ஒருவரும் அறியார். அறியுமிடத்துப் பிருதுவிமுதல் நாதமீறான தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு நின்றே அறியவேண்டுகையால் அறியப்பட்ட சத்தியையுடைய சிவனும், இந்தச் சர்வலோகங்களுக்கும் அப்பாற்பட்டே யிராநிற்பர். சிவன்பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டே யிருப்பாராகில் பிரபஞ்சமானது தானே நடந்ததோவென்னில்?—அவர் இப்புறத்தும் அல்லார்போல் நிற்பார் - அவர் தம்முடைய அருளாலே சர்வலோகங்களையும் நடத்தும் பொருட்டுத் தம்முடையசொரூபந்தோன்றாதபடி அறுவகைப்பட்ட அத்துவாக்களை திருமேனியாகக்கொண்டு தத்தம் பிரக்கினையாலே பிரபஞ்சநடவாநிற்கத் தாம் அவை அவராய் அசைவின்றியே ஒருபணியற நில்லாநிற்பர் என்க.

இதனாலே கர்த்தர்வுஞ், சத்தியும், மூன்றுவகைப்பட்ட ஆன்மாக்களும், மலங்களும், பஞ்சகிருத்தியங்களும், மூன்றுவகைப்பட்ட ஆசாரியமூர்த்திகளும், தீக்ஷாக்கிரமங்களும், பதமுத்திகளும், சாயுச்சியமும், கருத்தாவேகதேசியுமல்லர் பரிபூரணருமல்லர் பூவிற்கந்தம்போலப் பக்குவங்களிலே பிரகாசிப்பரென்னு முறைமையும், அவர் கிருபாமூர்த்தியென்னு முறைமையும், சர்வத்தையுங் கூடிநிற்பினும் ஒன்றோடுந் தோய்விலரென்னு முறைமையும் அறிவிக்கப்பட்டன. (க)

இப்படிச்சிவரூபத்தைத் தரிசித்துக் கூடுமுறைமை எப்படியென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

௧௧ தம்மிற் றலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்
தம்மிற் றலைப்படுத ராமுணரிற்—றம்மி
னிலைப்படவே ரோரிருவர் நீக்கிநிலை யாக்கித்
தலைப்படுவர் தாமத் தலை.

(இ-ள்.) தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டு - தத்தமிடங்களிற் பக்குவமறிந்து எழுந்தருளிவந்த ஆசாரியரிடத்திலே தாமுங்கூடி வழிபட்டு,—தம்மில் தலைப்படுதல் தாம்உணரில் - ஆசாரியரதநுக்கிரகத்தாலே முன்பு தாமாக அபிமானம் பண்ணியிருந்த தேகாதிகளைத் தமக்குவேறென்றறிந்து நீக்கித் தம்மையுந் தரிசித்துத் திருமேனிகொண்டெழுந்தருளி வந்துணர்த்தின தம்பிரானார் தம்மிடத்திலே நின்று பிரகா

சிக்கிற முறைமையும் தாம் அறிந்து,—தம்மின் ஓரிருவர் நிலைப்படுவர்-தம்மிடத்திலே அநாதியேதோன்றுமல் நின்றுநடத்திப் பக்குவமாக்கி, அந்தப்பக்குவத்திலே இப்படித்தரிசிப்பித்த இந்தஞானஞேயங்களாகிய சத்திசிவமான இரண்டுமுதலுந் தோன்றுநிற்கும்.—நீக்கி அத்தலைதாம் நிலையாக்கித் தலைப்படுவர் - இப்படித்தரிசிக்கிறேமென்கிற தம்முடைய சுட்டானபோதத்தைவிட்டு, அந்தஞானத்திலே பொருந்திநிற்கில், அப்பொழுதே அந்தஞேயசொரூபமாகிய சிவமுங்கூடி அந்தச்சிவமாகியே பிரகாசியா நிற்பர் என்க. (உ)

இந்த அவசரத்தை அடியேனுக்குக் கடாக்ஷித்தருளவேண்டுமென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

100 என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி
யேன்னறிவி லாரறிக வேன்றேருவன்—சோன்னபடி
சோல்லக்கே ளேன்றேருவன் சோன்ஞ னேனக்கதனைச்
சோல்லக்கே ஞுனக்கச் சோல்.

(இ-ள்.) ஆசாரியரதநுக்கிரகத்தாலே என்னுடைய பசு ஞானம் போனவளவில், நான் அந்த வவசரத்திலே நின்று அநுபவிக்கிறபடி எப்படியெனில்? பசுஞானம்போய்ச் சிவஞானத்திலே அபேக்ஷை யுண்டானவர்கள் அறியுங்களென்று, ஒரு பரமாசாரியர் அருளிச்செய்தபடியே சொல்லக்கேளென்று, எனக்கு ஒரு பரமாசாரியர் என்னுடைய பக்குவத்துக் கீடாகப் பாரம்பரியம்போல ஒருபாயமாக அருளிச்செய்தார்; அந்தவவசரத்தை அந்தமுறைமையிலே, நான் உனக்குச்சொல்ல, மாணவகனே! நீ புத்திபண்ணிக்கேட்பாயாக என்க. (ரு)

பசுஞானம்போய்ச் சிவஞானத்திலேநின்று அனுபவித்தபடியே கேளென்று ஆசாரியன் அருளிச்செய்கையால், ஆசாரியனும் ஆன்மாக்களில் ஒருவனேயென்ற மாணவகனைநோக்கி அருளிச் செய்கின்றார்.

1 அகளமய மாய்நின்ற வம்பலத்தேங் கூத்தன்
சகளமயம் போலுலகிற் றங்கி—நிகளமா
மாணவ மூல மலமகல வாண்டனன்காண்
மாணவக வேன்னுடனுய் வந்து.

(இ-ள்.) அம்பலத்து அகளமயமாய் நின்ற எம் கூத்தன் உலகில் சகளமயம்போல் தங்கி - திருவம்பலத்தே, ஞானமயனுய் ஆநந்தநிருத்தஞ் செய்தருளுகின்ற எம்முடைய சுவாமி, (தன்னுடைய காருண்ணியத்தின் மிகுதியாலே, என்னுடைய பிறவித்துன்பத்தைப் போக்கும் பொருட்டாக, எனக்கு ஞானக்கண் ணில்லாமையினலே, ஊனக்கண்ணுக்குத் தோன்ற, விலங்கு சாதிகளை உபாயமாகப் பார்வையிட்டுப் பிடிப்பாரைப்போல, சர்வமுந் தனக்குத் திருமேனியாகையால், என்னைப்போலச் சகளீகரித்து) விசுவத்தில் ஒரு தேகிபோலத்தோன்றி.—மாணவக நிகளமாம் ஆணவ மூலமலம் அகல என்னுடனுய் வந்து ஆண்டனன்காண் - மாணவகனே! (ஆன்மாவையும் மாயாதேகத்தையுங் கூட்டிப்) பிணிக்குக் காரணமான விலங்காகிய கன்மமுண்டாம்படி நிற்கின்ற ஆணவமலமாகிய மூலமலம் விட்டுப்போம்படி, அநாதியே என்

னைவிட்டு நீங்காமல் நின்றும், இப்பொழுது பக்குவப்பட்ட அவசரத்திலே இப்படித் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து (என்னுடைய பிறவிநோய்க்கீடாக உபாயமாகவே அவனே சம்ஸ்காரங்களினாலே பேதித்து) அடிமைகொள்ளும் பொருட்டாக இப்படி அருளிச்செய்த தொழிந்து, வாக்குமநாதீதகோசரமாயுள்ள சிவன் ஆன்மாவாவனோ?

இப்படிப்பட்ட இவன் திருமேனிகொண்டு இரக்ஷிக்கவேண்டுமோ தானே இரக்ஷிக்கமாட்டானோவென்ற மாணவகனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

உ ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பேருவடிவை யாரறிவார் பேசு.

(இ-ள்.) எனக்கு அநாதியே தொடங்கி விடியாமல்நின்ற பேரந்தகாரமான ஆணவமலம் பக்குவப்பட்டபடியறிந்து, பரமேச்சுரன் தன்னுடைய வருளாலே திருமேனிகொண் டெழுந்தருளி வந்து, என்னுடைய மலமாயை கன்மங்களையும் விடுத்து, என்னையும் என்னுடைய சுதந்திர வீனத்தையும் அறிவித்து, தன்னுடைய வடிமையாகக்கொண்டு ரூபசொரூபங்களையும் எனக்கேற்பத் தெளிவித்து, தன்னுடைய பரமாநந்த போகத்திலே என்னைத் திருத்தியடைவித்து ஆண்டிலனாகில், அவனுடைய எல்லைப்படாத சொரூபத்தை அறியவல்லார் யார்? அதனை அநாதியே சொல்லப்பட்ட ஆகமங்களும், அவற்றிலே வகுப்புண்ட ஆறுசமயங்களும் அந்தச்சமயங்களில் முடிந்தபொருளின் யோகங்களும், இவற்றை அறியத்தக்க விவேகஞானங்களும் என்செய்யவற்று? இதனை விசாரித்துச் சொல்லாய் என்க. (ரு)

ஆனால், சாத்திரத்தாற் பிரயோசனம் ஒன்றுமில்லையோவென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

3 சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே—யார்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தேண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

(இ-ள்.) சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின்றன் வசன மாத்திரத்தே வாய்த்த வளம் வந்துறுமே - உபதேசமின்றியே சாத்திரமாத்திரமே ஓதினால், திருமேனிகொண்டெழுந்தருளி வந்த ஞானசாரியன் கருணையாலே உபதேசிக்கத்தக்க சத்தானவார்த்தையிலே உண்டாகும் பெரியபிரயோசனம் உண்டாகமாட்டாது. அதென்போல வெனில்? — ஆர்த்தகடற்றண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ தெண்ணீர்மையாய் இதனைச்செப்பு - ஆரவாரத்தையுடைய கடலினீர்பெரிதென்று மிகக்குடித்தாலும் சற்றுந் தாகந்தணியாது. (அந்தக்கடலினீர் மேகத்தின் கைப்பட்டு வந்தபொழுதே குறைந்தசலத்திலே மிகுந்ததாகந்தணியாநிற்கும்; அதுபோலச் சாத்திரமுங் குருமுகத்தாலே பெற்றாலொழிந்து பிரயோசனமாகாது.) தெளிந்த நீர்மையினையுடையாய் இதிலே சந்தேகமுண்டாயிற்சொல் என்க. (சு)

ஆசாரியனும் எம்மைப்போல ஒருடம்பிலே நின்றதற்குத்தக்க கிருத்தியங்கள் செய்துநிற்கும் போதும், ஆன்மாக்களுடைய மலங்களைப் போக்கிச் சுத்தஞானத்தைப் பிரகாசிப்பிக்கவல்ல சாமர்த்தியத்தையுடையனோவென்று ஐயப்பட்ட மாணவகனைநோக்கி, இதனை இன்னமும் விளங்க அருளிச்செய்கின்றார்.

4 இன்று பசுவின் மலமன்றே யிவ்வுலகி
னின்ற மலமனைத்து நீக்குவதிங்—கேன்று
லுருவுடையா னன்றே யுருவழியப் பாயு
முருவருள வல்லா னுரை.

(இ-ள்.) இவ்வுலகில் நின்றமலம் அனைத்தும் இன்று பசுவின்மலமன்றேநீக்குவது இங்கு - இந்தவுலகத்தில் எல்லாமலங்களையும் இப்பொழுது பசுவின்மலத்தாலன்றோ போக்கப்பட்டது,—என்றால் உரு அழியப் பாயும் உரு அருள வல்லான் உருவுடையானன்றே உரை - ஆனால் அநாதியே கூடிப்போதுகின்ற தேகாதிகளானவை பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இல்லையாய்விடும்படி, பொருந்தப்பட்ட சுத்தரூபமான ஞானத்தைப் பிரகாசிப்பிக்கவல்ல சாமர்த்தியன், திருமேனிகொண்டெழுந்தருளி வந்த ஆசாரியனன்றி வேறொருவர் உண்டோ சொல் என்க. (எ)

இப்படிப்பட்ட ஞானசாரியன் பிரசாதத்தைப் பெற்றவர்கள் பெருமையை அருளிச்செய்கின்றார்.

5 கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவரோ
யண்டத்தி னப்புறத்த தென்னதே—யண்டத்தி
னப்புறமு மிப்புறமு மாரறிவுஞ் சென்றறியு
மெப்புறமுங் கண்டவர்க ளின்று.

(இ-ள்.) கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரோ - அநாதியே பூரணமாய்த் தோன்றாமல்நின்ற சிவன், காருண்ணியத்தினாலே நம்மைப்போலே எழுந்தருளிவந்த ஆசாரியமூர்த்தியையும், அவனாலே இதுநான் அன்றாயிருந்ததென்றுகண்ட தன்னுடைய உடம்பையும், இந்தவுடம்பை வேறென்றறிவிக்க வறிந்த தன்னையும் ஆகப் பதி - பசு - பாசமென்று சொல்லப்பட்ட இந்தமூன்றுபொருள்களையுங்கண்டு உட்கொண்டு, இதனாலே கன்மத்தை முடித்தவர்களே. (இதனாற் கன்மத்தை முடித்தபடி எங்ஙனமெனின்? கன்மமானது சஞ்சிதமென்றும், பிராரத்தமென்றும், ஆகாமியமென்றும் மூன்றுவகைப்பட் டிருக்கையால், இவற்றை ஆசாரியன்செய்யுந் தீக்கையிலே அத்துவசோதனை பண்ணுகையினாலே சஞ்சிதமான கன்மத்தையும், தேகமுள்ளவளவும் பிராரத்த முண்டாகையால் இந்தத்தேகத்துடனே கூடப் பிராரத்தமான கன்மத்தையும், அவனருளிச்செய்த வுபாயத்திலேதாநின்று ஆகாமியகன்மமேறாமலும் போக்கினபடியா மென்க.) — அண்டத்தின் அப்புறத்தது என்னதே - அந்த ஞானசொரூபத்தை அண்டத்துக் குள்ளேயென்றும் புறம்பேயென்றுங் கொள்ளாமல், — அண்டத்தின் அப்புறமும் இப்புறமும் ஆரறிவும் சென்று அறியும் - அந்தஞானம் தத்துவாதீதமா யிருக்கின்ற முறைமையும், அந்தத் தத்துவங்களுக்குத் தத்துவமாய் நிற்குமுறைமையும், ஆன்மாக்களுக்கான்மாவாய் நிற்குமுறைமையும் உணர்ந்து, தாமும் இந்தப் பரிபூரணமான ஞானமேயாய் நிற்கவே, அவர்களுக்கு இந்தஞானத்தின்

ஐக்கியத்தாலே இப்படியானேமென்கிற கருத்து மழியாமல் நிற்கும் அப்பொழுதே அவர்கள் சிவமாயே நிற்பார்கள். — இன்று எப்புறமும் கண்டவர்கள் - அவர்களே இப்பொழுது எல்லாப் பொருள்களையும் உணர்ந்து பரிபூரணமாய் நிற்கின்ற கலியாணர்கள் என்க. (அ)

அந்தச் சிவசொரூபந்தான் எப்படி யிருக்குமென்ற மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

6 அன்றுமுத லாரோனு மாளா யுடனுகிச்
சென்றவர்க்கு மின்னதெனச் சென்றதிலை—யின்றிதனை
யெவ்வா றிருந்ததென் றெவ்வணஞ் சொல்லுகே
னவ்வா றிருந்த தது.

(இ-ள்.) அன்றுமுதல் ஆரோனும் ஆளாய் உடனுகிச் சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றது இலை - அநாதியேதொடங்கி ஈசுவரனுடைய ஏவலினுலே சிருஷ்டிதிதிகளுக்குக் கர்த்தாக்களாய்ப் பின்பு சங்காரகாலத்திலே ஈசுவரனிடத்திலே கூடத்தக்க பிரமவிஷ்ணுக்களும் அவனுடைய உண்மையான சுரூபம் இப்படி யிருக்குமென்று இன்றளவுந் தெரிந்ததில்லை,—இதனை இன்று எவ்வாறு இருந்ததென்று எவ்வண்ணம் சொல்லுகேன் அது அவ்வாறு இருந்தது-அவர்களாலும் அறிதற்கரிய இந்தப்பொருளை இப்பொழுது எப்படியிருக்குமென்று எதனை உவமித்துச் சொல்லுவேன். அந்தப்பொருள் யாவர் சிலர்கூடி அநுபவித்தவர்களுக்கு எப்படியிருந்ததோ அப்படியே யிருக்கும் என்க.

இன்னமும் இதனைவிளங்க அருளிச்செய்கின்றார்.

7 ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்
கொன்றுங் குறியொன்றி லாமையினு— லொன்றுே
வேமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

(இ-ள்.) இந்தப்பொருளுக்கு அநாதியேதொடங்கித் தான்பிரிந்து நில்லாமல் அதுவதுவாய் நிற்கின்றதே அடையாளமாதலால், இதுவொழிந்து, அந்தப்பொருளுக்கு வேறோரடையாளமும்இல்லை. ஆகையாலே, ஒருபொருளுடன் உவமித்துச் சொல்வதற்கு இதற்கொப்பானது ஒருபொருளுமில்லை; ஆதலால், இப்பொருள் அநாதியே இரண்டறநிற்கு முறைமைபோல, இடையறுதே இரண்டறநிற்குஞ் சிவாநுபவத்தையுடைய சிவயோகிகளே இதற்குச்சாக்ஷி என்க. (க0)

இப்படிப்பட்ட ஞாதாக்களுக்குப் பிராரத்தத்தாலே தேகமுள்ளவளவும் இந்திரியாதிகள் சீவியாவோ? இவர்கள் இடைவிடாமற் சிவனை அநுபவிக்கின்றபடி எப்படியென்ற மாணவகனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

8 ஆற்று லலைகடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை
மாற்றியவ் வாற்றுன் மறித்தாற்போற்—றேற்றிப்
புலன்களெனப் போதம் புறம்பொழியு நந்த
மலங்களற மாற்றுவிக்கும் வந்து.

(இ-ள்.) ஆற்றுல் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை மாற்றி அவ்வாற்றுன் மறித்தாற்போல்-ஆற்றுலேசென்று அலையையுடைய கடலிலே

கூடியநன்னீர், கடல்நீருடனே ஒன்ருய்த் தன்றன்மைகெட்டு மீண்டும் அந்த ஆற்ருலே நெடுந்தூரம் எதிர்த்தாலும், முன்புபோல நன்னீராகாமல் அந்தவுப்பு நீரேயானுற்போல, — தோற்றிப் புலன்களெனப் போதம் புறம்பு ஒழியும் - ஞானத்தாலே சிவனைக்கூடிச் சிவமாயிருக்கிற சிவயோகிகளுக்குப் பிராரத்தத்தாலே அநுபூதிதிரிந்தாலும், கண்டவர்களுக்கு இந்திரியங்கள் சீவிப்பது போலத்தோன்றி, அவர்களுக்குச் சுகருபத்தி னைக்கியத்தாலே பசுகரணங்கூடாமல் சிவகரணமே பிரகாசியாநிற்கும்.— வந்து நந்தம் மலங்கள்அற மாற்றுவிக்கும் - இவ்வளவேயன்றியும், தரிசனமாத்திரத்தாலே அவர்கள் கருணையானது போந்து நம்முடைய மலங்கள் நில்லாதபடியும் போக்கி நம்மையும் இரக்ஷியாநிற்கும்.

இதற்குப் பிரமாணமுண்டோவென்னில் ? சிவகரணம்பிரகாசித்த சிவஞானிகளிடத்திலே விளைந்த விசேஷங்களை ஒருசெய்யுளிலே பல பிரமாணங்களால் அருளிச்செய்கின்ருர்.

9 பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்.

(இ-ள்.) சிவனுடைய வருளாலே சிவனைப்பெற்ற நாயன்மார் பாலைநிலம் நெய்தல் நிலமாகப் பாடியதும், பாம்புகடித்து மரித்தவன் பிராணன்பெற்றெழுந்திருக்கும்படி பாடியதும், பக்குவத்திலே காலனையேவி முதலைபிடித்துமரித்த புதல்வனைக் காலத்தைப்போக்கி அழைப்பித்ததுவும் மாணவகனே! அவர்களுக்கு நம்மைப்போலப் பசுகரணமாகச் சீவியாமல் சிவகரணமாகவே இருத்தலால் காண் என்க. (கஉ)

இந்தவர்த்தம் பெற்றவர்களெல்லார்க்கும் இப்படி விசேஷஞ் செய்யுமோவென்ற மாணவகனைநோக்கி, மிகுந்த சத்திநிபாத முடையவர்க்கே இவையுண்டாமென்று அருளிச்செய்கின்ருர்.

10 தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்
ருங்களே சட்ட வுறங்குவர்க—ளாங்கதுபோ
லைய னருட்கடைக்க ணுண்டதற்பி னப்பொருளாய்ப்
பைய விளையுமெனப் பார்.

(இ-ள்.) சுகதுக்கவாதனைகளிலே மிகவுமொத்துண்டாருக்கு அறிகருவிகள் நீங்கி மயக்கம்வந்தடுத்த காலத்தில், அளவிலன்புடையவர்கள் நன்ருகப்படுத்த சயனத்திலே, அவர்கள் கூட்டியபின், தம்மையும் பிரபஞ்சத்தையுமறக்கத்தக்க பேருறக்கம் அவர்கள் கூட்டவேண்டுவதின்றியே தம்மிடத்திலே அதுதானே உண்டாகாநிற்கும். அந்தமுறைமைபோலச், சரியைகிரியாயோகங்களின் முற்றுதலாலே மிகுத்த சத்திநிபாத முண்டாயவர்கள் அந்த மூன்றுபாதங்களையு நிகழ்த்திப் பிரபஞ்சத்தையும் விட்டு ஞானத்திலே அபேக்ஷையுடையராய், எம்மை இரக்ஷிக்கைக்கு ஞானசாரியனை எங்கே பெறுவேமென்று மிக்க தேட்டத்துடனே சென்றடைய, அவர்மீது ஆசாரியனும் மிகுந்த அன்பைவைத்து, ஞான தீக்ஷாக்கிரமங்களிலே மலமாயைகன்மங்களைப்போக்கி, ஆன்மாவினுண்

மையை உணர்த்தி, இவருடைய சுதந்திரவீனத்தையுங் காட்டி, ஞானத்தையுந் தரிசிப்பித்து, இதிலே ஒருதன்மையாக்கியபின், அந்தஞானத்தினைக்கியத்தாலே தம்மையும் பிரபஞ்சத்தையு மறப்பிப்பதான அந்தச் சிவசொரூபந்தானே பிரகாசித்து ஒருநீர்மையராகவே அவருக்கு எல்லா விசேஷங்களும் விளையாநிற்கும்.— (ஆதலால் மாணவகனே!) நீயும் இப்படி இந்தத்திருஷ்டியிலே நிற்பாயாக என்க. (கங)

இனி இந்த அவசரத்திலே இவன் நிலைநிற்கும்படியை இன்னமும் விளங்க அருளிச்செய்கின்றார்.

உள்ள முதலனைத்து மோன்ற வுருகவரி
லுள்ள முருகவந் துன்னுடனுந்—தேள்ளி
யுணருமவர் தாங்க ளுளராக வேன்றும்
புணரவர நில்லா பொருள்.

(இ-ள்.) உள்ள முதல் அனைத்தும் ஒன்ற உருகவரில் உள்ளம் உருக வந்து உன்னுடனும் - (மாணவகனே!) ஆன்மாவுக்குப் பிரபஞ்சவேதுவாயுள்ள தத்துவங்களும் மலங்களுமாயுள்ளவை கடாக்ஷத்தாலே ஒருவழிப்பட இல்லையாய் விடும்படி ஞானம்பிரகாசிக்கில், அந்தஞானத்தினைக்கியத்தாலே இப்படிப்பெற்றோமென்கிற உன்னுடைய கருத்தானது அழியும்படி அப்பொழுதே சிவம் பிரகாசித்து, உன்னை ஒரு நீர்மையாக்கிக்கொள்ளாநிற்கும்.— தெள்ளி உணருமவர் தாங்கள் உளராக என்றும் புணரவர நில்லா பொருள் - இப்படியொழிந்து, சிவனைத் தெளிந்தறிய விசாரிக்குமவர்கள், தங்கள்பாவனை குலையாதுநிற்கச் சிறிதே அறிந்துகூட விசாரிக்கில், அவர்களுக்கு எப்பொழுது பொருந்துகைக்கு முன்னில்லாது அந்தப்பொருள் என்க. (கச)

இந்தப் பதினான்கு திருவெண்பாக்களும் உபதேசத்தின் முறைமையாகையால் இதற்குப்பிரமாணமாகத்திவ்வியாகமங்களைத் தம்பிரானார் அருளிச்செய்தஅடைவே ஆன்மாக்களுக்கு அநாதியாகவருகிற ஜநநமரணங்களுஞ் சுகதுக்கங்களும் ஞானத்தாலல்லது போகாதாகையால், இந்தஞானமுண்டாகும் பொருட்டுப் பக்குவங்களுக்கீடாக ஆசாரியர் கடாக்ஷத்தாலே சரியைகிரியாயோகங்களைச்செய்து, இவற்றின் முற்றுதலாலே ஞானசாரியனைவழிபட்டு, ஞானோபதேசத்தைப்பெற்று, ஞானத்தினைக்கியத்தாலே சிவனைப்பெற்று முத்தராம்படியும், இந்த ஞானங்கூடாமல் முற்பட்டவழிகளிலே நின்றவர்கள் பதமுத்திபெறும்படியுமாம். இவற்றைச் சுருங்கக்கொண்டு சரியையுங் கிரியையும் ஒன்றாக்கிச் சிவதன்மமென்றும், யோகத்தைச் சிவயோகமென்றும், ஞானத்தைச்சிவஞானமென்றும், நான்குபாதங்களைமூன்றாக்கி இவற்றிலே சாதிக்கும் உபாயங்களையும் பேறுகளையும் மேல் அருளிச்செய்கின்றார்.

நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
னல்லசிவ ஞானத்தா னுனழிய—வல்லதனு
லாரோனு மன்புசேயி னங்கே தலைப்படுங்கா
ணாரோனுங் காணு வரன்.

(இ-ள்.) சிவனைக் கர்த்தாவாகக் கொள்ளாத சமயங்களிலே நின்று சாதித்துக்கெடாத குற்றமற்ற சிவனைநோக்கின சைவசித்தாந்தத்திலே, சிவதன்மத்தாலே யாதல், சிவயோகத்தாலே யாதல், சிவஞானத்தாலே

யாதல், சிவனைக்கூடும்படி சாதிக்குமவர், தங்களாலே செய்யப்பட்டதாகக்கருதாதே, கர்த்தாவின் ஏவலென்றேயறிந்து, தம்முடைய சுதந்திரத்தைவிட்டு, அவன் கைப்பட்டு வர வல்லார் ஆவர்; அவர்களே அந்தக் கர்த்தாவின்மேலே மிக்கவன்பைவைக்கில், அவரிடங்களிலே சென்று தலைப்படாநிற்பன்; மாணவகனே! பிரம விஷ்ணுக்கள் இன்றளவுங் காணப்படாத சிவன் என்க. (கரு)

இத்திருவெண்பா மூன்றுவகைக்குங்காட்டும் இந்த மூன்றுவகையிலு முற்பட்ட சிவதன்மத்தையறிந்து வழிபடுவார் வழிபடும்படியேநின்ற மாணவகனை நோக்கி, சிவதன்மத்தை மெல்வினையென்றும், வல்வினையென்றும் இரண்டாக்கி இந்தமுறைமையை அருளிச்செய்கின்றார்.

13 மெல்வினையே யென்ன வியனுலகி லாற்றரிய
வல்வினையே யென்ன வருமிரண்டுஞ்—சொல்லிற்
சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்ம நீங்கும் படி.

(இ-ள்.) மெல்வினையென்றும் உலகத்தாராலே செய்தற்கரிய வல்வினையென்றுஞ் சிவனை வழிபடத்தக்க இந்த விரண்டுவகையுஞ் சொல்லுமிடத்து, சிவதன்மமென்றே சொல்லப்படுமாதலால், இவையிரண்டினுள், உன்னுடைய கருத்துக்குப் பொருந்தினதொன்றை வேறொரு பலன்களையுங் கருதாதே செய்வாயாக. மாணவகனே! உன்னுடைய பிறப்புக்கு ஏதுவாகிய வினைவிட்டு நீங்கும்படி பலன்களைக் கருதிப் பதங்களையடையாமல், சாயுச்சியமே பெறுகைப்பொருட்டாக உண்மையான சிவஞானத்தைப் பெறவேண்டும் என்க. (கசு)

இந்த இரண்டுவகையில்முற்பட்டமெல்வினையின்முறைமையைஅருளிச்செய்கின்றார்.

14 ஆதியை யர்ச்சித்தற் கங்கமு மங்கங்கே
தீதி றிறம்பலவுஞ் செய்வனவும்—வேதியனே
நல்வினையா மேன்றே நமக்குமெளி தானவற்றை
மேல்வினையே யென்றதுநாம் வேறு.

(இ-ள்.) வேதியனே! ஆகமங்களில் அருளிச்செய்தபடியே, சிவனை உள்ளபடி அர்ச்சித்து வழிபடத்தக்க கிரியாவிதிக்குப் பக்குவனும்படி, இவனுடைய அவயவங்களினாலே அந்தந்த அவசரங்களிலே செய்யத்தக்க திருவலகு, திருமெழுக்கு, திருவிளக்கு, திருநந்தவனம், திருப்பள்ளித்தாமம், திருமஞ்சனம், திருமாலை, கூத்து, பாட்டு முதலாயுள்ள தொழில்களும், திருவேடத்தாரை வழிபடுகையும், சிவபத்தருக்கு வேண்டுவன செய்கையும், திருமந்திரம் ஜபிக்கையுமாக இப்படியே செய்யப்பட்ட குற்றமற்ற வழிபாடான சரியையும், இந்தச்சரியையின் முதிர்ச்சியாலே திருவுள்ளத்தடைத்துச் சிவனை அர்ச்சித்து வழிபடுகிற கிரியாவிதியும், நல்ல செயற்பாடென்று நமக்கெளிதாகச் செய்யலாகையாலே, இவை இரண்டையும் மெல்வினையென்று திவ்வியாகமங்களிலே சொல்லப்பட்ட படியாலே, நாமும் இதனை உனக்குச்சொன்னோம் என்க.

சரியைகிரியைகளிலே நின்று வழிபடுகின்றவளவில், கொலை களவு கள் காமம் பொய்யென்கிற ஐந்தையும் விட்டு நிற்கையாலும், மனவாக்குக் காயங்களால் நினைப்பன, சொல்வன, செய்வனவெல்லாந் தெய்வகிருத்தியத்தினாலே யாகையாலும், அசுத்தத்திலேநின்றும் நீங்கிச் சுத்தனாய்நிற்கையாலும், சர்வான்மாக்களையுந் தன்னைப்போலே காண்கையாலும், வேதாகமங்களின் முறைமைகளிலே வழுவாமல் நிற்கையாலும் ஆசாரியனாலே வேதியனேயென்று அழைக்கப்பட்டது. ()

இந்தச் சரியையினையுங் கிரியையினையும் மெல்வினையாக்கி இந்த நிலைகளின் முதிர்ச்சியாலே பின்புண்டான ஞானத்திலே சிவனளவிலே மிகுந்த சிநேகமாகி இவனுக்கு விளைந்தவல்வினை யிருக்குமுறையை அருளிச்செய்கின்றார்.

வரங்கள் தருஞ்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினா லன்றுகறி யாக்க—விரங்காதே
கோல்வினையே செய்யுங் கோடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா மற்று.

(இ-ள்.) நல்லவரங்களைத்தருகின்ற வயிரவவேடங்கொண்டெழுந்தருளிய கடவுளுக்குக் கறியமுது செய்யும் பொருட்டு முன்னே இரக்கமின்றித் தமது திருக்கரங்களாலே பிள்ளையைக் கொலைசெய்த சிறுத்தொண்ட நாயனாரது கொடுவினைபோன்றவற்றை நாம் வல்வினையென்று கூறினோம் என்க. (கரு)

பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்—சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தன்செயலாற் றான்.

(இ-ள்.) பாவம் பழிகளை நோக்காமல், பிதாவும் பிராமணனுமாகியோனது பாதங்களை (திருமஞ்சனப் பாற்குடத்தை எற்றினமைபற்றி) சேதித்த சண்டேசுரநாயனாரது வல்வினையைநோக்கி, சிவபிரான் தாமாந்தன்மையை அருளினார் இதனைக்காண் என்க. (கசு)

செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
யைய விதுவமுது செய்கென்று—பையவிருந்
தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவனா
நாட்டியுரை செய்வதென்னோ நாம்.

(இ-ள்.) ஐயனே! கழனியின்கமரிலே சிந்திய செங்நெலரிசி செங்கீரை மாவடுவென்னுங் கட்டளைப்பொருளாகிய இதனைத் திருவமுது செய்தருளுகவென்று மெல்லவிருந்து கண்டத்தோடு தண்டினை அரிந்து, அச்சிவபிரானுக்கு நிவேதித்துப் பிறவிவேரரிதலாகிய வல்வினைசெய்த அரிவாட்டாயநாயனாரை இவ்வியல்பினரென நாட்டி நாம்புகழ்வது முடியுமோ என்க.

இந்தமூன்று திருவெண்பாவாலும், சாத்திரங்களிற் சொன்ன வழியன்றியே அளவற்ற வன்பின் பெருமையாலே, உலகத்தியற்கைவிட்டு யாவராலுஞ் செய்யவொண்ணாத செயல்களைச் செய்தமையாலும், இவற்றை ஒரு பிரமாண நூல்களாலுஞ் சொல்ல அரிதாகையாலும், அவைவல்வினைகளென்று சொல்லப்பட்டன. (உ0)

இப்படிக் கொடிதான வல்வினைகளைச் செய்யுமவர்களும் முத்தியைப் பெறுவார்களோ வென்று ஐயப்பட்ட மாணவகனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

18 செய்யுஞ் செயலே செயலாகச் சென்றுதமைப்
பையக் கொடுத்தார் பரங்கெட்டா—ரையா
வுழவுந் தநுசு மொருமுகமே யானு
லிழவுண்டோ சொல்லா யிது.

(இ-ள்.) செய்யும் செயலே செயலாகச் சென்று தமைப் பையக் கொடுத்தார் பரங்கெட்டார் - இப்படிக் கொடிதான வல்வினைகளைச் செய்யும்போதே இந்தக் கொடியசெய்திகளால் அகிதம்வாராமற் சிவனை நோக்கியே நின்று சிவனளவில்வைத்த அன்பின்பெருமையாலே இந்தச் செயல்களையு முறைமையான செயலென்றேகொண்டு தம்மையு மெள்ளச் சிவன்கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே, அவர்கள் கர்த்தாவின் கைப்பட்டு முத்தியேபெறுநிற்பர்கள்,— ஐயா உழவுந்தநுசும் ஒரு முகமேயானல் இழவுண்டே இதுசொல்லாய் - ஐயனே! ஒருவனுக்கு உழவோரிடத்திலுந் தநுசோரிடத்திலுமானல் ஒன்றுக்கொன்று உதவிகூடாது, அவையிரண்டும் ஓரிடத்திலேயானல் இவன் சூரனுய்விடுகை சந்தேகமில்லை; அதுபோலச் செய்கின்ற செயல்களில் அகிதம் வாராமற் சிவனைநோக்கியே செய்தும் இந்தச் செயல்களுஞ் சிவன்செயலென்றேகொண்டு தம்மையும் அவன்கையிலே கொடுத்துப் பரங்கெட்டு விடுகையாலே இவன் பெறுகின்ற முத்திக்கும் இழவுண்டாகுமோ இதனை விசாரித்துச்சொல்லாய் என்க. (௨௧)

இனிச் சரியை கிரியைகளிலே நின்று சாதித்தவர்க்கும் பிற்பட்ட ஜநநத்தில் இப்படிமுதிர்ந்த வல்வினைகூடாமல் யோகத்துக்கு அதிகாரியானவனுக்கு யோகம் வெகுவிதமாகையினலே இதனைச் சுருங்கக்கொண்டு ஆதாரயோகமென்றும் நிராதாரயோகமென்றும் உத்தமமானயோகங்களை எடுத்தருளிச்செய்கின்றார்.

19 ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே—மாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளாமொன்
றாக்காப் பொருளேயொன் றாம்.

(இ-ள்.) ஆதாரயோகம் நிராதாரயோகமென மீதானத்து எய்தும் விதி இரண்டே - ஆதாரயோகமென்றும் நிராதாரயோகமென்றும் எல்லாவற்றிற்கு மேலானவிடமாகிய திருவடியிலே பக்குவப்பட்ட ஆன்மாக்கள் பொருந்தும்படி சாதித்துக் கூட்டுகைக்கு வேதாகமங்களிலே விதிக்கப்பட்டன இரண்டு பிரகாரமாயிருக்கும்.—ஆதாரத்து ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருள் ஒன்றாம் - ஆதாரங்களிலே ஒவ்வொரு திவ்யரூபங்களை ஆசிரியனிடத்திலேபெற்று அந்தத்தானங்களிலே தியானித்திருக்கத்தக்க ஆதாரயோகம் ஒன்றாம்.—ஆக்காப்பொருள் ஒன்றேயாம் - இந்த ஆதாரயோகம் கைவந்தவாறே ஆதாரங்களில் பார்த்திருக்கும்படி கற்பித்துக்கொண்டு நிற்பதுபோலாது சைதன்னியசொரூபத்தைப்பாராதே பார்த்துநிற்கின்ற நிராதாரயோகம் ஒன்றாம் என்க. (௨௨)

இந்தத் திருவெண்பா ஆதாரயோகத்துக்கும் நிராதாரயோகத்துக்கும் காட்டாகையால் இவற்றில் முன்னேசொல்லப்பட்ட ஆதாரயோகத்தை மேல்விளங்க அருளிச்செய்கின்றார்.

20 ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுநெகிழப்—பார்க்கி
லிவனுகை தானொழிந்திட் டேகமா மேகத்
தவனுகை யாதார மாம்.

(இ-ள்.) ஆதாரத்து ஒருபொருளை ஆக்கி - தேகத்திலே கற்பிக்கப்பட்ட ஆறாதாரங்களிலே ஆசாரியன் அருளிச்செய்ததொரு திவ்விய ரூபத்தை இதற்குப் பொருந்தினதோர் ஆதாரத்திலே தன்னுடைய மனமானது விஷயங்களிற்பற்றாமல் இதிலே பற்றும்படி கற்பித்துக் கொண்டு,—அப்பொருளைநோக்கி - அப்படிக் கற்பித்துக்கொண்ட உருவங்கைவரும்படி நெடுநாள் தியானித்து,—அணுவில் அணு நெகிழப் பார்க்கில் இவனுகைதான் ஒழிந்திட்டு ஏகமாம் - அந்தத்தியானங் கைவந்தவாறே அந்தவாதாரங்களைவிட்டுத் தன்னிலே அந்தப்பொருளைத் தியானிக்கின் அந்தத்தியானத்தின் முறுகுதலாலே தியானிக்கின்றோமென்கிற நினைவுகெட்டு அந்தப்பொருளொன்றுமேயாம்,—ஏகத்தவனுகை ஆதாரமாம் - இப்படித் தியானிப்பானுந் தியானிக்கப்படும் பொருளுமன்றியே தன்னைமறந்தந்தத் திவ்வியரூபந்தானாக நிற்பது தானே ஆதாரயோகமாம் என்க. (உங)

இனி இந்தஆதாரயோகத்தைநுண்ணிதாகச்சாதிக்குமுறைமைஅருளிச்செய்கின்றார்.

21 கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
கொண்டவனு மப்பரிசே கூறுபடுங்—கொண்ட
விருபொருளு மன்றியே யின்னதிது வென்ன
வொருபொருளே யாயிருக்கு முற்று.

(இ-ள்.) கொண்டது ஒருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற் கொண்டவனும் அப்பரிசேகூறுபடும்-தான் கைவரத்தியானித்ததொரு பொருளை நுண்ணிதாக நுணுக்கிப் பரமாணுவினும் நுண்ணிதாகத் தியானிக்கின் இப்படித் தியானிக்கின்றவனுந் தியானித்த பொருள் போலப் பரமாணுவினு நுண்ணிதாக நிற்பன்.—கொண்ட இருபொருளும் அன்றியே இன்னது இது என்ன ஒருபொருளேயாய் உற்று இருக்கும் - இப்படி நிற்கவே தியானிப்பானுந் தியானிக்கப்படுபொருளும் அன்றியே ஒருகற்பனையற அப்பொழுதே அந்த ஒப்பில்லாதபொருள் தானேயாயிருக்கும் என்க. (உச)

இனி இந்தநுண்ணிதான தியானமுங்காய ஆதாரயோகத்துக்கு முடிந்தயோகமுமாய் உபாயயோகமுமாயிருக்கின்ற மந்திரயோகத்தை அருளிச்செய்கின்றார்.

24 அஞ்செழுத்து மேயம்மை யப்பர்தமைக் காட்டுதலா
வஞ்செழுத்தை யாறகப் பெற்றறிந்—தஞ்செழுத்தை
யோதப்புக் குள்ள மதியுங் கெடிலுமைகோன்
கேதமற வந்தளிக்குங் கேள்.

(இ-ள்.) அஞ்செழுத்துமே அம்மை அப்பர்தமைக் காட்டுதலால் - அகாரம் உகாரம் மகாரம் விந்து நாதம் என்கிற பஞ்சாக்கரமான பிரண

வத்துக்குப் பிரமா விஷ்ணு உருத்திரர் மகேசுரர் சதாசிவர் இவர்கள் ஐவரும் அதிதேவதைகளுமாய், மந்திரமூர்த்திகளுமாய், ஓங்காரமாயே நின்று நடத்துகின்ற இந்தவைந்தெழுத்தே சத்தியையுடைய சிவன் திருமேனிகொண்டு நடத்துகின்ற முறைமையைக்காட்டுதலால், — அஞ்செழுத்தை ஆருகப்பெற்று அறிந்து - இந்தவைந்தெழுத்தும் மூலாதாரத்திலே அகாரமும் பிரமாவும், நாபிகமலத்திலே உகாரமும் விஷ்ணுவும், இருதயகமலத்திலே மகாரமும் உருத்திரனும், கண்டத்திலே விந்துவும் மகேசுவரனும், புருவமத்தியிலே நாதமும் சதாசிவமும் இப்படிச் சுழுமுனை வழியாக நிற்கின்ற முறைமையைக் குருபதேசத்தாலே பெற்று, இந்த ஐந்தெழுத்தையும் மூலாதாரத்திலே, பிரமரந்திரத்திலேசெல்ல உச்சரித்தால், இந்தப் பிரணவசொரூபமுங்களைந்து விக்கிரகங்களும் ஒருநீர்மையாய் உனக்கு நாதரூபமாய் நாதாந்தத்திலே அருளைப்பெறுவையென்று ஆசாரியன் அருளிச்செய்ய அறிந்து, — அஞ்செழுத்தை ஓதப்புக்கு உள்ளமதியும் கெடில் - இந்த ஓங்காரமான ஐந்தெழுத்தும் உச்சாரணபேதத்திலே, நாற்பத்தொன்பதா மெழுத்தும் பதினுலாமெழுத்தும்ஆறுமெழுத்தும் இவைகூடின விடத்திலேவிந்துவும் நாதமுமாக இந்தமுறைமையிலே ஐந்தெழுத்தாமென்றும் வேதாகமங்களிலே விதிக்கையால், இந்தவைந்தெழுத்தையும் உன்தத்துவமான வுச்சரிப்புக்கு விந்துநாத முடிந்தவிடத்திலே கிஞ்சிஞ்ஞமான ஆன்மபோதமுங்கெடில்,— உமைகோன் கேதம் அறவந்து அளிக்கும் கேள் - அப்பொழுதே சத்திக்குக்கர்த்தாவாகிய சிவன் குற்றமறத்தோன்றி உண்மையானசொரூபத்திலே கூடி இரக்ஷிப்பன். (மாணுக்கனே!) கேட்பாயாக என்க,

இந்த ஆதாரயோகத்தைத் தூலசூக்குமபரமென மூன்றுபடியாகக் களைத்துவிது, பின்பு நிராதாரயோகத்துக்குப் பிராப்தனும்படியென அறிக. (உரு)

இந்த ஆதாரயோகங் கைவரச் சாதித்தவர்களுக்கு மேல் நிராதாரயோகமிருக்கும்படி அருளிச்செய்கின்ருர்.

௨௬ ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலுந்
தாக்கித்தா னென்ருேடுந் தாக்காதே—நீக்கியுட
னிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனுய்
நிற்கை நிராதார மாம்.

(இ-ள்.) ஆக்கப்படாத பொருளாய் - ஆன்மபோதத்தாற் கற்பிக்கக்கூடாத அர்த்தமாய், — அனைத்திலும் தாக்கித் தான் ஒன்ருேடுந் தாக்காதே - எல்லாப்பொருள்களிலுந் தான்கூடி நிற்கும்போதே அவை ஒன்ருேடுந் தான் தோயாமல், — நீக்கி உடனிற்கும் பொருளுடனே- ஆன்மாவுக்கு முத்திக்கு விரோதமாய் நீக்கத்தக்க பொருள்களையுந் தானே அறிந்து நீக்கி, அநாதியே இப்படி நீங்கப்படாத அந்தஞானசொரூபத்துடனே, — நிற்கும் பொருளுடனுய் நிற்கை நிராதாரமாம் - தன்னுடைய்போதம் ஒழிந்து இதனைக்கூடித்தானும் அந்த ஞானசொரூபமாய் நிற்கும் பற்றறநிற்பது நிராதாரயோகமாம் என்க. (உசு)

இந்த ஞானத்திலே இப்படி இரண்டறநிற்கில் சிவனை உள்ளபடியே காணலா மென்று அருளிச்செய்கின்றார்.

23 காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானுங் காணப் படும்பொருளு மன்றியே
காண்கையினாற் கண்டனரோ காண்.

(இ-ள்.) காண்கின்றது ஓர்பொருளைக் காண்கின்றயோகிகளே கண்ணுதலைக் காட்சி அறக் காண்கின்றார் - எல்லாவற்றையும் அறிந்து அறிவித்து நிற்கிறதாகிய ஞானத்தை அதுகண்ணாகக்காண்கின்ற சிவயோகிகளே சிவனை இரண்டறக் காண்கின்ற கலியாணர்கள், — காண்கின்றார் காண்பானும் காணப்படும் பொருளும் அன்றியே காண்கையினால்கண்டனரோகாண் - மாணவகனே! இப்படிக்காண்கின்றவர்கள் தன்னாலேகாணப்படாததாகவும் காணப்பட்டபொருள் தனக்குவேறாகவுங்காணாமல் அந்தஞானமாகவே நின்று காண்கையாலே, இந்தஞானமேசொரூபமாக வுடையசிவனை அப்பொழுதேபெற்றுவேறற்றிருப்பார்கள்இதனைக்காண்பாயாக என்க. (உஎ)

இனி இந்த நிராதாரயோகம் நிலைபெறும்படி, இதற்குபாயமான மௌன யோகத்தை அருளிச்செய்கின்றார்.

25 பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான்—பேசாதே
யெண்ணுன்றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
லுண்ணின்றும் போகா னுளன்.

(இ-ள்.) பேசாமை பெற்று அதனிற் பேசாமை கண்டனைப் பேசாமைசெய்யும் பெரும்பெருமான் - வாக்கு மனங் காயங்கள் மூன்றினுள் மட்டுப்படாதது வாக்காகையாலும், மாற்றமுண்டேல் வஞ்சமுண்டென்கையாலும், பேசாமையாகின்ற பரமோபாயத்தை ஆசாரியன் பக்கலிலேபெற்று, அந்தப்பேசாமை தன்னுடன் வாசனையிற்போகாமல், வாக்குமனங் கிட்டாத சிவனைத் தங்களிடத்திலே ஞானதிருஷ்டியாலே கண்டு கூடி, செயலற்றிருக்கின்ற சிவயோகிகளை, பின்பு ஒரு சரீரங்கூடி வாக்குண்டாகாதபடி ஜநநத்தை வேரறுத்து விடாநிற்பன் சிவன், — பேசாதே எண்ணுன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால் உண்ணின்றும் போகான் உளன் - இப்படி உரையிறந்து சிவனுடனே இரண்டற்றிருக்கின்ற சிவயோகிகளிடத்துப் பரமேசுவரன் எவ்விடத்தினும் வியாத்தமாயினும், அவ்விடங்களிலே மறைந்தே நின்று, இவர்களிடத்தே பிரகாசித்து இவர்க்கே உடனாயிருப்பன் என்க.

பேசாமையாகின்ற பரமோபாயத்தை ஆசாரியன் பக்கலிலே பெற்றபடி எங்ஙனமெனின்? தேகமுதலாயுள்ளவை உனக்கு வேறென்றும், இவற்றுடன் கூடினால் பிறப்புக்குக்காரணமான கன்மமுண்டாமென்றும், உனக்கு ஞானமேவடிவென்றும், தீக்ஷையிலேநாம் இசைவிக்க நீயும் இசைந்தாயென்றும், அல்லதூஉம் சரீரம் அர்த்தம் பிராணன் இவைதத்தம் பண்ணினையே யென்றும், நமக்குத் தத்தம் பண்ணின பொருளை நீ விரும்பக்கடவை யல்லையே யென்றும், ஆசாரியன் அருளிச்செய்ய,

இவனும் நமக்கில்லாத பொருள்களை விரும்பக்கடவோ மல்லோமென்று அறுதி யிட்டதேயாம். (௨௮)

நிராதார யோகத்துக்குத் தூல சூக்கும பரமாக மூன்று திருவெண்பா அருளிச்செய்து, மேல் இந்தப்பரமாகிய சிவனை ஆன்மபோதம் இறந்தாலொழிந்து கூடவொண்ணாதென்னு முறைமையைப் பல செய்யுட்களாலும் விளங்க அருளிச் செய்கின்றார்.

26 ஒட்டற்று நின்ற வுணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்ற விடஞ்சிவமா—நாட்டேற்று
நாடும் பொருளனைத்து நானா விதமாகத்
தேடுமிட மன்று சிவம்.

(இ-ள்.) ஒட்டற்று நின்ற உணர்வு முட்டிப் பதி தேட்டற்று நின்ற இடம் சிவமாம் - ஒரு அசைவின்றியே நின்ற பரமஞானத்தை அது கண்ணாகக்கண்டு கூடின ஆன்மா, அந்தஞானமேயாய்த் தானும் அசைவின்றியே நிற்கில், அந்த ஞானத்தில் நிலையாகத்தன்னுடைய ஆன்ம போதம் ஒழிந்து அந்த ஞானமாயே நின்ற இடந்தன்னிலே, சிவமே பிரகாசித்து அவனையும் ஒரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்கும், — நாட்டுற்று நாடும் பொருள் நானாவிதமாகத் தேடும் இடம் அனைத்தும் சிவம் அன்று - இப்படி யொழிந்து, சுட்டியறியத்தக்க ஆன்மபோதத்தாலே வெகுவிதமாக ஆராய்ந்தறியத்தக்க இடம் பிரபஞ்ச வியாபாரமாகை யால் அவ்விடஞ் சிவரூபமாகாது என்க. (௨௯)

இன்னமும் இதனை விளங்கவறியும் உபாயம் அருளிச்செய்கின்றார்.

27 பற்றினுட் பற்றைத் துடைப்பதோரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற—பற்றதனைப்
பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகு
மற்றுமிது சொன்னேன் மதி.

(இ-ள்.) ஆன்மாவுக்குக் கன்மபலத்தை விளைவிக்கின்றவைகளாகிய தனுகரண புவனபோகங்களினுள்ளே, பற்றிக்கொண்டு நிற்கின்ற இச்சா ஞானக்கிரியைகளை ஒழிப்பதான சிவ போகத்தை விளக்கத்தக்க சிவ ஞானத்தை அது கண்ணாகக்கண்டு கூடி, அதனைக்கூடினேமென்று பிரியப்பட்டிருந்தறிகின்ற கருத்தையுங் கைவிடின், அந்த நிலைதன்னிலே அந்த ஞானத்துக்கு மேலான சிவந்தானே பிரகாசியாநிற்கும். அறுதியாகச்சொன்னேன் இதனை புத்திபண்ணிக்கொள்வாய் என்க. (௩0)

இன்னமும் இந்தநிலைக்குக் குற்றம்வராதபடி வேறுமோர் உபாயம் அருளிச் செய்கின்றார்.

28 உணராதே யாது முறங்காதே யுன்னிப்
புணராதே நீபொதுவே நிற்கி—லுணர்வரிய
காலங்கள் செல்லாத காலத் துடனிருத்தி
காலங்கண் மூன்றினையுங் கண்டு.

(இ-ள்.) நீயாதும் உணராதே உறங்காதே உன்னிப்புணராதேபொதுவே நிற்கில் - நீ பொருளல்லவென்று அறிந்து நீங்கின தேகாதிப்பிர பஞ்சங்களிலே, வாசனைமிகுதியினாலே கூடிநின்று விகற்பியாதை, இந்த

விகற்பங்கள் நீங்கின அவசரங்களிலுண்டான மயக்கங்களில் அழுந்தாதை, சுகசொரூபத்தை உன்போதத்தால் அறிந்து கூட விசாரியாதை, இந்தக்குற்றங்கள் நீங்கும்படி உனக்குக் கண்ணுமாய் உனக்கு நடுவேநிற்கின்ற ஞானத்திற்கூடி அந்த ஞானந்தானாகவே நிற்கின், — உணர்வரிய காலங்கள் செல்லாத காலத்துடன் காலங்கள் மூன்றினையும் கண்டு இருத்தி - யாவராலுங் குறித்தற்கரிய செல்காலம் வருங்காலம் நிகழ்காலமென்று சொல்லப்பட்ட மூன்று காலங்களினும் படாமல் இந்தக் காலங்களாலே விசுவத்தை நடாத்திக் காலசொரூபமாயிருக்கின்ற சிவத்துடனே நீயும் அக்காலங்கள் மூன்றையும் வேறாகக்கண்டு, அச்சிவமே யாய் அழிவின்றியே இருப்பாய் என்க. (௩௧)

இந்த அர்த்தத்தினுண்மையும் இந்த அர்த்தத்தைப் பெறத்தக்கவர்களுண்மையும் விளங்க அருளிச்செய்கின்றார்.

29 அறிவறிவாய் நிற்கி லறிவுபல வாமென்
றறிவி னறிவவிழ்த்துக் கொண்டவ் — வறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தவர்கண் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோற் றன்.

(இ-ள்.) மாணவகனே! ஆன்மா தன்னுடையபோதத்தையே பொருளாகக்கொண்டு நிற்கின், விகற்பிக்கிறதே சுபாவமாய போதமும் பலவாய்ச்சிந்தி விடுமென்று இதனை ஆசாரியன் அநுக்கிரகத்தாலே அறிந்து, தனக்கு அநாதியே பிராணனாய் நிற்கின்ற ஞானத்தைக்கூடி, தன்னுடைய ஆன்ம சுபாவத்தையுமொழிந்து, அந்த ஞானமேயாய், அந்த ஞானத்தினைக்கியத்தாலே தனக்கு இன்றளவுங் கிடையாத பெருவாழ்வாகிய பரமானந்தசொரூப சிவனைப்பெற்று, தானும் அந்தப் பரமானந்தமேயாயிரா நிற்பன். இவ்வாழ்வைப் பெறவுரியார்யாரென்னில், மானுடப்பிறப்பி னுள்ளாரில் தேகாதிப் பிரபஞ்சங்களிலுள்ள ஆரவாரங்களைக் கைவிட்டு, நிலத்திலேவைத்த மணியினது நாவேபோலச் சலிப்பற்றிருக்கின்ற சீமான்கள் என்க. (௩௨)

இந்த நிராதாரயோகத்திலே நிகழ்வதொரு குறியுண்டென்றும் இது நிகழ்ந்தாற் செய்யுமுபாயமும் அருளிச்செய்கின்றார்.

30 ஓசையெலா மற்ற லோலிக்குந் திருச்சிலம்பி
னோசை வழியேசென் றேத்தோடுங்கி — லோசையினி
னந்தத்தா னத்தா னரிவையுட னம்பலத்தே
வந்தோத்தா னத்தான் மகிழ்ந்து.

(இ-ள்.) இந்த நிராதாரயோகத்தைச் செய்கின்ற சிவயோகிகள், சிவனைப் பெறுகைப்பொருட்டுத் தேகேந்திரிய வந்தக்கரணங்களாயுள்ள ஆரவாரங்கள் ஒடுங்கும்படி, ஞானத்தினாலே தன்னுடைய இச்சா ஞானக்கிரியைகளை ஒழித்தவவசரத்திலே, ஆனந்த நிருத்தம்பண்ணியருளாநின்ற தம்பிரானார் ஸ்ரீ பாதத்தில், பரவிந்துவென்கின்ற திருச்சிலம்பிற் பரநாதமென்கின்ற ஓசைதோன்றா நிற்கும். அந்த ஓசைவழியே நாடிச்சென்றுகூடி, அந்த ஓசை முடிந்தவிடத்தே, தன்னுடையபோதமும் ஒக்கமுடியில், அப்பொழுதே அந்த ஓசை முடிந்தவிடமே இடமாக

வுடைய தம்பிரானுர் காருண்ணிய சத்தியுடனே அம்பலமாகிய ஞானப் பிரகாசத்திலே வந்து இவனைப் பிரியத்துடனே கூடுவார் என்க. ([illegible])

இனித்தாம் அருளிச்செய்த நிராதாரயோகத்தி னுண்மையைத் தம்மையெ யப் பிறரும் விளங்க அருளிச்செய்தபடி விளங்க அருளிச்செய்கின்றுர்.

31 சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
சார்புணர்த ருனே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

(இ-ள்.) தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவநாயனுரும் "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்" என்றமையால், தனக்கு அநாதியே தாரகமாய் நிற்கின்ற திருவடிஞானத்தை அது கண்ணுக அறிந்து அதனுடனே இரண்டறக் கூடி நிற்கில், மீண்டும் ஒரு ஜநநமுண்டாகைக்குக் கன்மமுண்டாகாதென்று அருளிச்செய்த பிரமாணப்படியே, தனக்குத் தரிசனமான ஞானத்தைக் கூடி அசைவறநிற்கின், அதுவே சிவத்தியானமாம். அந்த நிலையில் தியானிக்கின்றேமென்கிற பாவனை குலையின், அப்பொழுதே சுக சொரூபமான சிவனைக்கூடி நன்றான சமாதி பரனுகாநிற்பன். இப்படிக் கூடின சிவயோகிகளுக்குப் பின்பு ஜநநத்தை உண்டாக்குகின்ற ஆகாமியகன்மம் உண்டாகாது என்க. (௩௪)

ஞானத்தினுலே சிவனைக் கூடவேண்டுமென்று சிரத்தை பண்ணுவானா அந்தச் சிவமானதும் அவதிகூடாமல்வந்து கூடுமுறைமையை அருளிச்செய்கின்றுர்.

32 அன்றிவரு மைம்புலனு நீயு மசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ்—சென்று
கருதுவதன் முன்னங் கருத்தழியப் யாயு
மோருமகடன் கேள்வ னுனக்கு.

(இ-ள்.) அநாதியே உன்னை மாறுபடுத்திவருகின்ற விஷயங்களிலே கூடிநின்று நீ சலியாதே, அவற்றை வேருகக்கண்டு நீங்கின உனக்குப் பிராணுய் நிற்கின்ற ஞானமானது உன்னுடனே இரண்டற நிற்கு முறைமைபோல, நீயும் அதனைத் தரிசித்து அந்த ஞானமாகவே இரண்டறநிற்கில், அப்பொழுதே இந்த ஞானத்துக்கு முதலாகிய ஞேய சொரூபமாகிய சிவம் தோன்றுநிற்கும். இப்படித்தரிசனமான சிவனைக் கூட வேண்டுமென்று சிரத்தை பண்ணுமளவில், அதற்குமுன்னே உன்னுடைய கருத்தையும் அழித்துத் தன்னுடனே ஒரு நீர்மையாக்கிக் கொள்ளாநிற்பன்; ஒப்பில்லாதசத்திக்கு நாயகனுன சிவன் என்க. (௩௫)

ஆனுல், ஆன்மாவாலே சிவனைநினைத்துக் கூடலாமோ வென்னின், சிவன் ஆன்மாவால் அறியப்பட்ட பொருளன்றென்று அருளிச்செய்கின்றுர்.

33 உண்டேனி லுண்டாகு மில்லாமை யில்லையேனி
லுண்டாகு மானமையி ஞேரிரண்டா—முண்டில்லை
யேன்னு மிவைதவிர்ந்த வின்பத்தை யெய்தும்வகை
யுன்னிலவ னுன்னுடனே யாம்.

(இ-ள்.) உண்டெனில் இல்லாமை உண்டாகும் இல்லையெனில் (இல்லாமை) உண்டாகும் - சிவனை ஆன்மபோதத்தால் அறிந்து கூடலாமென்னின், ஆன்மபோதத்தால் அறிந்து கூடத்தக்க பொருளா

வது, இந்திரஞாலம் போன்ற பிரபஞ்சமாகையாலுஞ், சிவன் வாக்கு மறுதீதனுகையாலும், இப்படிச் சொல்லுமவனிடத்தில் உண்டாம் பொருளாவது, சிவனைத் தெரியாததொன்றுமே. சிவன் ஆன்மாவால் அறியப்படாத பொருளென்னின், அவனிடத்திலும் உண்டானது சிவனைத்தெரியாத தொன்றுமே, — ஆனமையின் ஓர் இரண்டாம் - ஆனபடியினலே, இப்படிச் சிவனைத் தெரியாதிருப்ப தொருமுறைமை இரண்டுபிரகாரமாயிருக்கும்,—உண்டு இல்லையென்னும் இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும்வகை உன்னில் அவன் உன்னுடனே ஆம் - இந்தப் பாவ அபாவமென்கின்ற இரண்டு வழியாலுஞ் சிவனைக்கூட வொண்ணுதென்று அறிந்து, இவற்றை விட்டுத் தானுகவே நிற்கின்ற ஞானமாயேநின்று, அளவிலாத பேரின்பத்தைப் பெறும்படி சிவனிடத்திலே அன்பை வைக்கில், அப்பொழுதே ஒன்ருலும் பாவிக்கப்படாத சிவன் தன்னுடையகாருண்யத்தினலேஉன்னைஇரண்டறக்கூடிநிற்பன்என்க.

நிராதாரயோகமுற்றியது. (௩௪)

இந்த நிராதாரயோகத்திலே மிகவும் வாசனை யுண்டானவர்களுக்கு ஒவ்வொரு பக்குவங்களிலே கூடாமைகூடினல் என்செய்யலாமென்ற மாணுக்கனைநோக்கி, சிவஞானமாகிய தத்துவஞானம் இருக்கும்படியை அருளிச்செய்கின்ருர்.

34 தூல வுடம்பாய முப்பத்தோர் தத்துவமு
மூல வுடம்பா முதனுன்கு—மேலைச்
சிவமாம் பரிசினையுந் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த
பவமாம் பரிசறுப்பார் பார்.

(இ-ள்.) தூலவுடம்பாய முப்பத்தோர் தத்துவமும் - ஆன்மா கன்மபலத்தைப் புசிக்கும்பொருட்டாக, அன்னமயத்தாற் பரிணமித்த சரீரத்திலே நின்று, இது பரிணுமமாம்படி இந்தச் சரீரத்துக்குக் காரணமுமாய், ஆன்மாவிற்குத் தனுகரணபுவன போகங்களுமாய் நிற்கின்ற ஆன்மதத்துவம் இருபத்துநாலும், புசிக்கைக்குக் காலநியதிகளுமாய், இச்சா ஞானக்கிரியைகளைச் சீவிப்பிக்கைக்குக் கலைவித்தை அராகங்களுமாய், போகங்களிலே அழுத்துகைக்குப் பிரகிருதியுமாய், மயக்குகைக்கு மாயையுமாய் நிற்கின்ற வித்தியாதத்துவமேழுமாகத் தூலவுடம்பிலே பொருந்தி நிற்கின்ற தத்துவமுப்பத் தொன்றும், — மூலவுடம்பாம் முதல் நான்கும் - இம்மாயா தத்துவங்களைப் பிரேரிக்கவும், கன்மங்களுக்கீடாக ஞானக்கிரியைகளை நூனதிகமாகப் பிறப்பிக்கவும், வாக்குகளை எழுப்பவும், காரணத்துக்குத் திருமேனியாகவும், பதப்பிராத்தங்கட்குப் பதங்களாகவுந்தோன்றி, உள்ளே மூலவுடம்பாய் நின்று நடத்துகின்ற விந்துசத்திமுதலான தத்துவம் நாலும்,—மேலைச்சிவம் - இத்தத்துவங்களுக்குக் காரணமுமாய் ஆன்மாவுக்குப் பிராணனுமாய் நிற்கின்ற சிவதத்துவம் ஒன்றும்,—ஆம்பரிசினையும் தேர்ந்து உணர்ந்தார் சேர்ந்தபவமாம் பரிசு அறுப்பார் பார் - ஆகிய இந்தத்தத்துவ முப்பத்தாறும் ஆன்மா புகிக்கைக்குத் துணைக்காரணமாய்த் தூல சூக்குமபரமாய்நிற்கையால் இந்த முறைமையை ஆசாரியன் அருளாலே, உருவதரி

சன சுத்திகளுடனேபார்த்து நீங்கி, தன்னையும் ஞானத்தையுஞ் சிவனையும் உணர்ந்த சிவஞானிகளே, அநாதியே பொருந்திப்போதுகின்ற ஜநந மரணங்களாகின்ற முறைமையைப் போக்காநிற்கின்றவர்கள்; ஆதலால், உனக்குத் திருநியமமாகவும் விரோதமாகவும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந் தோன்றினதாயினும் இப்படிப்பார்த்துக் கூடுவாயாக என்க.

இப்படிப்பார்க்க அரிதானவர்களுக்கு வேறேயும் ஒரு உபாயம் அருளிச்செய்கின்றார்.

35 எத்தனையோ தத்துவங்க ளெவ்வெவர்கோட் பாடுடைய
வத்தனையுஞ் சேன்றங் களவாதே—சித்தமெனுந்
தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார்.

(இ-ள்.) எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர் கோட்பாடுடைய அத்தனையுஞ் சென்று அங்கு அளவாதே - அநேகவிதமான தத்துவங்களையும், பலசமயிகள் கொண்டிருக்கத்தக்க கோட்பாடுகள் அடங்கலையுஞ் சென்றறியப்புக்கு, அவற்றிலே மொத்துண்டு அழியாதே,—சித்தமெனுந் தூதுவனைப் போக்கிப் போய்த் தூக்கற்ற சோதிதனில் பாதிதனைக் கும்பிடலாம் பார் - உன்னை ஜநந மரணங்களிலே தள்ளுகைக்கு அநாதியே தூதனாகி விசுவத்திலே வாசனைப்படுத்திப்போதுகின்ற சித்தவிகாரத்தை ஞானத்தாலே ஒழித்துச்சென்று, ஒப்பில்லாத அந்த ஞானத்தைக்கூடி, இந்த ஞானசத்தியை ஒருபாதியாகவுடைய சிவனை மனவாக்குக்காயங்கள் கூடாதபடி, அவன் திருவடியிலே அழுந்தி நிற்கலாம். இதனை விசாரித்துப்பார் என்க. (௩அ)

இந்த உண்மையிலே கூடுமளவில், உயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றுவிடவேண்டுமென்று அருளிச்செய்கின்றார்.

36 சாம்பொழுது மேதுஞ் சலமில்லை சேத்தாற்போ
லாம்பொழுதி லேயடைய வாசையறிற்—சோம்புதற்குச்
சோல்லுந் துணையாகுஞ் சோல்லாத தூய்நேறிக்கட்
சேல்லுந் துணையாகுஞ் சேன்று.

(இ-ள்.) சாம்பொழுதும் ஏதும் சலம் இல்லை செத்தாற்போல் ஆம் பொழுதிலே அடைய ஆசை அறில் - இப்படிப்பட்ட சிவஞானிகளுக்குச் சரீரம்விடுவதாகிய சாக்காடு வந்தடுத்தகாலத்தும், அந்தச் சிவரூபமாயே விடுவதொழிந்து சற்றுந் தத்துவங்களாலுள்ள அசைவுகூடாது. இதற்குக் காரணம் ஏதென்னில், தேகநிற்கின்றபொழுதே தேக மில்லாதவர்களைப்போல் அநாதியே வாசனைப்பட்டுப்போதுகின்ற உயிர்ச்சார்பு பொருட்சார்புகளிற் பற்று அடங்கலும் விடுகையால்.—சோம்புதற்குச் சொல்லும் துணையாகும் சொல்லாத தூய்நெறிக்கண் செல்லுந்துணையாகும் சென்று - இப்படிச் சரீரநிற்கும்போதே உயிர்ச்சார்பு பொருட்சார்பில் பற்று அடங்கலும் விடுமாகில், இதுதானே, பணியறுத்தலென்கின்ற நிலைக்குச்சொல்லப்பட்ட தொருதுணையாக நிற்கும்; இதுவொழிந்து, வாக்கால் உரைக்கப்படாத சுத்தநெறியால் வீட்டின்பத்திலே பொருந்துகின்ற அவசரத்துக்குந் துணையாகாநிற்கும் என்க. (௩௯)

இந்த அவாவறுத்தலும் அவனருளாலே வேண்டுமென்று அருளிச்செய்கின்றார்.

37 வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மேன்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமேவன் பால்.

(இ-ள்.) வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால் வேண்டின் அஃது ஒன்றுமே வேண்டுவது - தெய்வப்புலமைத் திருவள்ளுவ தேவநாயனாரும் "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்று அருளிச்செய்தமையாலே, தேகம் உள்ள அளவும் இவன் ஒன்றை விரும்பாதொழியினும் பிராரத்தத்தாலே யுள்ளது கூடுமாகையால், ஒன்றை விரும்பவேண்டுமிடத்துப் பிறவாமை ஒன்றுமேவிரும்பவேண்டுவது,—அது வேண்டின் வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டும் அவன்பால் வேண்டாமை வேண்டிடுக - அந்தப் பிறவாமையை வேண்டின் தான்வேண்டாமை வேண்டவருமென்று பிரமாண முண்டாகையாலே, நாம் விரும்பத்தக்க கர்த்தாவின் பக்கலிலே, பிறவாமைக்கு உற்பத்தியான அவாவறுத்தல் ஒன்றுமே வேண்டிக்கொள்ள வேண்டுவது. இந்த அவாவறுத்தல் உண்டாகவே அந்தப்பிறவாமைதானே உண்டாம்.

இப்படி உயிர்ச்சார்பு பொருட்சார்பிற் பற்றற்றபோதே சமாதிபரனாகவும் அங்ஙனம் நிற்கும்போதே, சமாதி விசாரித்தவர்களுக்குச் சமாதிகூடாமல் நினைவு கூடி, இதனாலே ஜநநங்கள் கூடுமுறைமையை அருளிச்செய்கின்றார்.

38 அரண வுணர்வுதனி லவ்வுணர்வை மாற்றிக்
கரணமுங் காலுங்கை கூடும்—புரணமது
கூடாமை யுங்கூடுங் கூடுதலுங் கூட்டினுக்கு
வாடாமை யுங்கூடும் வந்து.

(இ-ள்.) அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில் கரணமும் காலும் கைகூடும் - இந்திரியவேடர்சென்று ஈடுகொள்ளப்படாத புகலிடமான திருவடிஞானத்தினாலே தன்னுடைய போதத்தை ஒழிக்க விசாரிப்பானாகில், அந்த அவசரத்திலே முன்பு தான்பற்றிப் போந்த உயிர்ச்சார்பு பொருட்சார்பின் வாசனையாலே, சொரூபமானது கைகூடாமல், மனாதிகளும் பிராணவாயுவுங்கூடி, மீண்டு விடயங்களிலே சலிப்பினுஞ் சலிக்கும்.—கூடாமை புரணமதும் கூடும் - இதுகூடாமற் புரிந்து மயக்கம்வந்து கூடினும்கூடும்,—கூடுதலும் கூட்டினுக்குவாடாமையும் வந்து கூடும் - இப்படிமயக்க விகற்பங்கள் கூடிப்போதரவே, எடுத்த தேகம்போனாலும், இந்தப்பற்றுக்களாலே மீண்டும் ஒருதேகம் வந்து கூடாநிற்கும்; ஆதலால், இதுகூடாதபடி உயிர்ச்சார்பு பொருட்சார்புகளில் பற்றுக்களை அற்றே சுகரூபத்திலே பொருந்தி நிற்பாயாக.

சமாதிபரனானவனுக்கும் பற்றுக்களாலே சமாதிகூடாமல் ஜநநங்கள் கூடுமாகில், சிவதீக்ஷையும் தரிசனமு மில்லாத ஆன்மாக்கள், மரியாதையோ பெற்றுள்ளனென்று கேட்ட மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

39 இன்றிங் கசேதனமா மிவ்வினைக ளோரிரண்டுஞ்
சென்று தொடருமவன் சென்றிடத்தே—யென்றுந்தான்
நீதுறுவ னாற் சிவபதிதான் கைவிடுமோ
மாதொருகூ றல்லனோ மற்று.

(இ-ள்.) இன்று இங்கு அசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும் அவன் சென்றிடத்தேசென்று தொடரும் - இப்பொழுது இந்தத்தேகத்

திலே நிற்கும்போதேகூடின அசேதனமான புண்ணியபாவங்கள் இரண்டும் இவன் பின்னொரு தேகத்தை எடுத்த பொழுதே ஒக்கச்சென்று கூடாநிற்கும்,—இது உறுவனுனல் பதிசிவந்தான் கைவிடுமோ என்றுந் தான் மாது ஒரு கூறுஅல்லனே மற்று - ஒருவன் சிவதீக்ஷையும் சிவஞானமும்பெற்றுத் தெளிந்திருக்கும் போதேயும் முன்புபோல உயிர்ச் சார்பு பொருட்சார்புகளின் பற்றுவிடாமல் ஜநநங்கூடிற்றேனும், கர்த்தாவாகிய சிவனும் இவனைக் கைவிடாமல், முன்புண்டான மனம் பற்றுகைக்குத்தக்கவற்றைக் கூட்டித் தொலைப்பித்து, முன்ஜநநத்திலேசாதித் தகுறையிலே வந்து எடுத்துக்கொண்டு நிட்டையிலே கூட்டிச் சாயுச்சியத்தைக் கொடாநிற்பன்; இவன் காருண்ணிய சத்தியினை எப்பொழுதுந் தன்னிடத்திலே உடையனுதலால் என்க. (சஉ)

இன்னமும், பெத்தமுத்திகள் இரண்டினும் ஆன்மாக்களைப் பாதுகாத்து ஈடேற்றுகை அநாதியே கர்த்தாவுக்கு காரணமான முறைமை என்பது தோன்ற அருளிச்செய்கின்றார்.

40 அநாதி சிவனுடைமை யாலெவையு மாங்கே
யநாதியெனப் பேற்ற வணுவை—யநாதியே
யார்த்த துயரகல வம்பிகையோ டெவ்விடத்துங்
காத்த லவன்கடனே காண்.

(இ-ள்.) அநாதி சிவன் எவையும் உடைமையால் - அநாதியான சிவனுக்கு எண்ணிறந்த ஆன்மாக்களும் அடிமையாகையாலே,— ஆங்கே அநாதியெனப்பெற்ற அணுவை அநாதியே, ஆர்த்த துயர் அகல - இப்படி அநாதியான ஆன்மாக்களை அநாதியே பேதித்துக்கொண்டுநிற்கின்ற பாசமானது விட்டுநீங்கும்படி,— அம்பிகையோடு எவ்விடத்தும் காத்தல் அவன் கடனேகாண் - விட்டுநீங்காத சத்தியுடனே பெத்தத்திலுங் கூடிநின்று தொலைப்பித்து, முத்தியிலும் மீண்டும் ஒருடம்பு கூடாதபடி திருவடியிலே கூட்டிக்கொள்ளுகின்ற இது மாணவகனே! அவனுக்கு அநாதி முறைமையேகாண் என்க. (சங)

தேகாதிபாசம் அநாதியாகில், முத்தியிலும் போகாதேயென்று சந்தேகித்த மாணக்கனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

41 தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பான் மஞ்சனநீர் தாமாட்டித்— தம்மையொரு
பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தா
லோவாமை யன்றே யுடல்.

(இ-ள்.) தம்மில் சிவலிங்கம்கண்டு - ஆசாரியனலே, தனுகரணபுவனபோகங்களை விட்டு நீங்கி, தன்னைத்தரிசித்து, தன்னிடத்திலே தனக்குப் பிராணனுமாய்ச் சிவனுக்கு அடையாளமுமாய் நிற்கின்ற ஞானமாகிய சிவலிங்கத்தைத் தரிசித்து,—அதனைத் தாம்வணங்கி - அந்தச் சிவலிங்கத்தைத் தம்முடைய போதம்விட்டுப் போம்படி, சாந்தமாகிய வணக்கஞ்செய்து,— தம் அன்பான் மஞ்சனநீர் தாம் ஆட்டி - இப்படிப் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றோமென்கின்ற சிரத்தையாகிய சலத்தாலே, திருமஞ்சனம் பண்ணி,— தம்மை ஒரு பூவாக அழியாமல் பூக்கொடுத்து - இப்படிச்செய்கின்ற ஆன்மசொரூபத்தை ஒப்

பில்லாத் திருப்பள்ளித்தாமமாக மயங்காமல் அதனைச்சாத்தி,— பூசித்தால் - இப்படி ஞானத்திற் சரியை கிரியா யோகங்களினாலே உள்ளே சிவனைக்கண்டு ஐக்கியஞ்செய்கின்ற இது,—ஓவாமை அன்றே உடல் - செம்புருகின பதத்திலே கூடின குளிகையினது ஐக்கியத்தாலே, அநாதியான காளிதமும் செம்பென்னும் உருவமும்நீங்க மாற்றுப் பிரகாசித்து, பின்பு இவை என்றுங் கூடாதவாறுபோல, ஒருவன் தன்னுடைய சத்திநிபாதத்தில் உண்டான அன்பின்மிகுதியாலே, தேகேந்திரியாதிகளை நீங்கின தன்னுடைய உண்மையான சொரூபத்தைத் தனக்கேற்பப் பெற்று, தன்னிடத்திலே சிவனைக் கண்டு ஐக்கியஞ்செய்து வாசனைவிட்டால், பிராரத்தநாசம் பிறந்து தேகம் விட்டபொழுதே, திருவடியிலே இரண்டற்று விடுமெதொழிந்து, மீண்டுந்தேகம் எடுக்க மாட்டாதன்றே.

அநாதியானபாசம் விட்டுநீங்குமாகில் அநாதியென்ற ஆன்மாவுக்கு அழிவுண்டாமோவென்ற மாணாக்கனைநோக்கி, பாசத்திலே விரிந்த போதத்தை விட்டுத் தன்னைத் தனக்கு அறுதியாகப்பெறுகின்றதொழிந்து, இவனுக்கு அழிவில்லையென்றும், பாசத்தை நீங்கினபொழுதே இவனும் வியாத்தனென்னு முறைமையும் அருளிச்செய்கின்றார்.

68 தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லை தானேன்றுந்
தன்னைத்தான் பெற்றவன்ரு ஞோன்னிற்—றன்னலே
யெல்லாந்த னுட்கோண்டு கோண்டதனைக் கோள்ளாதே
யெல்லாமாய் நிற்கு மிவன்.

(இ-ள்.) தன்னைப் பெறுவதின்மேல் பேறு இல்லை - ஒருவன்பெறத்தக்க பேறுகளிலே தான் அழிந்துபோகாமல், அருளாலே தன்னை உறுதியாகப்பெறுகின்ற பேற்றின்மேல் வேறுபேறு இல்லை, — தானென்றும் தன்னைத்தான் பெற்றவன்ருன் ஆர் என்னில் - தானென்றும் தன்னைத்தான் பெற்றவனென்றும் இரண்டாக இவ்விடத்திற் சொன்னது யாராமென்னில், — தன்னலே எல்லாம் தன் உட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே எல்லாமாய் நிற்கும் இவன் - ஆன்மா தன்னை அறியாமல் முன்பு பாசமேயாய் நின்ற முறைமையொழிய, அருளாலேபரத்தையும் அறிந்து, பாசத்தையும் அறிந்து, இந்தப்பாசத்தை நீங்கின தன்னையுங்கண்டே, அண்டாண்டபகிரண்டங்களையும் உணர்ந்து, தான்அறியாமற்கொண்டு நின்றபாசத்தை ஒழிந்ததுபோல, இதையும் ஒழியவிட்டுத் தன்னுடைய போதஞ் சலியாமற் பூரணனாய் நிற்கவே, எல்லாவடிவுகளும் தன்னுடைய வடிவாய்த் தானே இந்த அண்டாண்டபகிரண்டங்கட் கெல்லாங் கர்த்தாவாய் நிற்பன் இவன்ருன் என்க. (௪௫)

இந்த ஆன்மயோகந்தானே பொருளாகி, ஞானயோகஞ் சிவயோகமென்று சொல்லவேண்டுமோ வென்றமாணாக்கனை நோக்கில், இந்த ஆன்மயோகந்தானே ஞானயோகமாம்படி அருளிச்செய்து, இந்த ஞானயோகந்தானே சிவயோகமாம்படியும் அருளிச்செய்கின்றார்.

42 துன்பமா மெல்லாம் பரவசனாய்த் தான் றுவளி
லின்பமாந் தன்வசனாய்த் தானிருக்கி—லென்பதனா
னின்வசனா யேயிருக்கி னின்னுடனா நேரிழையா
டன்வசனா யேயிருப்பன் ருன்.

(இ-ள்.) தான்பரவசனாய் எல்லாம் துவளில் துன்பமாம் - ஆன்மா, தானே கர்த்தனாய் எல்லாவற்றையும் அறிகின்றவனாய் நின்று விகற்பிக்

கில், இம்மை மறுமை இரண்டுக்கும் பிரயோசனமாக வுள்ளது கிலேச மொழிய வேறில்லை,—தன்வசனுய்த் தானிருக்கில் இன்பமாம் - ஆன்மா, திரிவுகாட்சியான பிரபஞ்சநீதியை விட்டுநீங்கித் தனக்கு உண்மையான சைதன்னிய சொரூபமாய் இதிலே நிருவிகாரமாயிருக்கில், இந்த ஆன்ம யோகந்தானே ஞானயோகமாய் இந்தவழியிலே சுகரூபம் வந்து பிரகாசியா நிற்கும், — என்பதனுல் - என்பது வேதாகமங்களுக்குங் கருத்தாகையால்,— நின்வசனுயே இருக்கில் நேரிழையாள் தன்வசனுயே இருப்பன்றுன் நின்னுடனும் - மாணவகனே! இந்திரிய வசனுகாமல் நீ உன்னையொழிந்தபொருள்களெல்லாவற்றையும் உனக்கு வேறென்று அறிந்து விட்டு நீங்கி, நிருவிகாரமான ஞானமேயாயிருக்கில், அப்பொழுதே அந்த ஞானசத்தியின் வசமாயிருக்கின்ற ஞேயசொரூபனுன சிவன் உன்னைக்கூடி வேறறநிற்பன் என்க. (௪௬)

இந்தச் சிவயோகத்திலே இடைவிடாமல் அநுபவித்தலாவது இந்தக் கருவி கரணங்கள் ஒருகாலமுங் கூடாதபடி அருளிலே நிற்க வல்லவர்களுக்கேயென்று தோன்ற அருளிச்செய்கின்றுர்.

43 சேத்தாரோ கேட்டார் கரணங்கள் சேர்ந்ததனே
டோத்தாரோ யோகபர ரானவர்க—ளேத்தாலு
மாராத வக்கரணத் தார்ப்புண்டிங் கல்லாதார்
பேராமற் சேல்வரதன் பின்.

(இ-ள்.) கரணங்கள் செத்தாரோ கெட்டார் - அந்தக் கரணங்கள் நேராக அங்குரியாதபடி ஞானத்திலே கூடி மரித்த ஆன்மாக்களே, ஜநந மரணங்கள் கெட்டவர்கள், — சேர்ந்து அதனேடு ஒத்தாரோ யோகபர ரானவர்கள் - இந்த ஞானத்தின் அழுத்தத்தினுலே பிரகாசித்த சிவரூபத்திலே பொருந்தி அதுவாய் நின்றவர்களே, சிவயோகத்திலே தற்பரமானவர்கள்,—இங்கு அல்லாதார் எத்தாலும் ஆராத அக்கரணத்து ஆர்ப்புண்டு அதன்பின் பேராமல் செல்வர் -இப்படிச் சிவயோகத்திற்பொருந்தப்பெறுத பாக்கிய வீனர், எத்தாலுந் திருத்தியடையப்பெறுத கருவி கரணங்களாலே கட்டுண்டு, இவற்றின்பின்னே தப்பாமல் ஏவற்செய்து, ஜநநமரணங்களிலே சென்று உழலா நிற்பர் என்க. (௪௭)

இந்தக் கருவிகரணங்கள் ஒருகாலமும் பொருந்தாதபடி நிற்கின்ற சிவயோகிகள் பெருமை இருக்கும்படி அருளிச்செய்கின்றுர்.

44 கண்ணுங் கருத்துங் கடந்ததோரு பேறேயுங்
கண்ணுங் கருத்துங் களிகூர—நண்ணி
வடமடக்கி நிற்கும் வடவித்தே போல
வுடனடக்கி நிற்பர்கள்கா ணுற்று.

(இ-ள்.) கண்ணும் கருத்தும் கடந்ததொரு பேறேயும் கண்ணும் கருத்தும் களிகூர நண்ணி - யாவர்க்கும் கண்ணுக்கும் கருத்துக்கும் அளவுபடாததொருபேருயினும், சிவஞானிகள் சிவனுடனே இரண்டறக்கூடிப் பரமானந்தமே சொரூபமா யிருக்கையாலும், அவர்கள் கண்ணில் விசுவமில்லையாகையாலும், ஒடுங்கினும் விழிப்பினும் பொருளே

யாய், அவர்கள் கண்ணுக்குங் கருத்துக்குங் களிகூரப்பொருந்தி, — வடம் அடக்கி நிற்கும் வடவித்தே போல உடன் அடக்கி உற்று நிற்பர்கள் காண் - அநேக தூரம் படர்ந்ததோர் ஆலின் பரிணமமெல்லாம் ஒரு கடுகையொத்த வித்திலே அடங்கின தன்மைபோல், அளவிடப்படாத வஸ்துவாயினும், தங்களுள்ளே அடக்கித் தங்களான்ம சுபாவத்தை விட்டு இந்தச் சிவமாகியே நில்லாநிற்பர்கள் என்க. (௪அ)

அளவிடப்படாத பொருளை ஒருடம்பிலே நிற்பானொருவன் அடக்கிக்கொண்டிருந்தபடி எப்படியென்ற மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

45 வானகமு மண்ணகமு மாய்நிறைந்த வான்பொருளை
யூனகத்தே யுன்னுமதேன் னென்றனையே—லேனகத்து
வாதனையை மாற்றும் வகையதுவே மண்முதலா
மாதனமே யன்றோ வதற்கு.

(இ-ள்.) வானகமும் மண்ணகமும் ஆய்நிறைந்த வான்பொருளை ஊனகத்தே உன்னுமது என் என்றனையேல் - ஆகாசமுதல் பிருதுவியீறாகவுள்ள பஞ்சபூத பரிணமமான பிண்டப் பிரமாண்டங்களும், இவற்றிற்குக் காரணமான தத்துவங்களும், இவற்றிற்குட்பட்ட ஆன்மகோடிகளும், தானேயாய்ப் பூரணமாய் நிற்கின்ற சொரூபத்தை ஒரு சரீரியானவன் தனக்குள்ளே அடக்க நினைத்தபடி எப்படியென்னில், — மண்முதலாம் அதற்கு ஆதனமே அன்றோ ஏனகத்து வாதனையை மாற்றும்வகை அதுவே - மாணவகனே ! பிருதுவி முதலாக முன் சொல்லப்பட்டவையெல்லாம் அந்தப் பொருளுக்கு ஆதனமாத்திர மன்றோ ஆகையாலும், அப்பொருளை ஆசாரியனாலே கூடப்பெற்றவர்களிடத்தில் அந்தப்பொருளின் வியாத்தமெல்லா நின்று பிரகாசிக்கையாலும், ஞானதிருஷ்டி இல்லாதவர்களுக்குச் சரீரிகள்போலத் தோற்றினும் அவன் அந்த உண்மையேயாய் நிற்பவனாகையாலும், என்போல்வாரிடத்தும் அநாதியேகூடிப்போந்தவாசனையைப் போக்குகைக்கு இந்த நிலையேகாண் முறைமையாகவுள்ளது என்க. (௪௯)

இந்தப்பொருளை உள்ளே கண்டு வாசனை தீர்ந்திருப்பார்போல், புறம்புங்கண்டு வாசனை போக்கலாமோவென்ற மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

46 கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில்
வல்லுப் பலகையினில் வாதனையைச்—சொல்லு
மகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர்கா ணையா
சகமார்க்கத் தாலன்றே தான்.

(இ-ள்.) கல்லினும் கமரினும் ஒளியையுடைய வாளினும் சாணைக்கல்லினும் சூதாடு கருவிப்பலகையினும் திருக்குறிப்புத்தொண்டர், அரிவாட்டாயர், ஏயர்கோன்கலிக்காமர், மூர்த்தியார், மூர்க்கர் என்னும் நாயன்மார் ஒவ்வொருதொழில்களைச் செய்யும்போதே சொல்லப்பெற்ற சிவனளவில் ஒருவழிப்பட்ட கருத்தினாலே யன்றோ புறம்பேயும் அவன் பிரகாசிக்கப் பிறப்புக்கு வித்தான வாசனையைப் போக்கினார்கள் ; ஐயனே ! இந்தமுறைமை பொய்யான உலகநெறியாலன்றே என்க. (௫0)

இந்த இரண்டு வகையில் எதிலேநின்று வாசனையைப் போக்கலாமென்ற மாணுக்கனை நோக்கி, இதனை இரண்டுவகையாக நீ கருதவேண்டாமென்றும், ஒருபடித்தாகக் காணவேண்டுமென்றும் அருளிச்செய்கின்றார்.

47 உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினுேடுந்—தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

(இ-ள்.) உள்ளும் புறம்பும் நினைப்பு ஒழியில் உன்னிடையே வள்ளல் மாதினுேடும் எழுந்தருளும் - உள்ளேகாணவேண்டுமென்றும் புறம்பேகாணவேண்டுமென்றும் நீ விசாரித்த விடத்து, உன்னுடைய போதத்தையுஞ் சரீரத்தையும், முன்போலே கைவிடாமைகொண்டு, இரண்டுபட்டுத்தோன்றினதொழிந்து, அந்தப் பொருளுக்குத் தனித்தனி ஓரிடமிராதாகையால், பிண்டப் பிரமாண்டங்களையுந் தத்துவங்களையும் ஆன்மபோதத்தையும் உருவதரிசன சுத்திகளாலே, அருளாக்கி ஒருநீர்மையான ஞானமேயாய் உன்னினைவு ஒழியநிற்கில், அப்பொழுதே உன்னிடத்திலே பரமசிவன் தன்னுடைய காருண்ணிய சத்தியுடனே கைம்மாறு கருதாமல் வந்து தோன்றி, உன்னை ஒருதன்மையாக்கிக்கொண்டு தானே பிரகாசியா நிற்பன். — தெள்ளி அறிந்து ஒழிவாய் - இதனைச் சிவயோகத்தின் கண்ணே நின்று ஆராய்ந்து அநுபவிக்கின்றேமென்கின்ற தன்மையுங் கைவிட்டுநிற்பாய்,—அன்றியே அன்புடையையாயின் செறிந்து ஒழிவாய் - இந்தமுறைமையன்றி, சிவனுடைய உண்மையைக் கேட்குதல் நினைக்குதல் காண்குதல் செய்தபொழுதே, உன்னுடைய கருத்தை உருக்குவதானதொரு பேரன்பு கூடுமாயின், அதன்லே உன்னுடைய கருத்தானது நேராக அழிந்து சிவனுடனே ஒரு நீர்மையாய் விடுவாய்,— ஏதேனும் செய் - இந்த ஞானயோக பத்தியோகங்கள் இரண்டினுள்ளே கூடின தொன்றைச் செய்வாயாக என்க. (௫௧)

இனி இந்தப் பத்தியோகந்தான் எப்படியென்ற மாணுக்கனை நோக்கிப் பத்தியிலே நின்று பெற்றவர்கள் பெருமை இப்படி யென்று அருளிச்செய்கின்றார்.

48 கண்ணப்ப னுெப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னுெப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாறறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது.

(இ-ள்.) "கண்ணப்பனுெப்பதோரன்பின்மை" என்று மாணிக்கவாசகமூர்த்திநாயனர் அருளிச்செய்த படியால், அவ்வன்பினைக் கண்ணப்பநாயனரும் காளத்தியப்பரும் அறிவாரன்றி மற்றயாரும் அதனை அறியார் என்க. (௫௨)

49 அவிழ்ந்த துணியி லவிழ்ந்த வவிழை
யவிழ்ந்த மனத்தா லவிழ்க்க—வவிழ்ந்தசடை
வேந்தனுர்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனுர் செய்த செயல்.

(இ-ள்.) மெய்யன்பினையுடைய சேந்தநாயனர் அன்பால் விரிந்த மனத்தோடு விரிந்த வஸ்திரத்தினின்று பக்குவமாய் மலர்ந்த அன்

னத்தை அவிழ்த்து நிவேதிக்க (அது) விரிந்த சடையையுடைய சிவபிரான் உண்டருளுதற்கு இனிய அமிர்தமாயிற்று. அங்நாயனர் செய்த செய்கை (எத்துணைச் சிறப்புடைய தென்று கூறலாம்) என்க. (ருங)

50 சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு.

(இ-ள்.) பால் பொழிதற்கிடமாகிய உமாதேவியார் தனத்தினின்று தூய சிவஞானப்பாலைப்பொழிய (அதனைத்) திருஞானசம்பந்தப்பிள்ளையார் பருகியருளினரென்று சொல்லக்கேட்டவளவிலே மங்கையர்க்கரசியார் பால் பொழிகின்ற தனமுடையராயினர். (ஆதலால்,) உருகும் உள்ளமுடைய அப்பாண்டிமாதேவியாரது அன்பிருந்தமுறை (அளவிடற்பாற்றன்று) என்க. (ருச)

51 அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந்தி யானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

(இ-ள்.) அன்பினல் என்னுடைய அன்பே அன்பே என்று (சிவபிரானை நோக்கிப்) பெரிதும் அழுது பேரன்புமயமாகப் போதங்களையும் அன்பன்றித் தீர்த்தமாடல் முதலிய செய்கை நேரே முத்திசாதனம் ஆகாது என்க. (ருரு)

இனி யாவர்க்கும் பத்திகூடுதற்கு அரிதென்றும், முறைமையிலே கூடத்தக்க ஞானயோகமே வாசனையைத் தீர்த்து முத்தியைத் தருவதென்றும், முன்னே பல பிரகாரங்களாகச் சொல்லப்பட்ட உபாயங்களின் தாற்பரியம் இதுவேயென்றும், மற்றுள்ள சமயிகள் தாற்பரியங்கள் இந்த உண்மையைக் கூட்டமாட்டாதென்றும், எல்லாவற்றையுந் தொகுத்து வாசனை தீர்ந்திருக்கைக்கு ஞானயோகமே பொருளென்று துணிந்து அருளிச்செய்கின்றார்.

52 எல்லா ரறிவுகளின் றாற்பரிய மேன்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சேன்றறிந்தேன்—வல்லபடி
வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்று
ளேதமறக் கண்ட விதம்.

(இ-ள்.) மாணவகனே ! இந்த நூலிற்சொல்லப்பட்ட உபாயமொழிந்து வேறும் அறியவேண்டுவது உண்டோவென்று நீ சந்தேகிக்க வேண்டுவதில்லை. எல்லாச் சமயங்களினும் எல்லாச் சாத்திரங்களினும் உண்டான தாற்பரியார்த்தங்கள் என்னல் ஆராயத்தக்கவளவும் ஆராய்ந்தறிந்தேன். அவை எல்லாவற்றினும் வாசனையைப் போக்கி முத்தியைக் கூட்டுகைக்கு முறைமையாகக் கண்டது, சைவசித்தாந்தத்திற் சொல்லப்பட்ட இந்தஞானயோகம் ஒன்றுமே யாதலால், இந்த அநுபூதி எல்லாக் குற்றங்களும் அறுகைக்குக் கண்ட அர்த்தமாதலின், நீயும் இந்த முறைமையிலே சாதிப்பாயாக என்க. (ருசா)

இனி இந்த அர்த்தத்தைப் பெறுதற்கரிய முறைமையும், பெற்றால் நிற்கவரி தான முறைமையும் அருளிச்செய்கின்றார்.

53 வித்துமத்த னங்குரமும் போன்றிருக்கு மெய்ஞ்ஞானம்
வித்துமத னங்குரமு மெய்யுணரில்—வித்ததனிற்
காணுமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணுமை யாலற்றார் பேறு.

(இ-ள்.) வித்தும் அதன் அங்குரமும் போன்று மெய்ஞ்ஞானம் இருக்கும் - நெல்லு முதலான பலவித்துக்களும் அங்குரிக்கும்பொழுது அங்குரத்துடன் இரண்டுபட நில்லாமல் அந்த அங்குரமுள்ள அளவும் வியாத்தமாய் நின்று பரிணமித்து இந்தப் பரிணாமத்தைப் பிரயோசனங் காரணமாக அங்குரித்த நாண்முதல் ஆசரித்துக்கொண்டிருந்த ஆன்மாக்களுக்குப் பரிணாம முதிர்ந்த அந்தக் காலங்களிலே வித்தானது வெகுவிதமாகப் பலித்து அவர்கள் தாகங்களை க்ஷமிப்பித்துச் சந்துஷ்டி பிறப்பிக்க இன்பத்தையே கொடாநிற்கும்; அதுபோல, வித்தான சிவமும் ஆன்மாக்களுக்குக் கன்ம வொப்பும் மலபாகமும் உண்டான அவசரத்திலே காருண்ணியமே திருமேனியாக எழுந்தருளிவந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களைத் தம்முடைய அளவிலே சினேகிக்கும்படி திருவுள்ளத் தடைத்து இவர்களிடத்திலே அநாதியே எழுந்தருளி நின்ற உண்மையைப் பிரகாசிப்பித்து இந்த உண்மையான ஞான சுகரூபத்திலே ஆன்மாக்களைக் கூட்டிநிறுத்தி இந்த நிலையின் முதிர்ச்சியாலே தன்னுடைய பேரின்பத்திலே இவர்கள் அநுபவித்துச் சம்பூரணத்தை அடையும்படி வெகுபலமாகக் கொடாநிற்கும்,—வித்தும் அதன் அங்குரமும் மெய் உணரில் - இந்த வித்தாகிய சிவனுண்மையும் அங்குரமாகிய ஞானத்தினுண்மையும் உணர்வார் உணருமிடத்து,— வித்து அதனில் காணுமையால் அதனைக் கைவிடுவர் - நெல்லு முதலியவற்றின் அங்குரங்களை இந்தவித்தின் பரிணாமமென்றும் இந்தப்பரிணாமங்களிலே அந்த வித்துக் கலந்து நிற்குமென்றும் அங்குரத்தின் பரிணாம முதிர்ந்தபொழுதே அந்த வித்தே வெகுபலமாகப் பலிக்குமென்றும் இதனை ஆசரித்துக்கொண்டிருந்து பலிப்பிக்குங் காலங்களிலே பலங்கொள்ள அறியாமல் அங்குரம் பரிணமிக்கின்ற காலத்திலே வித்துத் தோன்றாததுகொண்டு இந்தப் பரிணாமத்தில் ஓர் வித்துங் கண்டிலோமென்று அந்தப் பரிணாமத்தையுங் கைவிட்டு அதனுடைய பிரயோசனமும் இழந்துபோகின்ற புத்தனைப்போல, தரிசித்து ஞானத்திலே நின்று சாதித்து இந்த ஞானமேயாய் இந்த ஞானத்துக்கு முதலாகிய சிவனைக் கூடிப் பேரின்பத்தையே பெறமாட்டாமல், அந்த ஞானத்தைத் தரிசித்தவளவிலே இவ்வளவே பிரயோசனமென்று சிவரூபத்தினுண்மையை அறியாமல் அந்த ஞானத்தையுங் கைவிட்டுப்போன பாக்கியவீனர் சிவபோகத்தை இழந்து போகாநிற்பர்கள்,— கண்டவர்கள் பேணுமையால் பேறு அற்றார் - அந்த நெல்லுமுதலியவற்றின் அங்குரங்களிலே வித்துக் கலந்து நிற்குமென்று அறிந்தவர்களும் பயன்படுமளவும் அங்

தப் பரிணமத்தை ஆசரித்துக்கொண்டிருந்து பிரயோசனப்படுங் காலங்களிலே பிரயோசனங் கொள்ளமாட்டாமல் பராமுகத்தாலே அதின்பிரயோசனத்தைப் பிறர்கொள்ளத் தாம் இழந்துபோகின்ற பாக்கிய வீனரைப்போல, சிவனைத் தாரகமாதலொழிந்து ஞானம் பிரகாசியாதென்று அறிந்தவர்களும் அந்த ஞானத்தைக் கைவிடாமனின்று விசுவத்தைக் கைவிட்டு அந்த ஞானமாகவே சாதித்து இந்த ஞானத்தினைக்கியத்தாலே சிவனைப்பெற்றுப் பேரின்பமே அநுபவித்துத் திருப்தியடையமாட்டாமல், வாதனையின் மிகுதியாலே பராமுகராய்த் தாம்பெற்ற ஞானத்தினைப் பின்பு அநுபவிக்கலாமென்று நித்தத்துவம் பெற்றிருப்பாரைப்போல, நெகிழ்ந்திருந்தவர்கள் தமக்குப்பேறான சிவபோகத்தை இழந்து போகாநிற்பர்கள். ஆதலால் நீயும் இந்தத்தவத்தைப் பெற்றோமென்று கர்வியாய்ப்போகாதை, இடைவிடாமல் ஞானமாய் நின்றே சாதித்துப் பின்பு இந்த ஞானத்தில் உறுதலாலே ஞானமானதுந் தலைமறையப் பலிக்கத்தக்க சிவபோகத்திலே அழுந்தி அநுபவிப்பாயாக.

இதற்குப் பிரமாணம். — "வித்தினி லன்றி முளையில்லை யம்முளை—வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை—வித்து முளையு முடனல்ல வேறல்ல—வத்தன்மைத் தாகுமறநெறிதானே." என்னும் திருமந்திரமாலையாற்காண்க. (ருஎ)

இந்தச் சிவரூபந்தன்னை எப்படி அறிவேனென்ற மாணக்கனைநோக்கி அருளிச் செய்கின்றார்.

54 ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று நானன்று—நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று
தலையன் றடியன்று தான்.

(இ-ள்.) ஒன்று அன்று - எல்லாப் பொருள்களுங் கரைந்த விடத்திலே உதிப்பது ஒன்றாகையாலே, எல்லாப்பொருளுந் தானாய் ஒன்றாயிருப்பதும் அன்று,— இரண்டு அன்று - தன்னிடத்திலே சுட்டறவிளைகின்ற அர்த்தமாகையினாலே, இரண்டாயிருப்பதும் அன்று,— உளது அன்று - வாக்கு மனதீதமாயிருப்பது ஒன்றாகையாலே, பிரத்தியக்ஷமாயிருப்பதும் அன்று,—இலது அன்று - ஞானவான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமானந்தத்தை அளித்து நிற்கையாலே, இல்லாதபொருளும் அன்று,—நன்று அன்று தீது அன்று - ஆன்மபோதம் இறந்தாற்கூடும்பொருளாகையாலே, ஆன்மாக்களால் நன்று தீதென்று சுட்டப்படுவதும் அன்று,—நான் அன்று - நானே பிரமமென்று அகங்கரிக்கின்ற பசுஞானமும் அன்று,—நின்ற நிலை அன்று - அநாதியே தொடங்கி இன்றளவும் நிலையான பாசஞானமும் அன்று,—நீ அன்று - பசுஞானத்தையும் பாசஞானத்தையுமுடைய ஆன்மாவும் அன்று,—நின்னறிவும் அன்று - உனக்கறிவாய் நிற்கின்ற ஞானமும் அன்று,—தலை அன்று அடி அன்றுதான் - ஆதியும் அன்று அந்தமும் அன்று இந்தச் சிவசொரூபம் என்க. (ருஅ)

இப்படி நிச்சயார்த்தமா யிருப்பதொன்று கூடும்படி எப்படியென்ற மாணுக் கனை நோக்கி அருளிச்செய்கின்றார்.

55 செய்யாச் செயலையவன் செய்யாமை கண்டுதனைச்
செய்யாச் செயலிற் செலுத்தினு—லெய்யாதே
மாணவக வப்போழுதே வாஞ்சைக் கோடிவளர்க்கு
மாணவமு மித்தா லறி.

(இ-ள்.) செய்யாச் செயலை அவன் செய்யாமை கண்டு தனைச் செய்யாச் செயலில் செலுத்தினல் - ஆன்மாவினிடத்திற் பக்குவத்திலே விளைந்த பரமானந்தத்தை ஆன்மா அறிந்து உண்டாக்கிக் கொண்டதும் அன்று. சிவன் விகாரியாய் நின்று கொடுத்ததும் அன்று. ஞானமானது கரைந்தவிடத்திலே பிரகாசிக்கின்ற படியை அறிந்து இந்தப்பரமானந் தம் பிரகாசிக்கின்றபொழுதே இதுவுந்தோன்றுமல் அதுவே சுகரூப மாய் நிற்கும்படி அந்தநினைவானது அவிழத் தானும் அந்த நிராலம்பமே யானல்,—மாணவக வாஞ்சைக் கொடி வளர்க்கும் ஆணவமும் அப்பொ ழுதே எய்யாதே இத்தால் அறி - மாணவகனே ! ஜநநத்துக்குக் காரண மாகக் குறிக்கப்படாநின்ற ஆசையாகின்ற கொடிகளை வளர்க்கப்படா நின்ற மூலமலமாகிய ஆணவமலமும் அப்பொழுதே வேரற்று விடா நிற்கும். நீ ஒன்றுக்கும் அஞ்சாதை, இப்படி அறிவாயாக என்க. (ருக)

இந்தப்பொருளைச் சாதிப்பா னொருவனுக்கு ஒரு செயலுங்கூட வொண்ணுத படியாலே, அவனுக்கு ஒரு நியமமும் வேண்டாமென்று அருளிச்செய்கின்றார்.

56 ஏதேனுங் காலமுமா மேதேனுந் தேசமுமா
மேதேனுந் திக்கா சனமுமா—மேதேனுஞ்
செய்வா னொருவனுமாஞ் செய்யாச் செயலதனைச்
செய்யாமை செய்யும் பொழுது.

(இ-ள்.) ஆன்மபோதம் உள்ள அளவும் இதற்கு அரிதாகிய அந்த நிராலம்பமான வுண்மை ஒருவன் தன்செயலன்றியே கூடுமிடத்து, எல் லாக் காலமுமாய் எல்லாத் தேசமுமாய் எல்லாத் திக்குகளுமாய் எல்லா ஆதனங்களுமாய் எல்லாத் தொழில்களினு நிற்பா னொருவனும் என்க.

இனி இந்தச் சிவயோகத்தை எளிதாகச் செய்வதாயிருக்கும்போதே செய்யா திருக்கின்றபடியும் இந்தச் சிவயோகத்தின் பெருமையும் அருளிச்செய்கின்றார்.

89 செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசில
ரெய்தற் கரியதனை யெய்தினர்க—ளையோநாஞ்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு.

(இ-ள்.) சிலர் செய்தற்கு அரிய செயல் பலவும் செய்து எய்தற்கு அரியதனை எய்தினர்கள் - சிலர் கர்த்தாவைநோக்கித் தங்கள் சரீரத்தை யும் மனத்தையும் வருத்தி யாவராலுஞ் செய்தற்கரிய செயல்கள் பல வற்றையுஞ் செய்து பெறுதற்கரிய பேற்றினைப்பெற்றார்கள், — ஐயோ செய்யாமை செய்து செயல் அறுக்கலாயிருக்கச் செய்யாமை நாம் செய்

யாதவாறு - ஐயோ மாணவகனே ! எல்லாவிகற்பங்களும் ஒழிந்து நிர்விகாரமான சுபாவத்தைப் பொருந்திச் சுகதுக்கங்களிலே மொத்துண்பதான ஜநநமரணங்களை வேரறுத்து விடலாயிருக்க, இந்த நிர்விகாரமான வுண்மையை நாஞ்செய்யாதிருப்பது என்னையோ என்க.

இப்படிப் பொதுப்படச் சொன்ன இந்த வுண்மையை இவன் நெகிழாமல் விரைந்து கூடுகைப்பொருட்டு உபாயமாகவே அருளிச்செய்ததெனக் கொள்க. (சுக)

இந்த உண்மைகளில் ஒன்றும் அறியாத விசுவத்தார் படுகின்ற கிலேசத்தைக் கண்டு மேல் நொந்து அருளிச்செய்கின்றார்.

90 இப்பொருள்க ளியாதேனு மேதேனினு மொன்றுசெய்த
லெப்பொருளுஞ் செய்யா தொழிந்திருத்தன்—மெய்ப்பொருளைக்
கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெலா
முண்டிருப்ப தென்னோ வுரை.

(இ-ள்.) மாணவகனே ! எண்ணிறந்த ஆன்மாக்களில், பெறுதற்கரிய மக்களாக்கையைப் பெற்ற ஆன்மாக்கள் சிவனைநோக்கி, மெல்வினையென்று சொல்லப்பட்ட சரியையாதல் கிரியையாதல் வல்வினையாதல் ஆதாரயோகமாதல் இவற்றில் ஒன்றைச்செய்தல், ஒன்றையுஞ் செய்யாது நிராதாரயோகத்தைச் செய்தல், இந்தவுண்மையான பொருள் நிற்கின்ற முறைமை அறிந்து, தானும் அந்த வுண்மையிலே முறைமையாகப் பார்த்துக் கூடி யிருத்தல், இந்த முறைமைகளிலே ஒன்றைச் செய்து பெறுதற்கரிய பேறுகளைப்பெறாதே, தாந்தாம் விரும்பப்பட்ட தேகங்களும் அர்த்தங்களும் நிலையில்லாதபடி கண்டுபோதுகின்ற ஆன்மாக்கள் எல்லாரும் தேகங்களைப் போற்றிநின்று இதாகிதங்களின்பலன்களைப் புசித்து, அஞ்ஞானமெய்ஞ்ஞானமாய்ப் போதுகின்ற இது என்ன காரணம் இதனைநீ சொல்வாயாக என்க.

ஞானத்துக்குப் பக்குவரல்லாத ஆன்மாக்களை நோக்கி நொந்து அருளிச்செய்த இதுவும், சர்வான்மாக்களுக்குங் கிட்டாதபொருள் உன்னுடைய பாக்கியத்தினாலே கிட்ட இதனைக் கைவிட்டு, வாதனையைக் கைவிடாமல் நின்று, இந்திரிய வேடர்க்கு அடிமையாய்ப் பேதிழந்து போகாதே, இந்த வுண்மையிலே இடைவிடாமல் நின்று சாதித்தற் பொருட்டு, அந்நியோபதேசமாக அருளிச்செய்ததெனக்கொள்க. (சுஉ)

இனிச் சீடனைப்பார்த்து ஒன்று அருளிச்செய்கின்றார்.

57 வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்
நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென்—கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேற் றக்கனார் வேள்விசெய்த
மாத்திரமே யாங்கண்டாய் வந்து.

(இ-ள்.) வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடில் என் - முன்பு மருவிப்போந்த தொழில்களையும் புத்திர மித்திர களத்திராதிகளையுங் கைவிட்டுத் துறவறத்திலேபோய் நின்றாலும் பிரயோசனம் என், — நாட்டிலே நல்வினைகள் செய்திடில் என் - இல்லறத்திலேயிருந்து நன்றான எக்கியாதி கன்மங்களைச் செய்தாலும் பிரயோசனம் என், — கூட்டில் வாள்சாத்தியே நின்றிலையேல் - பொருந்தினதொரு

நிலையிலே நின்றாயாயின் உனக்குப்பிராணனான சிவனைக்கூடி அவன் செயலாகவே கருதி உன்னுடைய செயலற நின்றிலையாகில்,—தக்கனார் வந்து வேள்விசெய்த மாத்திரமே ஆம்கண்டாய் - தக்ஷப்பிராஜாபதி தன்னுடைய அகங்காரத்தின் மிகுதியாலே கர்த்தாவை இகழ்ந்து தன்னாலே செய்யப்பட்டதாகவே நின்று எக்கியத்தைச் செய்து ஒரு பிரயோசனமுங் கைகூடாமல் நீங்காத துன்பமே பெற்றாற்போல, நீயும் கர்த்தாவைக் கைவிட்டு உன்னுடைய செயலென்றே நின்று பெறுதற்கரிய பேற்றை இழந்துபோவை. ஆகையால், இப்படிச் செய்யாமல் அந்தவுண்மையிலே நிற்பாயாக என்க.

இது திருட்டாந்த பூர்வமாக அறிவித்தது. (சுங)

இன்னமும் இவன் செயலறநின்று சாதிக்கும் உபாயத்தை உறுதி பிறக்கும் வண்ணம் அருளிச்செய்கின்றார்.

58 சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்
சிவனுடைய தென்னறிவ தென்றுஞ்—சிவனவன
தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்
தன்செயலாக் கோள்ளாமை தான்.

(இ-ள்.) சிவன் முதலே அன்றி முதல் இல்லையென்றும் - நித்தனாய்ச் சுத்தனாய் எப்பொருட்குந் தாரகமாய்க் கிருத்தியகாரணனுமாய்க் கைவல்லிய தியாகியுமாய் அசைவின்றியே நிற்கின்ற சிவனாகின்ற கர்த்தாவை யொழிய வேறு நானென ஒருமுதல் இல்லையென்றும்,—என் அறிவது சிவனுடைய தென்றும் - ஆன்மாக்கள் யானே அறிந்தேனென்கின்ற அறிவெல்லாம் அவனாலொழிந்து அறியப்படாதாகையால், நீயும் இதனை அவன் அறிவேயென்றும்,—என் செயலதாகின்றது சிவனவன தென்றும் - எக்காலமும் ஆன்மாக்கள் யான்செய்தேனென்று செய்யத்தக்க செயல்களெல்லாம் அந்தக் கர்த்தாவின் செயலாகையால், நீயும் இதனை அந்தக் கர்த்தாவின் செயலேயென்றும்,—இவையிற்றைத் தன் செயலாக் கொள்ளாமைதான் - இப்படி நினைப்பன சொல்வன செய்வனவான இவற்றை எப்பொழுதும் தன்னுடைய செயலாகக் கொள்ளாமல், சகலமுங் கர்த்தாவின் செயலேயென்று யாவர்தான் அறநின்றார்கள் அவர்கள் அந்தப் பொருள் தானாய்விடுவர்கள் என்க. (சுச)

இனி இந்த அர்த்தஞ் சைவசித்தாந்தத்திலொழிந்து வேறொரு சமயங்களிலும் இல்லையென்று அருளிச்செய்கின்றார்.

59 இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுட
ஞென்றுசோலி மன்றத்து நின்றவரா—ரின்றிங்கே
யங்க முயிர்பேறவே பாடு மடியவரா
ரோங்குமிலை கண்டா யிது.

(இ-ள்.) இன்று இச்சமயத்தின் அல்லது ஒன்றுசொலி ஏழையுடன் மன்றத்து நின்றவர் மற்று ஆர் - இப்பொழுது இந்தச் சைவசித்தாந்தத்திலொழிந்து இப்படிப்பட்ட பரமஞானத்தையும் அருளிச்செய்து ஞானசத்தியுடனே கர்த்தா திருவம்பலத்திலே எழுந்தருளி

நின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளித் தன்னுடைய மெய்யடியார்க்கு எடுத்தருளிய ஸ்ரீ பாதமே இரக்ஷையென்று காட்டிய கையுடனே மோனத்தாலே மொழிந்து திருக்கண்சாத்தியருளி எல்லாருங்காணவே நின்றார் வேறொரு சமயங்களில் உண்டோ,—இன்று இங்கே அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவர் ஆர் - இன்று இந்த உலகத்திலே இந்தச் சமயத்திலே ஞானமுதமாகிய திருமுலைப்பாலை அமுதுசெய்து இந்தப் பெருமையாலே நெடுநாள் அஸ்தியாகக்கிடந்தது முன்புபோலே பிராணன்பெற்றுப் பிள்ளையுமாய் உள்ள வயதும் உற்று எழுந்திருக்கும்படி திருவாய்மலர்ந்தருளி இதனைப் பரசமயிகள் தங்கள் அஞ்ஞானத்தாலே சித்துக்காட்டினனென்னாமல் (சித்தர் சித்துகாட்டுவது மீண்டும் அப்பொழுதே பொய்யாய்விடு மாகையால், இப்படி யன்றியே) இந்தப் பெண் நெடுங்காலமிருந்து சிவத்தை அடையும்படி நிறுத்தினவர் சம்பந்தப்பெருமானையன்றொழிந்து வேறு மொரு சமயங்களில் உண்டோ,— இது எங்கும் இல்லை கண்டாய் - இந்த முறைமைகள் இந்தச் சமயத்திலொழிந்து மாணவகனே! வேறொரு சமயங்களினும் இல்லைகாண். ()

இனி இத்தச் சைவசித்தாந்தத்தி அறுதிப்பாட்டிலே நின்ற சிவஞானிகள் பெருமையை அருளிச்செய்கின்றார்.

விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கண் மீண்டுந்
தெரிந்துந் தெரியாது நிற்பர்—தெரிந்துந்
தெரியாது நிற்கின்ற சேயிழைபா லென்றும்
பிரியாது நின்றவனைப் பெற்று.

(இ-ள்.) விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் - இந்தச் சிவரூபம் தம்மிடத்தில் நிற்பதுபோல எவ்விடத்தும் நிற்கின்ற முறைமையைக் கண்டு பேரின்பத்தை எய்தியும் இதிலுறுதலாலே தம்மையும் பிரபஞ்சத்தையும் அந்தப் பொருளையும் மறந்து சுபாவத்திலே அழுந்தியும் அநுபவித்தல் செய்யாநிற்பர் அன்றி,—மீண்டும் தெரிந்தும் தெரியாது நிற்பர் - இந்த முறைமைகளிலே அநுபவியாநிற்கும்போதும் பிராரத்தத்தாலே பிரபஞ்சந்தோன்றினாலுஞ் சொரூபத்தினைக்கியத்தாலே பிரபஞ்சநீதி அறியாமல் அந்த வுண்மையைக் கண்டு நில்லாநிற்பர்கள் சிவஞானிகள்,—தெரிந்தும் தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும் பிரியாது நின்றவனைப் பெற்று - அநாதியே சர்வத்தையும் அறிந்தும் அறிவித்தும் நடத்தாநிற்கும்போதுந் தான் ஒரு விகாரங்களினும் படாமல் நிற்கின்ற ஞானசத்தியுடனே எக்காலமும் விட்டு நீங்காத சிவனைத் தங்களிடத்தில் அறுதியாகப்பெற்று என்க.

இது சிவஞானிகளுக்கு ஒடுக்கத்திலும் விரிவிலுந் திரிவிலும் இந்த வுண்மையே யொழியப் பிரபஞ்சவாதனை கூடாதென்று அறிவித்தது. (௬௬)

இன்னமும் ஒரு திருவெண்பாவாலே இதனை விளக்க அருளிச்செய்கின்றார்.

ஆதனமு மாதனியு மாய்நிறைந்து நின்றவனைச்
சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச்—சேதனனைச்
சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்ப
ரேதமறக் கண்டவர்க ளின்று.

(இ-ள்.) ஆன்மாக்களுக்கு இருப்பிடமான தத்துவங்களையும் இவையிடமாக நிற்கின்ற ஆன்மாக்களையும் அநாதியேபொருந்தி அவை அவ

ராய் அல்லவுமாய் நிற்கின்ற சைதன்னியசொரூபனான சிவனை அவன் காருண்ணியத்தினாலே ஞானமே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளி வந்த ஆசாரியனைக்கொண்டே தெளிந்து, தாமும் அந்தச்சைதன்னிய சொரூபராய், நிற்கின்ற தம்மையும் அந்தச்சைதன்னியத்தோடு கலை யும்படி அந்தச் சிவன்கையிலே கொடுத்து, ஞானத்துக்கு மேலாகிய அந்தச்சிவமாகியே இன்றும் இராநிற்பர்கள், திரோதாயி நீங்கத் தரி சித்த கலியாணர்கள் என்க. (சுஎ)

இப்படி நிற்கத்தக்க சிவஞானிகளிடத்தில் உண்டான விசேஷங்கள் விளங்க அருளிச்செய்கின்றார்.

62 தாமடங்க விந்தத் தலமடங்குந் தாபதர்க
டாமுணரி லிந்தத் தலமுணருந்—தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலு
நாமடந்தை நில்லா ணயந்து.

(இ-ள்.) தாம் அடங்க இந்தத்தலம் அடங்கும் தாபதர்கடாம் உண ரில் இந்தத்தலம் உணரும் - இப்படி ஞானத்திலே நின்று சாதித்தவர் கள் அந்தச் சிவனைப்பெற்றுச் சிவனிடத்திலே ஒடுங்கவே, ஞானமும் ஒக்க ஒடுங்காநிற்கும். இப்படிப்பட்ட சிவஞானிகள் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலும் முன்பு ஒடுங்கின ஞானமும் ஒக்க உணர்ந்து முன்பு மாயை சிவித்தாற்போல இப்பொழுதும் இந்தஞானமே இவனுக்குத் தனுகரண புவனபோகங்களுமாய் நிற்கும்; — தாம் முனியின் பூமடந் தை தங்காள் புகழ்மடந்தைபோய் அகலும் நாமடந்தை நயந்து நில்லாள்- இப்படிப்பட்ட சிவஞானிகளுக்குக் கோபப்பிரியங்கள் இல்லையாயினும் மிக்க பாவிகளால் அவர்கள் திருவுளங் கருகினகாலத்து அந்தப்பாவிக ளுக்குண்டான ஐசுவரியமும் போய் அவர்கள் கீர்த்தியும் விட்டுப்போய் அவர்கள் வாக்குகளும் தம்பியாநிற்கும் என்க.

சிவனைக்கூடிநின்ற சிவஞானிகளுக்குப் பிராரத்தத்தாலே நிலைதிரிந்தாலும் விசுவங்கூடாமல் ஞானங்கூடின காரணம் ஏதென்னில்? ஞானத்திலே நின்றவன் விழுந்தால் அதற்குக்கீழான பிரபஞ்சத்திலே விழாநிற்பன். ஞேயத்திலே அழுந்தி னவனுக்கு நிலைதிரிந்தால் அதற்குக்கீழான ஞானத்திலே விழுவன். இதனை யொ ழிந்து விசுவங்கூடாதென அறிக. (சுஅ)

இப்படிச் சிவனைப்பெற்றவர்கள் முத்தராய் விடுவதொழிந்து, ஒன்றை ஆக்கு தல் அழிக்குதல்செய்யின், அவை ஈசுவரன் கிருத்தியமாயிருக்க, இவர்களுக்குண் டானபடி எப்படி யென்ற மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

63 துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்—றுரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளு
மாக்கியிடு மன்பர்க் கவன்.

(இ-ள்.) துரியங் கடந்த சுடர்த்தோகையுடன் என்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் - ஆன்மபோதத்தால் அறிதற்கரிய ஞானசத்தியு டனே எக்காலமும் விட்டு நீங்காமல் நிற்கின்ற பரமேசுரனானவன்,—

துரியத்தைச் சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும் அவன் அன்பர்க்கு ஆக்கியிடும் - தன்னுடையவளவிலே மிக்க அன்பை வைத்த ஆன்மாக்களை ஆன்மபோதங் கூடாமல் விழிப்பித்த ஞானசத்தி யிலே கூட்டித் தன்னாலே செய்யப்பட்ட அநுக்கிரக நிக்கிரகங்களையும் அவர்களைக்கொண்டு தான் கூடி நின்றுசெய்வித்து அவர்கள் செய்தார்க ளாம்படியே நிறுத்தாநிற்பன் என்க. (௬௯)

இப்படிப்பட்ட சிவஞானிகள் அருளாலே செய்த சாமர்த்தியங்களை நான்கு திருவெண்பாக்களாலே அருளிச்செய்கின்றார்.

64 ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்த—லேடே திர்வேப்
பேன்புக் குயிர்கோடுத்த லிங்கிவைதா மோங்குபுகழ்த்
தேன்புகலி வேந்தன் சேயல்.

(இ-ள்.) முள்ளிவாய்க்கரையினின்று ஆற்றுப்பெருக்கிலே கோலி ன்றி ஓடஞ்செலுத்தித் திருக்கொள்ளம்பூதூர் சேர்ந்ததும், திருப்பட் டீச்சுரத்திலே முத்துச்சிவிகை பெற்றதும், திருவாவடுதுறையிலே உல வாக்கிழிபெற்றதும், திருமறைக்காட்டிலே திருக்கதவம் அடைக்கப் பாடியதும், திருவோத்தூரிலே ஆண்பனை பெண்பனையாகப் பாடிய தும், திருக்கோலக்காவிலே பொற்றாளம் பெற்றதும், பாலையை நெய்த லாகப் பாடியதும், மதுரை வைகை நதியிலே திருவேடு எதிரேறப்பாடி யதும், கூன் பாண்டியர் சுரநோய் தீர்த்ததும், திருமயிலையிலே என்பைப் பெண்ணாக்கியதும் ஆகிய இவ்வற்புதச் செயல்கள் உயர்ந்த புகழையு டைய அழகிய சீகாழிக்கு அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாய னார் சிவபிரான் திருவருளாலே செய்யப்பட்ட வைகளாம் என்க. (௭0)

65 கோல்கரியி னீற்றறையி னஞ்சிற் கோலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த—னல்ல
மருவார் மறைக்காட்டில் வாசறிறப் பித்த
றிருவாமூ ராளி சேயல்.

(இ-ள்.) பல்லவராஜன் அநுமதிபெற்று க்ஷமணர்கள் விடுத்த கொல்கின்ற யானையினின்றும் அடைத்த நீற்றறையினின்றும் விட மூட் டுதலினின்றும் கொலையைப் போக்கியதும், கல்லேதெப்பமாகக்கொண்டு கடலைநீந்திக் கரையேறியதும், நல்லவாசனை பொருந்துந் திருமறைக் காட்டிலே திருக்கதவந் திறக்கப்பாடியதும் ஆகிய அற்புதச்செயல்கள் திருவாமூரை ஆண்டருளிய திருநாவுக்கரசுநாயனார் சிவபிரான் திருவரு ளாற் செய்யப்பட்டவைகளாம் என்க. (௭௧)

66 மோக மறுத்திடினு முத்தி கோடுப்பதேன
வாகமங்கள் சோன்ன வவர்தம்மைத்—தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றோண்டன் றோண்டுகளை
யேதாகச் சோல்வே னியான்.

(இ-ள்.) ஒருவன் மோகத்தை ஒழித்தால் அவனுக்கு வீடுபேற்றை யாம் அருளுவது முறையென்று, வேதாகமங்களிலே விதித்தருளிய

மேம்பட்ட சிவபிரானையே, பரவையார் சங்கிலியார் இருவர்மாட்டும் தூதாராகச்செலுத்துந் திருவருளை அப்பெருமான் மாட்டுப்பெற்ற வன்றொண்டராகிய சுந்தரமூர்த்திநாயனாரது தொண்டுகளை யான் எத்துணைப் பெருமையுடையதென்று அளவிட்டுரைப்பேன் என்க. (௭௨)

67 பாய்பரியோன் றந்தப் பரமானந் தப்பரனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

(இ-ள்.) தாவுகின்ற குதிரைமேற்கொண்டு எழுந்தருளிய மேலாகிய பேரின்பவடிவமுடைய சிவபிரானை (அவரது திருவருள்பெற்று)த் தூயமலர்போலுந் திருவாயாற் புகழ்ந்து திருவாசகம்பாடி, யாங்கள் (அத்திருவாசகத்தை ஓதுதலால்) பொய்யாகிய கருப்பத்தின் வருத்தம் அறியாவண்ணம் செய்தருளினர். திருவாதவூரை ஆண்டருளிய தேன் போல மனத்திற்கு இனித்தலுடைய மாணிக்கவாசகமூர்த்திநாயனர். இதனைக்காண்பாயாக என்க. (௭௩)

இப்படிப்பட்ட சிவயோகமே முத்தியைத் தருவதென்றும் நின்றயோகங்களெல்லாம் ஜநநத்தை விளைக்குமென்றும் அருளிச்செய்கின்றார்.

68 அம்மையிலு மிம்மையிலு மச்சந் தவிர்த்தடியா
ரெம்மையுமா யெங்கு மியங்குதலான்—மெய்ம்மைச்
சிவயோக மேயோக மல்லாத யோக
மவயோக மேன்றே யறி.

(இ-ள்.) தம்பிரானர் திருவடியைப்பெற்ற சிவயோகிகள், பதமுத்திகளாலுண்டான பயங்களையும், பிராரத்தத்தாலே இந்த உலகத்திலுண்டான பயங்களையுஞ் சொரூபத்திணக்கியத்தாலே கெடுத்து, அந்தச் சொரூபத்துக்குள்ளளவும் வியாத்தராய் ஒருசங்கற்ப விகற்பங்களுமின்றியே, எவ்விடத்துந் தங்கள் சுவேச்சையிலே திரிகையால், மாணவகனே ! இப்படிச் சற்காரியமான சிவயோகமே, சிவனை உள்ளபடியறிந்து கூடினயோகமாம். மற்றுமுள்ள யோகங்களெல்லாம் சிவனை உள்ளபடியறியாத யோகங்களாகையால், அவையெல்லாம் ஜநநத்தையுண்டாக்குமென்றே அறிவாயாக என்க. (௭௪)

ஆன்மாக்களெல்லார்க்குங் கர்த்தா ஒருவனுயிருக்க, சிலரைப் பதமுத்திகளிலே வைத்துஞ், சிலரைத் திருவடியிலே சேர்த்துக்கொண்டுஞ், சிலரை விசுவத்திலே நிறுத்தியுஞ் செய்தால், பக்ஷவாதியாகானே அவனுடைய கிருபைக்குப் போதுமோ வென்ற மாணக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

69 மன்னனரு ளெவ்வண்ண மானுடர்பான் மாணவக
வன்ன வகைய தரனருளு—மென்னி
லடியவரோ யெல்லாரு மாங்கவர்தா மோப்பி
லடியவரோ யெல்லா மறி.

(இ-ள்.) மாணவகனே ! இராஜாவானவன் தன்னுடைய ஆஞ்ஞை வழி நடக்கும் இராச்சியங்களில், பிராணிகளெல்லாரையும் இரக்ஷிக்க

வேண்டுமென்கின்ற கருத்து எப்பொழுதும் உண்டாயிருந்தும், புத்திமான்களாய்ச் சாந்தராய்த் தன்னளவிலே மிகுந்த சிநேகராயிருக்கத் தக்கவர்களைத் தானாகப்பார்த்தும், தன்னளவிலே சிநேகமின்றிக்காரியத்தைப்பெற்று ஆஞ்ஞைக்குப் பயந்திருக்கத்தக்கவர்களை ஒவ்வொரு முகங்களிலே வைத்தும், குணஹீனரா யிருக்கத்தக்கவர்களை அவர்களுக்குத்தக்க தண்டங்களிலே வைத்துத் தண்டித்துக் குணவான்களாக்கியுஞ் செய்கின்ற இவையெல்லாங் கிருபையேயானாற்போல, பரமேசுவரருடைய திருவுள்ளம் எல்லாரளவிலும் ஒத்தவாறாயிருப்பினும், மலபாகமுண்டாமளவும் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களையுங் கன்மபலங்களையுங் கூட்டிச் சுகதுக்க வாதனைகளிலே வைத்தும், சிலரைச் சத்திநிபாதக்குறைவுக்கீடாகப் பதமுத்திகளிலே வைத்தும், மிகுத்த சத்திநிபாதமுடையவர்களைத் திருவடியிலே சேர்த்தும் இங்ஙனம் முறையாக நிறுத்துவன். ஆனால், எல்லாரும் அவருக்கு அடிமையாயிருந்தாலும், திருவடியைப் பெற்ற அடியார் ஒப்பில்லாத அடியாராகையால், நீயும் இவை யெல்லாவற்றையும் அறிந்து, திருவடியிலே பொருந்தி யிருக்கின்ற சிவயோகமே ஜநநத்தை அறுக்கின்ற யோகமென்று இதிலே நிலைநின்று அநுபவிப்பாயாக என்க. (எ௫)

இப்படி ஒப்பில்லாத அடியார்க்குந் தேகமுள்ளவளவும் பிராரத்தம் புசிக்க வேண்டுகையால், பிராரத்தம் புசிக்கும்போதும் ஆகாமியமேறாமற் புசித்தபடி எங்ஙனமென்ற மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

௭௬ உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப
மடங்கத்தம் பேரின்பத் தாக்கிற்—றொடங்கி
முளைப்பதுமொன் றில்லை முடிவதுமொன் றில்லை
யிளைப்பதுமொன் றில்லை யிவர்.

(இ-ள்.) உடம்புடைய யோகிகடாம் உற்ற சிற்றின்பம் அடங்கத் தம்பேரின்பத்து ஆக்கில் - பிராரத்தநாசம் பிறக்குமளவும் உடம்பிருக்கத்தக்க சிவயோகிகள், தாம் சிற்றின்பத்தைப் பொருந்தினார்களாயினும், அந்தச் சிற்றின்பமானது நிலையில் வேறுபாடும், பாவனையில் வேறுபாடுமொழியப், பேரின்பத்திலே வேறுபாடில்லை யாகையால், இவர்களுக்கு இந்தவிரண்டு வேறுபாடுமின்றிச் சொரூபத்திலே நிலை திரிந்தாலும், ஞானத்திலொழிந்து, மலமாயை கன்மங்களிற்படார்கள்; ஆதலாலே, கூடின சிற்றின்பங்களெல்லாம் ஞானத்தினிலையாலே மீண்டும் அந்தப்பேரின்பத்திலே ஆக்கிக்கொள்ளாநிற்பர்கள். இப்படிச்செய்யில் இவர்களுக்கு,—தொடங்கி முளைப்பதும் ஒன்றில்லை முடிவதும் ஒன்றில்லை இளைப்பதும் ஒன்றில்லை இவர் - பிராரத்தம் புசிக்கும்போதும் மறுமைக்கு வித்தான ஆகாமியம் அங்குரிப்பது சிறிதுமில்லை. பிராரத்தநாசம் பிறந்து தேகமானது நழுவுங்காலத்து இவ்வுடம்புடன் கூடி மரிப்பதுமில்லை; ஆகையால், இவர்கள் ஒரு கன்மங்களாலும் ஒரு சற்றுஞ் சலியார்கள் என்க. (எசு)

ஞானத்தாலே சொரூபத்தைக் கூடவேண்டுமாகில், அந்த ஞானந்தானே அமையாதோ, சொரூபமென்னும் ஒரு பொருளைக் கூடவேண்டுமோ வென்ற மாணுக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

71 பேரின்ப மான பிரமக் கிழத்தியுட
னேரின்பத் துள்ளானை யுள்ளபடி—பேரின்பங்
கண்டவரோ கண்டார் கடலுயிர்த்த வின்னமுத
முண்டவரோ யுண்டார் சுவை.

(இ-ள்.) பேரின்பமான பிரமக்கிழத்தியுடன் ஓரின்பத்து உள்ளானை உள்ளபடி பேரின்பம் கண்டவரோ கண்டார் - அளவிடப்படாத பரமாநந்தமான பிரமசத்தியுடனே இடைவிடாத சுகரூபனுயிருக்கின்ற பரமேசுவரனை முறைமையிலே கூடி அந்தப்பரமாநந்தமே அநுபவிக்கின்ற சிவயோகிகளே சிவனை உள்ளபடி அறிவார்கள்,—கடல் உயிர்த்த இன் அமுதம் உண்டவரோ உண்டார் சுவை - கடலிற்பிறந்த இனிய அமுதத்தைப் புசித்து அதில் உண்டான இரசத்தில் அழுந்தினவர்களே, அமுதத்தைப் புசித்தவர்களும் அதிற் பிரயோசனமான நித்தியத்துவம் பெற்றவர்களுமல்லது, அந்த அமுதத்தைத் தரிசித்தமாத்திரத்தில் அதனுடைய இரசமுந் தெரியாது பேறுங்கூடாது. அதுபோல, மலமாயை கன்மங்களை நீங்கி ஞானத்தைத் தரிசித்தாலுஞ், சிவனைக்கூடிப் பரமாநந்தத்தை அநுபவித்தா லொழிந்து, ஞானம் அறிந்த மாத்திரத்தில் சாயுச்சியங்கூடாது என்க. (எஎ)

இப்படிச் சுகரூபமாயிருக்கின்ற பரமேசுவரன் நானாவிதமாயிருக்கின்ற பிரபஞ்சத்துக்குக் கர்த்தாவாகில், அவனும் விகாரியாகானோ வென்ற மாணுக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

72 நங்கையினா ளுமனைத்துஞ் செய்தாற்போ ளடனைத்து
நங்கையினாற் செய்தளிக்கு நாயகனு—நங்கையினு
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகா
ணெம்பெருமா னூர்த மியல்பு.

(இ-ள்.) நம்முடைய நினைவின் வசத்திலே நின்று, கைகள் முதலான அங்கங்களெல்லாந் தொழில்களைச் செய்துமுடியாநிற்க, அந்தச் செயற்பாடுகளெல்லாம் நம்மேலே ஏறுமாறுபோல, சுகரூபியாயிருக்கின்ற சிவன் சாக்ஷிமாத்திரமாயிருந்து தன்னுடைய சத்தியாலே பிரபஞ்ச நடத்திநிற்க, இந்தச் சத்தியினும் நிர்விகாரமாயிருக்கின்ற சிவன் தான் ஒன்றைச் செய்யாதிருக்கும் போதும், இந்தச் சத்திக்குப் பிராணனும் நாயகனுமாகையாலே, இந்தச் சிவனையே கர்த்தாவாகச் சொல்லப்படுதலான் மாணவகனே! இவ்வளவேகாண் எம்முடைய கர்த்தாவுக்குச் செயலாயுள்ளது என்க. (எஅ)

இப்படி வெகுவிதமான சத்தியிலே, நிர்விகாரமான சிவன் பொருந்தி நின்றபடி எப்படியென்ற மாணுக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

73 பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லந்நிற மண்ணலு மம்பிகையுஞ்—செந்நிறத்த
ளேந்நிறத்த ளாயிருப்ப ளேங்கள் சிவபதியு
மந்நிறத்த னாயிருப்ப னாங்கு.

(இ-ள்.) பொன்னினது நிறமான மாற்றானது கட்டியானபோதும் ஆபரணங்களானபோதும் மாற்றுக்கு வேறுபாடில்லாமைபோல, சுக

ரூபனன சிவனும் ஞானசொரூபமான சத்தியும் இந்த முறைமையேயாதலால், பிரபஞ்ச நிமித்தமாகச் சத்தியானது யாதொரு ரூபமாயிருந்ததோ நம்முடைய கர்த்தாவாகிய சிவனும் அந்த விடங்கள்தோறும் அந்தந்த முறைமைகளாயே இராநிற்பன் என்க. (எகூ)

இன்னமுஞ் சிவனுடைய நிலைமையை விளங்க அருளிச்செய்கின்றார்.

74 தாரத்தோ டொன்றாவர் தாரத்தோர் கூறாவர்
தாரத்தோ டெங்குந் தலைநிற்பர்—தாரத்தி
னாதாந்தத் தேயிருப்பர் நாற்றானத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு.

(இ-ள்.) தாரத்தோடு ஒன்றாவர் - சிருட்டி காலத்திலே ஆன்மாக்கள் சூக்குமதேகத்துடனே இச்சாஞானக்கிரியை சீவிக்கைப்பொருட்டாகச் சிவனும் தம்முடைய சத்தியைத் தோற்றுவித்துத் தாமும் அந்தச் சத்தியுடனேகூடி இச்சாஞானக்கிரியா சொரூபமாவர்,—தாரத்து ஓர் கூறாவர் - அவர்களுக்குத் தூலதேகமாய் வகுப்புண்ண வேண்டித் தாமுஞ் சத்தியுமாக அர்த்த நாரீச்சுர விக்கிரகமாகாநிற்பர்,—தாரத்தோடு எங்கும் தலைநிற்பர் - அந்த ஆன்மாக்களுக்கு மலபாக முண்டாகைப்பொருட்டு அவர்கள் கன்மங்களை அநுபவிக்கவும் ஆர்ச்சிக்கவும் வேண்டி, சத்தியுருவமான பிரமா விஷ்ணு உருத்திரர் மகேசுவரர் சதாசிவர் என்று சொல்லப்பட்ட விக்கிரகங்களுடனே அந்தரமூர்த்தியான பிரணவசொரூபமாய் ஆன்மாக்களிடங்களிலே மாயாதத்துவங்களுடனேகூடி நடத்தாநிற்பர்,—தாரத்தின் நாதாந்தத்தே இருப்பர் - மீண்டும் ஆன்மாக்களையுந் தத்துவங்களையும் பிரிக்கவேண்டி மகாமாயாசத்தியான நாதாந்த நிருவிகாரத்திலே இராநிற்பர்,—நாற்றானத்தே இருப்பர் - இவை ஒன்றையும் அறியாமல் உபாதானங்களிலே மறைபடவேண்டி நாலாந்தானமான திரோதானசத்தியிலே இராநிற்பர்,—வேதாந்தத்தே இருப்பர் - இவற்றுக்கு அநுக்கிரகஞ்செய்யவேண்டி வேதத்திலே முடிந்த பொருளான பராசத்தியிலே இராநிற்பர்,—வேறு - இப்படி எல்லாமாய் நிற்கும்போதும் இவற்றுக்குத் தான்வேறுமாய்த் தன்னுடைய சுபாவமான சொரூபமாய் இராநிற்பர் என்க. (அ0)

இப்படிப் பரமேசுவரன் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கின்ற முறைமையைப் பேதமென்னவோ அபேதமென்னவோ பேதாபேதமென்னவோ வென்ற மாணாக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

75 ஒன்றுரைத்த தோன்றுரையாச் சாத்திரங்க ளோன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவா—லின்றுரைக்க
வேன்னா லியன்றிடுமோ வேன்போல்வா ரோதேனுஞ்
சோன்னாற்றா னேறுமோ சோல்.

(இ-ள்.) வெகு விதமாயுள்ள சாத்திரங்களெல்லாம் ஒருசற்றுந் தரித்து நின்று அவனுடைய உண்மையை அறுதியிட்டுச் சொல்ல மாட்டா. இப்படிப்பட்ட தொன்றை இப்பொழுது அறுதியிட்டுச்

சொல்ல என்னல் முடியுமோ என்னையொப்பார் சிலர் சொன்னாலும் விசுவத்திலுள்ளார்க்கு ஏறிடுமோ சொல்லாய் என்க.

இன்னமும் இவனுக்கு இந்த முறைமை விளங்கிற்றில்லை யென்று நொந்து இப்படி அருளிச்செய்ததெனக்கொள்க. (அக)

இதனை இன்னமும் இவனறியும்படி அருளிச்செய்கின்றார்.

76 யாதேனுங் காரணத்தா லெவ்வுலகி லெத்திறமு
மாதேயும் பாக னிலச்சினையே—யாதலினுற்
பேதமே செய்வா யபேதமே செய்திடுவாய்
பேதாபே தஞ்செய்வாய் பின்.

(இ-ள்.) யாதொரு காரணத்தினுற் சர்வலோகங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களுஞ் சத்தியைப் பொருந்தின சிவனுடைய அடையாளமேயாகையால், நீயும் இதனைப்பேதமென்பாய் அபேதமென்பாய் பேதாபேதமென்பாய் இவற்றிற் பொருந்தினதொன்றைச்சொல்வாயாக என்க.

பின் என்றது ஞாதாக்களுக்கு இந்த மூன்றுகாரியங்களுங் கருத்தல்ல வென்பது நோக்கியாம். அடையாளமென்றது சர்வமுஞ் சைதன்னியமாக நின்றவர்கட்கன்றி மற்றையருக்குப் பல அவசரபேதங்களாய் நின்றிரக்ஷிக்கையாமென்க. (அஉ)

இந்தமுறைமை அர்த்தத்தில் அழுந்தினவனுக் கொழிந்து, கேட்டவனுக்கு விளங்காதென்று, இன்னமும் இதனை விளங்க அருளிச்செய்கின்றார்.

77 நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா
மன்றினுணின் றுடன் மகிழ்ந்தானுஞ்—சென்றுடனே
யெண்ணுறுமைம் பூதமுத லெட்டுருவாய் நின்றானும்
பெண்ணுறநின் றுமே பிரான்.

(இ-ள்.) நீ சொல்லுகின்ற பேதமும் அபேதமும் பேதாபேதமும் அன்று. சங்காரகாலத்திலே, சத்தியையும் ஒடுக்கிக்கொண்டு சங்கார தாண்டவஞ் செய்தருளின தம்பிரானே, சிருஷ்டிகாலத்திலே, தோற்றுவிக்கத்தக்க பொருள்களுடனே பொருந்திய பஞ்சபூதங்களுஞ் சந்திராதித்தரும் ஆன்மாக்களுமாய் நின்றானும், திதிகாலத்திலே, அடியார் பிறவித்துயரங்கெடத் திருவம்பலத்தில் ஆநந்த நிருத்தத்தை விரும்பினனுமாகையால், அநாதியே தன்னுடைய சொரூபந் தோன்றாமல் ஆன்மாவாய் நின்ற முறைமைபோல, ஆன்மபோதந் தோன்றாதபடி சிவனுயே நின்றவர்களுக்கொழிந்து, சிவனுடைய உண்மைதெரியாது என்க. (அங)

இனிச்சொருபத்திலே ஒருதன்மையாய் நிற்குமுறைமையை அருளிச்செய்கின்றார்.

78 சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்—சிவமேன்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சேன்று
புணர்வாரு முண்டோ புவி.

(இ-ள்.) சிவமே சிவமாக யான் நினைந்தாற்போலச் சிவமாகியே இருப்பதன்றி - பேதமும் அபேதமும் பேதாபேதமு மறப் பக்குவத்திற்

பிரகாசித்த சிவசொரூபமே சொரூபமாக வேறொரு விகற்பமுங்கூடாமல் நான் அநுபவித்தபடியே உன்னையும் நிறுத்த நினைந்தாற்போல, மாணவகனே! நீயும் ஒரு விகற்பமுங் கூடாமல் அந்தச் சொரூபமே சொரூபமாக இருப்பதொழிந்து,—சிவமென்று உணர்வாரும் அங்கே உணர்வு அழியச்சென்று புணர்வாரும் உண்டோ புவி - தானும் தனியே ஒருமுதலென்றும், சிவனும் தனித்தொருமுதலென்றும் தன்னுடைய போதத்தாலே இந்தச்சிவனை அறியவிசாரிப்பாரும், அவ்விடத்தே தான்கெட்டுச் சிவத்துடனே பொருந்த விசாரிப்பாரும் உண்டோ உலகங்களில் என்க. (அச)

இன்னமும் இதனை விளங்க அருளிச்செய்கின்றார்.

79 அதுவிது வென்று மவனானே யென்று
மதுநீயே யாகின்ற யென்று மதுவானே
னென்றுந் தமையுணர்ந்தா ரெல்லாமி ரண்டாக
வொன்றாகச் சொல்வரோ வுற்று.

(இ-ள்.) ஆன்மாவும் சிவமும் எப்பொழுதும் இரண்டாயிருக்குமென்றும், சிவமென்று ஒரு முதலில்லை ஆன்மாத்தானே சிவமென்றும், சிவம் நீ யென்று வேறில்லை உன்னுடைய வுபாதிகள் நீங்கினபொழுதே நீதானே சிவமாகின்றாயென்றும், நான் சிவனுடனே கூடிச் சிவனாய் விட்டேனென்றும், தம்மையுள்ளபடி அறிந்திருக்கின்ற சிவயோகிகள் இப்படியே பேதமாகவும் அபேதமாகவும் பேதாபேதமாகவும் சொல்லுவார்களோ மாணவகனே! என்க. (அரு)

இனிக்கர்த்தா எல்லாமாய்நிற்கின்ற சுபாவத்தை விளங்க அருளிச்செய்கின்றார்.

80 ஈறாகி யங்கே முதலொன்றா யீங்கிரண்டாய்
மாறாத வெண்வகையாய் மற்றிவற்றின்—வேறா
யுடனா யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண்.

(இ-ள்.) ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் - சர்வமுமுடிந்த விடத்தே, சிவம் ஒன்றுமேயாய்,—ஈங்கு இரண்டாய் - மீண்டுஞ் சிருஷ்டிகாலத்திலே, சத்தியைத் தோற்றுவித்தும் அந்தச்சத்தியுந்தாமுமாய்,—மாறாத எண்வகையாய் - சர்வத்தையும் அந்தச் சத்தியிடமாய் நின்றுந் தோற்றுவித்து அந்தச்சத்தியும் இவையுங்கூடி நின்று நடக்கும்படி ஒழிவற்ற அட்டமூர்த்தியுமாய்,—மற்று இவற்றின்வேறாய் - இப்படி இவற்றிற் பொருந்தி நிற்கும்போதும் இவற்றுக்குத்தான் வேறுமாய்,—உடனாய் இருக்கும் உருவுடைமை - இப்படி வேறாய் நிற்கும்போதும் ஒருமுதல் போல இவைதானேயாய் நிற்கின்ற உண்மையை,—என்றும் கடனாய் இருக்கின்றான்காண் - மாணவகனே! எப்பொழுதும் அவன் உடையனாயிருக்கின்றான்காண் என்க.

இது பேதமென்பார்க்கும் அபேதமென்பார்க்கும் பேதாபேதமென்பார்க்கும் இவை யல்லவென்பார்க்கும் பொருந்திநிற்ப னென்னுமுறைமை அறிவித்தது. (அசு)

சிவனுக்குச் சர்வமுந் திருமேனியாகில், உடல் உறுவதெல்லாம் உயிர் உறுதோ வென்ற மாணக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

81 உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லா
முன்னுடைய தென்னுய்நீ யுற்றனையோ—மன்னுயிர்க
ளெவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்
செவ்வகையே நின்றசிவன் பால்.

(இ-ள்.) மாணவகனே! உன்னுடைய வுதரத்திலே, நானுவிதமாய்க் கிடக்கின்ற ஜந்துக்கள் வினைக்கீடாகப் படுகின்ற சுகதுக்க வாதனைக ளெல்லாம், உனக்குள்ள வினைபோல நீ கூடிநின்று அநுபவித்த துண்டோ? ஆகையால், சர்வத்தையுங்கூடி நிற்கும்போதேயும் அவை ஒன்றுடனும் பற்றறநின்று பிரகாசிக்கின்ற சிவனிடத்திலே, அவனரு ளாலே நிலைபெற்று நிற்கின்ற ஆன்மாக்கள், ஆகையும் அழிகையுமாய் வருகின்றவுண்மை, அந்த முறைமைபோலக்காண் என்க.

இது சுகதுக்கவாதனைகள் ஆன்மாவுக்கொழிந்து சிவனுக்கில்லை யென்னும் முறைமை அறிவித்தது. (அஎ)

சிவன் சுகதுக்கவாதனைகள் கூடாமல் நிற்கும்போதே சர்வமுந்தானுக நிற் கின்ற சாமர்த்தியம் அருளிச்செய்கின்றார்.

82 அவனே யவனி முதலாயி னனு
மவனே யறிவாய்நின் றனு—மவனேகா
ணுகிப் பெண்ணு யலியாகி நின்றுனுங்
காணுமை நின்றுனுங் கண்டு.

(இ-ள்.) மாணவகனே! பிருதுவிமுதல் நாதமீறுன தத்துவங்கள் சேட்டிக்கும்படி அந்தத் தத்துவங்களுக்குத் தத்துவனுய் நின்றுனும் அந்தப் பரமேசுவரனே. இந்தத் தத்துவங்களைப்பொருந்தி ஆன்மாக்கள் கன்மமலத்தைப் புசிக்கும்படி அந்தவான்மாக்களுக்கு ஆன்மாவாய் நின் றுனும் அந்தப்பரமேசுவரனே. தோற்றப்பட்ட பூதகாரியங்கள் ஆன்மாக் கள்செய்த வினைக்கீடாக ஆண் பெண் அலி என்று வகுப்புண்டு வடி வாம்படி அவற்றை வகுப்பித்து இந்தவகுப்புக்கு வகுப்பாய் நின்றுனும் அந்தப்பரமேசுவரனே. இவற்றை இப்படி அறிந்துகூடி இவை தானுய் நின்று நடத்தும்போதேயும் இந்தமுறைமைகள் ஒன்றும் அறியாதபடி திரோபவித்து ஒருபணியற நின்றுனும் அந்தப்பரமேசுவரனே என்க.

இப்படிப்பட்ட பரமேசுவரனை, இந்தத்திருஷ்டியாலே காணவொண்ணுதோ வென்று அன்புமிகுதியாலே கேட்ட மாணக்கனைநோக்கி அருளிச்செய்கின்றார்.

83 இன்றுதா னீயென்னைக் கண்டிருந்துங் கண்டாயோ
வன்றுதா னுன்னைக் கண்டேனே—வென்று
லருமாயை யீன்றவடன் பங்கனையார் காண்பார்
பெருமாயைச் சூழல் பிழைத்து.

(இ-ள்.) இப்பொழுது நீ என்னைக்கண்டும் இவையெல்லாம் அறி யும்போதும் என்னுடைய சொரூபத்தை உன்னுடைய மாமிச திருஷ்டி யாலே கண்டாயோ, அன்றி இவற்றையெல்லாம் அறிந்தறிவிக்கின்ற நான்றான் உன்னுடைய சொரூபத்தை இந்தத் திருஷ்டியாலே கண்

டேனேவென்றால், யாவர்க்குந்தெரியாத மாயையைப்பெற்ற சத்தியைப் பாதியிலே யுடைய பரமேசுவரனை மாமிச திருஷ்டியாலே காணவல்லார் யாவர்; விடப்படாத மாயையாலே மறைக்கத்தக்க மறைப்பையெல் லாந்தப்பி என்க.

இது இந்தத் திருஷ்டிக்குக் கோசரமாகக்கண்டு வழிபட்டு வீடுபெறுகைக்கு நம்மைப்போ லெழுந்தருளி வந்து அநுக்கிரகித்த ஆசாரியமூர்த்தியை யொழிந்து, வேறொரு தெய்வம் இல்லை யென்று அறிவித்தது. (அகூ)

இப்படிக்கடாக்ஷித்த ஞானகுருவின் பெருமையை அருளிச்செய்கின்றார்.

84 கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றுங்
கடலளக்க வாராதாற் போலப்—படியி
லருத்திசெய்த வன்பனாவந் தாண்டதுவு மெல்லாங்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.

(இ-ள்.) மாணவகனே! கடலின்கண்ணெய்தித் திரைகளை அலைத்து நின்றாடுதற்குவல்ல சாமர்த்தியவான்களுக்கும், கடலினுடைய ஆழமும் அகலமும் நீளமும் அறியவாராததுபோல, பூமியின்கண்ணே சரியை கிரியை யோகங்களிலே தீரவநுட்டித்த பத்திமான்களுக்கும், சிவனு டைய ரூபசொரூப சுபாவங்களை அறியவிசாரிக்கில், அவர்கள் கருத்துக் கும் எட்டாதாகையாலே, நம்மைப்போலத் தம்பிரானார் திருமேனி கொண்டெழுந்தருளிவந்து ஞானதீக்ஷாக் கிரமங்களினாலே மலங்களைப் போக்கி அவர்களை அடிமைகொண்டது என்க. (கூ0)

ஆகையால், நம் பொருட்டுத் திருமேனி கொண்டெழுந்தருளி வந்த ஆசாரி யனே அருளுஞ் சிவமுமென்று அருளிச்செய்கின்றார்.

85 சிவனேனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி—லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச்சேய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன்.

(இ-ள்.) "சிவனெனவே யானுந் தேறினன் காண்க" என்று திருவாத வூர் நாயனார் அருளிச்செய்த பிரமாணப்படி, நம்மை இரக்ஷிக்குங் கார ணத்தால் இப்பொழுதும் பரமேசுவரன் நம்மைப்போல எழுந்தருளி வந்த முறைமைசொல்லில், உலகில் உவரிநீர் இரதமான கூர்மையுப்பா கவே வடிவங்கொண்டதைக் காண்கையால் அப்படியேகாண் மாணவ கனே! அருளாலே சிவன் திருமேனிகொண்ட முறைமை என்க. (கூக)

இன்னமும் இவன்சந்தேகந் தீராததுகண்டு, ஆசாரியன் ஆன்மாக்களில் ஒரு வன் அல்லனெனபடியைத் திருட்டாந்தபூர்வகமாக அருளிச்செய்கின்றார்.

86 அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல
தேவனவனாய் நிற்கின்ற தேழா—யவனிதனிற்
றேன்றுமரப் புல்லூரி தோல்லுலகி லம்மரமா
யீன்றிடுமோ சோல்லா யிது.

(இ-ள்.) வாக்குமனதீத கோசரமாயுள்ள சர்வேசுவரன் ஆன்மாக் களைப்போலத் தேகியாய்த்தோன்றினது, சகலரிற் பக்குவரான ஆன்மாக்

களுக்கு அவர்களுடைய சத்திநிபாதத்துக் கீடான சம்ஸ்காரங்களாலே அவர்களுடைய மலமாயை கன்மங்களைப்போக்கித் தனக்குடைமையான பரமாநந்தத்தை அளிக்கைக்குத் தன்னுடைய அருளாலே திருமேனிகொண்டெழுந்தருளி வந்த தொழிந்து, எப்படிப்பட்டவன் எப்படியாய் நிற்பானென்று சொன்னாய் அறிவில்லாதவனே; அஃதென்போலவென்னில், பூமியின்கண்ணே தோன்றினமரமானது, பயன்படுங்காலங்களிலே கைம்மாறு கருதாமல் சிரத்தையுள்ளவர்களுக்குப் பலன்களைக்கொடுத்துச் சந்துஷ்டிபிறப்பியாநிற்கும்; இஃதொழிந்து, இந்தமரந்தாரகமாய் நிற்கின்ற புல்லூரி, மரத்தின் பலத்தைக்கொடுக்கவற்றோ மாணவகனே! இதனைச் சொல்லாய் என்க.

இது திருமேனிகொண் டெழுந்தருளிவந்த ஆசாரியனைச் சிவன்றானென்றே தெளிய அறிவித்தது. (௯௨)

அருளென்பதொன்று வேண்டுமோ சிவமொன்றுமே அமையாதோவென்ற மாணுக்கனைநோக்கி, அந்தச்சிவமும் அருளாலொழிந்து மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதென்று அந்தவருளின் பெருமையை அருளிச்செய்கின்றார்.

87 முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருளேன்னுங்—கத்தியினான்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கு
மேகக் கொடியேழுங்கா ணின்று.

(இ-ள்.) முத்தியைப் பெறுவதற்கு முதலான ஆன்மாவென்பதொரு கொடியிலே, அநாதியே மறைக்கத்தக்க ஆணவமலத்தின் காரியமான அஞ்ஞானமானகொடி வெகுவிதமாகப் படர்ந்து, இதனாலே இதாகிதங்கள் விளைந்து, இதுகாரணமாக மயக்கத்தைச் செய்கின்ற மாயையாலே பூதகாரியமான உடம்பு ஜநநந்தோறும் பலியாநிற்கும். இவை பக்குவப்பட்ட எல்லைகளையறிந்து, தம்பிரானுந் திருமேனிகொண்டெழுந்தருளி வந்து, அருளாலே சமைந்த அநேகதாரைப்பட்ட வாளாலே இந்த வாணவமல மூலத்தின் வேரறுக்க, அப்பொழுது எல்லாமலங்களின் முதலடங்கலுஞ் சோர்ந்துபோய், முத்தியானது வெகுபலமாகப் பலியாநிற்கும். இந்தப்பழக்கத்தினுடைய இரசத்தினாலே சிவமென்றும் ஆன்மாவென்றும் இரண்டல்லாதபடி அப்பொழுதே ஒரு நீர்மையான சுபாவந்தோன்றாநிற்கும் என்க. (௯௩)

இனி இந்தவர்த்தத்தைத் தமக்கருளிச்செய்து தம்மை இரக்ஷித்த ஆசாரியனையும், தீக்கைமுதலாக அவன்செய்தருளிய முறைமையையும் நின்ற ஏழுதிருவெண்பாவாலும் அருளிச்செய்கின்றார்.

91 அகளத்தி லாநந்தத் தாநந்தி யாயே
சகளத்திற் றையலுடன் றேன்றி—நிகளத்தைப்
போக்குவதுஞ் செய்தான்றன் போன்னடியேன் புன்றலைமே
லாக்குவதுஞ் செய்தா னவன்.

(இ-ள்.) அடியேனை ஈடேற்றுகைப்பொருட்டுச் சகளீகரித்த திருமேனியிலே தன்னுடைய காருண்ணிய சத்தியுடனே தோன்றி, குற்ற

மற்ற நிலத்திலுண்டாகிய ஆநந்தத்தில் ஆநந்தியாய்ச் சமைந்தெழுந்த ருளியிருந்து, அநாதியே பிணித்த விலங்காகிய மலமாயை கன்மங்களை அநேக சம்ஸ்காரங்களாலே போக்குவதுஞ் செய்து, தன்னுடைய பொலிவினையுடைத்தாகிய திருவடியை என்னுடைய பொல்லாத் தலையிலே வைப்பதுஞ் செய்தான் ஆசாரியன் என்க.

இது தீக்கைமுறைமையை அறிவித்தது. (கூசு)

92 குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்டனே
னுற்ற தியானத் துடனுறைவர்—முற்றவரின்
மாட்சியுமாய் நிற்பரியான் மற்றேன்றைக் கண்டிடினக்
காட்சியுமாய் நிற்பார் கலந்து.

(இ-ள்.) (ஆசாரியர்) இப்படித் தம்முடைய அருளால் என்னுடைய மலமாயை கன்மங்களைப்போக்கி, என்னுடைய சுதந்திரத்தையும் அறுத்து அடிமைகொண்டு, எனக்கு அநாதியே பிராணனாய் நிற்கின்ற தம்முடைய திருவடிஞானத்தையும் பிரகாசிப்பித்து, யானென்றும் அதுவென்றுஞ் சொல்லுகின்ற வேறுபாட்டையும் அறுத்து, தம்முடைய வசத்திலே ஆக்கிக்கொண்ட அவசரத்திலே நான் தியானிப்பானாய் நிற்கைக்கு வந்து அத்தியானமுந் தாமேயாய் நில்லாநிற்பர். இந்த நிலைமுதிரவருகின்ற ஞேயத்தழுந்தலுந் தாமேயாகாநிற்பர். பிராரத்தத்தாலே நிலைதிரிந்து விசுவந்தோன்றுங் காலத்தும் அந்த விசவந்தோன்றாமல் காண்பானுங் காணப்படும் பொருளுந் தாமேயா யிராநிற்பர் என்க.

இது தீக்கைக்குப்பின்பு உண்மையிலே நிறுத்தின நிலைமையை அறிவித்தது. ()

93 ஆளுடையா னெந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் றொண்டர் தலைக்காவ—ளுளுந்
திருவியலூ ராளுஞ் சிவயோகி யின்றேன்
வருவிசையை மாற்றினான் வந்து.

(இ-ள்.) வந்து ஆளுடையான் - இப்படி எழுந்தருளிவந்து என்னை அரிதாக அடிமைகொள்ளுகையாலே ஆளுடைய தேவனென்கின்ற திருநாமத்தையுமுடையான்,—எம்தரமும் ஆளுடையானே - என்னைப்போலுந் தளர்ந்த அடியாரையும் அடிமைகொள்ளுவானும் அவனே,—அறியும் தாளுடையான் - சர்வான்மாக்களின் பொருட்டும் பஞ்சகிருத்தியங்களையும் நடத்தி இவற்றிலே பக்குவப்பட்ட ஆன்மாக்களை அறிந்திரக்ஷிக்கவல்ல திருவடியுமுடையான்;—தொண்டர் தலைக்காவல் - உரிய அடியாரை மாயப்படை மேலிட்டு வினைசெய்யாது பாதுகாக்கைக்குத் தலைக்காவலாயுள்ளவன்,—நாளுந் திருவியலூர் ஆளுஞ் சிவயோகி - எக்காலமுந் திருவியலூரே திருப்படைவீடாகவுடைய சிவயோகி,—இன்று என் வருவிசையை மாற்றினான் - இப்பொழுது என்னுடைய அஞ்ஞானத்தாலே கன்மபலங் காரணமாக மாயையாகின்ற ஊசலிலே உழலா நிற்கின்ற ஜநநமரணங்களாகிய விசையையொழித்து, அசைவற்ற நிலமாகிய திருவடியிலே வைத்தான் என்க.

இது தம்முடைய ஆசாரியன் திருநாமமும் அவனது மகிமையும் அறிவித்தது.()

94 நூலத் தடுத்த பளிங்கின் றுளக்கமேனத்
நூலத்தே நின்று துளங்காமற்—காலத்தாற்
ருளைத்தந் தேன்பிறவித் தாளை யறவிழித்தார்க்
காளன்றி யேன்மா றதற்கு.

(இ-ள்.) படிகக்கல் தன் பிரகாசத்தைத் தடுத்த வன்னங்களினுடைய ரூபங்களாலே தன்னுடைய சுத்தமான பிரகாசந் தோன்றாமல் அதுவதுவாய் நின்றாற்போல, நானுந் தேகத்திலே பொருந்தி நின்று ஜநநமரணங்களிலே மொத்துண்ணாமல், மலபாகமும் கன்மவொப்புஞ் சத்திநிபாதமும் உண்டான அவசரத்தே, அவதிகூடாமல் எழுந்தருளி வந்து, தம்முடைய பொன்னான திருவடியை என் தலையினும் இருதயத்தினும் நிற்கும்படி தந்தருளி, எனக்கு எழுவகையாய் எண்பத்து நான்குநூறாயிர யோனிபேதங்களில் உண்டான ஜநநங்கள் காலற்றுப் போம்படி திருக்கண்சாத்தியருளின தம்பிரானார்க்குக் கைம்மாறுசெய்ய எண்ணுமளவில், அவன் வேறொன்றுக்குங் குறைவிலன் ஆகையால் என்னை அடிமையாகக் கொடுத்து நான் பரங்கெட்டு விடுவதொழிந்து, வேறொரு கைம்மாறுங் கண்டிலேன் என்க.

இது கைம்மாறு கருதாமல் எழுந்தருளிவந்து இரக்ஷித்த அதிசயம் அறிவித்தது.

95 இக்கணமே முத்தியினை யெய்திடினு மியானினைந்த
வக்கணமே யானந்தந் தந்திடினு—நற்கணத்தார்
நாயகற்கு நாயகிக்கு நானடிமை யெப்போழுது
மாயிருத்த லன்றியிலே னியான்.

(இ-ள்.) பெறுதற்கரிய (சைவசித்தாந்தத்திலே கூறிய சுத்தாத்துவிதப் பேரின்ப) முத்தியினை இக்கணப்பொழுதிலே பெறினும், நான் கருதப்பட்ட பரமானந்தம் கருதின கருத்து மாறுவதன்முன்னே பெறினும், இவை ஒன்றையும் ஆசரிப்பதில்லை. இந்தப்பேற்றை அளிக்கைப் பொருட்டு அடியேனுக்காக (மான் மழு காளகண்டம் திருநேத்திரம் முதலியவைகளை மறைத்து எளியேனைப் போல்) திருமேனிகொண்டெழுந்தருளிவந்த மகாசிவயோகிகளாகிய தம்பிரானார்க்கும் அவருக்கு மனவாக்குக் காயங்களாய் நின்ற பராசத்தியாகிய ஞானசத்திக்கும் நான் எப்பொழுதும் மீளா அடிமையா யிருப்பதொழிந்து, செய்யத் தகுந் தொழில் வேறொன்று மில்லை என்க.

இது பேற்றின் அதிசயத்தால் அடிமை சாதித்ததென அறிக. (கூஅ)

96 என்னை யுடையவன்வந் தேன்னுடனா யென்னளவி
லேன்னையுந்தன் ளாகக் கோள்ளுதலா—லேன்னை
யறியப்பேற் றேனறிந்த வன்பருக்கே யாளாய்ச்
சேறியப்பேற் றேன்குழலிற் சேன்று.

(இ-ள்.) எனக்குக் கர்த்தாவாகிய பரமேசுவரன் என்னுடைய அநாதி மயக்கத்தை நீக்குதற்பொருட்டு என்னைப்போல் எழுந்தருளி

வந்து, உனக்குள்ளே நாம் என்றும் நீங்காமல் பொருந்தி நிற்போமென்று என்னைத்தெளிய அறிவித்தவளவில் அந்தக்கருணையாலே நானும் அப்பொழுதே தம்முடையவசமாய் என்னையும் தாம் விரும்பின அடிமையாகக் கொள்ளுகையால், இப்படித் தம்பிரானார்க்கு மீளா அடிமையாய் அவருக்கே ஆளானேனென்று என்னுடைய உண்மை அறியப்பெற்றேன். இப்படி முன்னே, அறிந்திருக்கின்ற மகருஷிகளாகிய சிவயோகிகளுக்கு ஏவற்பணிசெய்து பெறுதற்கரிய அவர்கள் திரட்சியிலே சென்றிருக்கவும் பெற்றேன். இனி இதற்கு மேற்பட்ட பெரும்பேறு என்ன பெற வேண்டும் என்க.

இது பேற்றாலுண்டான நிஷ்பல வேட்கையென அறிக. (கூகூ)

97 சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் சேரும்வகை
வந்தவனை மண்ணிடைநாம் வாராமற்—றந்தவனை
மாதினுட னேத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதலா
லேதுசோலி வாழ்த்துவே னின்று.

(இ-ள்.) அழகிலே மேம்பட்ட தன்னுடைய திருவடியானது என்னுடைய பொல்லாப் புழுத்தலையினும் இருதயத்தினும் பொருந்தும்படி என்னைப்போல் திருமேனிகொண்டெழுந்தருளிவந்த தம்பிரானை, பூமியின்கண்ணே நான் பிறந்திறந்து மயங்கித் திரியாதபடி பரமானந்தத்தைக் கைம்மாறுகருதாமல் அளித்தவனை, எப்பொழுதும் அவன் புகழை எடுத்து வாழ்த்துமளவில் எல்லைப்படா தாகையால், தன்னைவிட்டு நீங்காத எம்பெருமாட்டியாராகிய ஞானசத்தியுடனே எவ்விடத்தும் வாழ்ந்திருக்கவென்று சொல்லுவ தல்லால் அந்த ஞானசொரூபனாகிய எம்பெருமானை என்சொல்லி எப்படி வாழ்த்துவேன் என்க.

இது சிவனைக் கூடப்பெற்றவர்கள் உரையுணர்விறந்து நின்று அநுபவிக்குமதொழிந்து, அவனுடைய வுண்மையறிந்து துதிக்கவெண்ணுமளவில், அவன் உரையுணர்வுக்கெட்டாதவனென்று அறிவித்தது. (க00)

திருக்களிற்றுப்படியார்முற்றியது.

உய்யவந்ததேவர்திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.